சமரஸ முயற்சி

தற்கால இராஜீயக் கிளர்ச்சியினின்றும் நாட்டில் சமரஸம் நிலவுவதற்கு முயற்சித்த ஸ்ரீமான் ஜயகர், ஸர். டி. பி. ஸாப்ரு இவர்கள் தூது சென்ற விபரம்.

அமிர்தம் அண்டு கோ.,

மதராஸ்.

விலை அணா 12.

Parvathi De

சமரஸ முயற்சி

Published by [illegible] …mintam
& Co. and Copies can be had of :—

[illegible]

PEACE MOVE
AND
RESULT

சமரஸ முயற்சி

தற்கால இராஜீயக் கிளர்ச்சியினின்றும் நாட்டில்
சமரஸம் நிலவுவதற்கு முயற்சித்த ஸ்ரீமான்
ஜயகர், ஸர். டி. பி. ஸாப்ரு இவர்கள்
தூது சென்ற விபரம்.

AMRITAM & Co.,
P. O. BOX 222 :: :: MADRAS.

சமரஸ முயற்சி

காங்கிரஸ் மகா சபை தோன்றிய நாள் முதலாய், அதாவது நாற்பதுக்கதிகமான வருடக்கணக்காய், இந்தியா சுதந்தரத்தை அடையவேண்டி உழைத்து வந்ததில் சென்ற 1928, 1929 இவ்விருவருடங்களில் கூடியது அதி முக்கியமானவையாகும்.

1928-ல் கூடிய மகாசபையில் தேசத்துக்கு உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்த பண்டித மோதி லால் நேரு தலைமை வகித்தார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக் குட்பட்ட ஸ்வராஜ்யத்துக்கு தீர்மானங்கள் தயாரிக்கப் பட்டன. ஆனால் பண்டித மோதிலாலுடைய ஏக புத்திர னும் மிகுந்த தேசபக்திகொண்ட பண்டித ஜவஹரிலால் பூரண ஸ்வராஜ்யத்துக்கான தீர்மானம் கொண்டுவர வேண்டி முயற்சித்தார். தந்தைக்கும் குமரனுக்கும் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதத்தை ஒருவாறு தீர்க்க வேண்டி, மகாத்மா காந்தி திருத்தப் பிரேரணையொன்றைத் தயாரித்து, அதில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு ஒரு வருஷம் கெடு கொடுப்பதாயும், அதற்குள் சர்வகட்சி மகா நாட்டு கமிட்டி யாதாஸ்தை அங்கீகரித்து குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் கொடுக்குமாறு தீர்மானித்து சபை யோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. இது இவ்வாறிருக்க, இந்தியா வுக்கு ஸ்வராஜ்யம் வழங்கும்வகையில் முதற்படியான சில

ஓட்டு சுதந்தரம், சட்டசபை சில வருஷங்களாக நடை பெற்று வருவதை பரிசிலனை செய்யும்பொருட்டு இராயல் கமிஷன் என்னும் சைமன் கமிஷனை நியமித்தார்கள். கமிஷனில் இந்தியாவிலுள்ள ஒருவரையேனும் சேர்க்காத தாலும், இன்னும் வேறு காரணங்கொண்டும், சைமன் கமிஷனை முற்றிலும் பஹிஷ்கரிக்கத் தீர்மானித்து, அதன் படியே நடத்தினார்கள்.

லண்டனில் சர்வகட்சி மகாநாடு கூடப்போவதாயும், அதில் இந்தியாவுக்கு சுதந்தரம் வழங்குவதற்கு அடிப் படையான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இது விஷயமாக மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, ஜனப் ஜின்னா முதலிய தலைவர் கள், 1929 டிசம்பர்மீ புதிய டில்லியில்கூடி ஆலோசித் தார்கள்.

இந்தக் கூட்டத்தில் எல்லாக் கக்ஷியினரும் ஒற்றுமை யாக விருந்தார்கள். லண்டன் சர்வகட்சி மகாநாட்டுக்குப் போவதைபற்றி ஒரு முடிவு செய்திருந்தனர். இந்தியாவுக் குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை இந்தியாவில் ஏற்படுத் துவதை அஸ்திவாரமாகக்கொண்டே சர்வகட்சி மகாநாட் டில் விவாதத்தை நடத்தவேண்டுமென்ற விஷயமாக, இராஜப்பிரதிநிதியிடம் சம்பாஷணை சுமார் 4 மணிநேரம் நடைபெற்றது. ஆனால் சாதகமான வழியில் முடியாமல் முறிந்துவிட்டது. குடியேற்ற நாட்டு அந்தஸ்து நிபந்தனை அங்கீகரிக்கப்படாத காரணத்தை, சர்க்கார் ஒரு அறிக்கை யும் வெளியிட்டனர்.

1929-ம் வருஷக் காங்கிரஸ் மகாசபை லாகூரில் பண்டித ஜவஹர்லால் தலைமையின்கீழ் நடைபெற்றது.

ஒரு சிறிதும் தன்னலமற்ற தலைவர் என்ற பதவியில் அவர் செய்த பிரசங்கம் இந்திய மக்களின் கவனத்தைப்பற்றியது. பிரசங்க முழுதும் பூரா ஸ்வாதீனமே நம்முடைய லட்சிய மாக இருக்கவேண்டுமென்ற கருத்தே நடுநாயகமாய் விளங்கியது.

கல்கத்தா காங்கிரஸ் தீர்மானம் செய்தபடி, சர்வ கட்சி திட்டத்தை அங்கீகரிப்பதற்கு ஒரு வருடம் கெடு கொடுக்கப்பட்டதானது முடிந்துவிட்டது. அந்த தீர் மானத்தின் பலனாக லாகூர் காங்கிரஸ் சுயேச்சையை ஆத ரித்து, அதைப் பெறுவதற்கு அவசியமான ஆதரவைப் பெறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சுயேச்சையை உத்தேசித்து இனி எவ்விதம் நடந்துகொள்ளவேண்டு மென்பதுபற்றி அநேக தீர்மானங்கள் காங்கிரஸ் காரிய கமிட்டியால் தீர்மானிக்கப்பட்டன. சட்டசபை பஹிஷ் காரமும் சட்டத்தை மறுத்தலும் ஆகிய இவ்விரண்டும் அவைகளில் முக்கியமானவையாகும்.

மகாத்மா காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம் பிக்குமுன் இராஜப்பிரதிநிதிக்கு கீழ்க்கண்ட இறுதிக்கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினர்.

இராஜப்பிரதிநிதிக்கு மகாத்மாவின் இறுதிக் கடிதம்.

ஆமாபாத், 1930 மார்ச், 7.

பிரியமுள்ள நண்பரே; சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து அதனால் உண்டாகக்கூடிய அபாயங்களை மேற் கொள்ள நான் இவ்வளவு வருஷகாலமாக அச்சங்கொண்டு

தயங்கி வந்தேன். தற்பொழுது அவ்வியக்கத்திலிறங்கி அதனுல் நேரிடக் கூடிய அபாயங்களை மேற்கொள்ளு முன்பு நான் தங்களை அணுகி இங்கிலேயிலிருந்து வெளிப் பட வழியைக் கண்டுபிடிக்கக் கூடுமா என்று பார்க்க விரும்புகின்றேன். என்னுடைய சொந்த நம்பிக்கை முற்றி லும் தெளிவாக இருக்கின்றது. எனக்கும் என்னை சேர்ந்த வர்களுக்கும் மிகுந்த தீங்கிழைத்து வரக்கூடியனவாக இருந்தபோதிலும் நான் எந்த ஜீவனும் அதிலும் முக்கிய மாக மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நான் தெரிந்து தீங்கெதுவும் செய்ய முடியாதவனுக இருக்கின் றேன். இதனுல் நான் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சி யை ஒரு சாபக்கேடாகக் கருதியபோதிலும் நான் ஆங்கி லேயர் எவருக்கும் அல்லது இந்தியாவில் அவர்களுக்கு நியாயமான முறையிலிருக்கும் எந்த சொத்து சுதந்திரத் திற்கும் தீங்கு செய்ய உத்தேசிக்கவில்லை. என்னைப் பற்றித் தப்பு அர்த்தங் கொள்ளக்கூடாது. இந்தியாவில் பிரிட்டிஷார் ஆளுவதை நான் சாபக்கேடாகக் கருதிய போதிலும் நான் பொதுவாக ஆங்கிலேயர் உலகிலுள்ள மற்றெந்த ஜாதியாரையும்விட கேவலமானவர்கள் என்று கருதவில்லை. ஆங்கிலேயரில் பலரை எனது அத்தியந்த நண்பர்களெனக் கூறிக்கொள்ளும் பாக்கியம் எனக்கு இருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் கேடுகளைப்பற்றி நான் தெரிந்துகொண்டு இருப்பனவற்றில் பெரும்பாகம் பிரிட் டிஷ் ஆட்சியின் விரும்பத்தகாத அம்சங்களை உள்ளது உள்ளவாறு சொல்லத் தயங்காது வெளிப்படையாகவும் தைரியமாகவும் ஆங்கிலேயர்கள் எழுதியுள்ள கிரந்தங் களிலிருந்து தெரிந்துகொண்டனவே யாகும்.

பிரிட்டிஷ் ஆட்சியை நான் சாபக்கேடாக கருது வதன் காரணம் என்ன என்று கேட்கலாம்?

இந்தியாவின் செல்வத்தை மென்மேலும் சுரண்டிச் செல்லும் முறையாலும் தேசத்தால் ஒருக்காலும் தாங்க முடியாததாயுள்ள பெரும் செலவுடன்கூடிய ராணுவ சிவில் நிர்வாக முறைகளாலும் பிரிட்டிஷ் ஆட்சி வாயில்லாப் பூச்சிகளைப் போலிருக்கும் கோடிக்கணக்கான ஜனங்களை எளியவர்களாக்கி விட்டது. பிரிட்டிஷ் ஆட்சியானது ராஜீயத் துறையில் ஜனங்களை அடிமைகளாக்கிவிட்டது. அது எங்கள் கலைகள் நாகரிகம் இவற்றின் ஜீவிய சத்தை உறிஞ்சி விட்டது. நிராயுதபாணிகளாக்கும் முறையால் இது எங்களை பாரமார்த்திகத் துறையில் தாழ்வடையச் செய்துவிட்டது. ஆத்ம பலம் இல்லாததினால் எல்லாவித மான முறைகளாலும் நாங்கள் கோழைத்தனமாய் நிர்க் கதியும் வாய்ந்த ஸ்திதிக்குக் கொண்டுவரப்பட்டிருக் கிறோம்.

என்னுடைய தேசத்தினரில் இன்னும் பலரைப்போல் நானும் உத்தேச ஸர்வகட்சி மகாநாடு ஒரு வழியை அளிக்கலாமென்று அதிக ஆவலுடன் நம்பிக்கை கொண் டிருந்தேன். ஆனால் நீங்களோ பிரிட்டிஷ் மந்திரி சபையோ பூரண குடியேற்ற நாட்டந்தஸ்து திட்டமொன்றை ஆத ரிப்பதாகக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதென்று நீங் கள் வியக்தமாகத் தெரிவித்த பிறகு வாயுள்ள இந்தியர் கள் தெரிந்தும், வாயில்லாதகோடிக் கணக்கானவர்கள் அறியாமலும் கொண்டுள்ள தாகத்தைத் தணிக்க ஸர்வ கட்சி மகாநாடு பயன்படாதென்று ஏற்பட்டுவிட்டது. பார்லிமெண்டு என்ன முடிவு கூறுமென்று முன்னதாகக்

கூற முடியாதென்ற பேச்சே ஏற்படவில்லை எனக் கூறத் தேவையில்லை. அதற்கு முன் பார்லிமெண்டின் அனுமதியை எதிர்ப்பார்த்து பிரிட்டிஷ் மந்திரி சபை முன்னதாகவே ஒரு குறிப்பிட்ட கொள்கையை அனுஷ்டிப்பதாக வாக்குறுதி யளித்திருப்பதற்கு உதாரணங்களில்லாமலில்லை.

டில்லி மகாநாடு பலனளிக்கத் தவறிப்போய்விட்டதால் 1928-ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் நிறைவேற்றிய உறுதியான தீர்மானத்தை நடத்திவைக்க ஏற்பாடு செய்வதைத் தவிரப் பண்டித மோதிலால் நேருவுக்கும் எனக்கும் வேறு வழியில்லை. உங்களுடைய அறிக்கையில் குடியேற்ற நாட்டந்தஸ்து என்றபதம் அதற்கு அங்கீகரிக்கப்பட்ட பொருளுடன் உபயோகிக்கப்பட்டிருந்தால் சுயேச்சைத் தீர்மானம் பீதியை உண்டுபண்ண வேண்டியதில்லை. ஏனெனில் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அனுபவத்தில் சுயேச்சையே என்று பொறுப்பு வாய்ந்த பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளால் ஒப்புக் கொள்ளப் படவில்லையா? அப்படிப்பட்ட குடியேற்ற நாட்டந்தஸ்தை இந்தியாவுக்குக் கூடிய சீக்கிரத்தில் அளிக்க ஒரு சமயத்திலும் உத்தேசிக்கப்படவில்லை யென்றுதான் நான் பயப்படுகிறேன். அந்த அறிக்கைக்குப்பின் நடந்த பல சம்பவங்கள் பிரிட்டிஷ் கொள்கையின் போக்கைச் சந்தேகமறத் தெரிவிக்கின்றன. பிரிட்டிஷார் இந்தியாவுடன் நடத்தும் வியாபாரத்தை பாதிக்கக்கூடியதாகவோ பிரிட்டன் இந்தியாவுடன் நடத்தும் விஷயங்களைப் பக்ஷபாதமின்றி நெருங்கி ஆராயுமாறு செய்வதாகவோ உள்ள கொள்கை எதையும் அனுஷ்டிக்கப்பொறுப்பு வாய்ந்த பிரிட்டிஷ்

ராஜதந்திரிகள் உத்தேசிக்கவில்லை யென்பது வெட்ட வெளிச்சமாக விருக்கிறது.

இவ்விதம் இந்தியாவைச் சுரண்டிக் கொண்டு போவதைத் தடுப்பதற்கு எதையும் செய்யாவிடின், இந்தியாவானது அதி துரிதமாகக் கசக்கிப் பிழியப்பட்டுவிடும். 18-பென்ஸ் பரிவர்த்தனை விகிதம் தீர்ந்துபோன விஷயமென்று பொக்கிஷ மெம்பர் கருதுகிறார். பேனா முனையில் செய்துவிட்ட இந்த ஒரு காரியமானது இந்தியாவுக்குப் பல கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்படும்படி செய்துவிடுகிறது. தீர்ந்துபோன தெனக் கருதப்படும் இவ்விஷயம் தீர்ந்துபோனதில்லை யென்று செய்து விடுவதற்காக சாந்தமான வழியில் நேரடியான காரியங்களைச் செய்வதற்கு முயற்சி செய்யப்படுகையில் இந்தியாவைத் தூளாக்கிவரும் சட்ட பரிபாலத்தின் பெயரால் இந்த இயக்கத்தை நசுக்கி விடுவதற்கு உதவிபுரிய வேண்டுமென்று பெரிய நிலச்சுவான்தார்களை நீங்களே வேண்டிக் கொள்ளுகிறீர்கள்.

வாயில்லாப் பூச்சிகளைப் போன்றிருக்கும் உழைப்பாளிகளான கோடிக் கணக்கான ஜனங்களுக்காகத்தான் சுயேச்சை கோரப்படுகிறது. அவர்களுக்காகவே இதைப் பெறவேண்டியிருக்கிறது. தேசத்தின் பெயரால் உழைக்கின்றவர்கள் எல்லோருடைய முன்னிலையிலும் இந்தச் சுயேச்சை தாகத்தின் நோக்கத்தை எடுத்துக் காட்டிக் கொண்டே இராவிட்டால் நமக்குச் சுயேச்சை கிடைத்தாலும் அது உழைப்பாளிகளான கோடிக் கணக்கான ஜனங்களுக்கு எவ்விதத்திலும் பயன்படாத முறையில் மாறி வரக்கூடும். இக்காரணத்தை முன்னிட்டுத்தான் பொது

ஜனங்களுக்குச் சுயேச்சையின் உண்மைப்பொருள் எப்படி இருக்கவேண்டுமென்பதை நான் கூறி வருகின்றேன். தங்களிடத்தில் சில பொருத்தமான விஷயங்களை நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

வருவாயில் பெரும்பாகம் நில வரியால் கிடைக்கின்றது. இது மிக்க அதிகமானதாக இருப்பதால் ஜனங்களால் தாங்கமுடியாத பளுவை உண்டாக்குகின்றது. சுயேச்சை வாய்ந்த இந்தியாவில் நிலவரி விகிதமானது வெகுவாக மாற்றப்படவேண்டியிருக்கும். வீணாக போற்றப்படும் சாசுவதப் பைசல் முறைகூடச் சில பணக்கார ஜமீன்தார்களுக்கே அனுகூலமுண்டாக்குகிறது. ரயத்துக்களுக்கு அது அனுகூலமுண்டாக்கவில்லை. ரயத்துகள் முன்போல் சதா நிர்க்கதியானவர்களாக இருந்து வருகின்றார்கள். அவர் நிலச்சுவான்தாரது இஷ்டத்தின் காரணமாக வெறும் குடியாகவே இருந்து வருகிறார். சுய ஆட்சி வந்தால் நிலவரியை வெகுவாகக் குறைக்கவேண்டி யிருப்பது மட்டுமல்ல ரயத்துகளின் நன்மையையே முக்கிய நோக்கமாகக் கொள்ளும்படி ரெவின்யூ முறையை அடியோடு திருத்தியும் அமைக்கவேண்டியிருக்கும். ஆனால் பிரிட்டிஷ் நிலவரி முறையோ ரயத்தை நசுக்கி அவனது உயிரைப் பிழிந்துவிடும்படி அமைக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. ரயத்து உயிர் வாழ்வதற்கு உபயோகிக்கவேண்டிய உப்புக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த வரியானது அவனுக்கே பாரம் அதிகமாக விழும்படி அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஈவிரக்கமில்லாமலும் பக்ஷபாதமில்லாமலும் இவ் வரி விதிக்கப்பட்டிருப்பதால் இது எளியவர்களுக்கு இன்னும்

அதிக பளுவை உண்டாக்குகின்றது தெரியும். பணக்காரரை விட எளியவரே அதிகமாக உப்பை உண்ணவேண்டியிருப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இது நன்கு விளங்கும். தனித்தனியாக நபர்களைக்கொண்டு பார்த்தாலும் சரி, மொத்தமாக எடுத்துக்கொண்டு பார்த்தாலும் சரி இந்த உண்மை விளங்கும்.

மதுபானம் லாகிரி வஸ்துக்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வரிப்பணமும் ஏழைகளிடமிருந்து பெறப்படும் வருமானமாகும். இது அவர்களது சரீர ஆரோக்கியத்தையும் ஒழுக்கங்களையும் அடியோடு போக்கிவிடுகின்றது. இந்த வரியானது தனிப்பட்ட நபர்களுக்குச் சுதந்தரமிருக்கவேண்டுமென்ற பொய்யான வாதத்தைக்கொண்டு நியாயமானதெனக் கூறப்படுகின்றது. உண்மையில் இது வருமானத்திற்காகவே விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றது. 1919-ம் வருஷத்திய சீர்திருத்தங்களின் கர்த்தாக்கள் அதியுக்திசாலிகள். அவர்கள் ஆரம்ப முதலே நன்மை செய்யச் சக்தியற்றவர்களாக மந்திரிகளைச் செய்வதற்காக மதுவிலக்குப் பொறுப்பை இரட்டை ஆட்சி முறையில் ஜனங்களுக்குப் பொறுப்பானதெனக் கூறப்படும் பகுதிக்கு இந்த வரியை மாற்றிவிட்டனர். துர் அதிர்ஷ்டம் வாய்ந்த மந்திரி இந்த வரியை நீக்கிவிட்டால் அவர் கல்விக்குப் பணமே கொடுக்க முடியாமல் போய்விடும். ஏனெனில், தற்கால நிலைமையில் கலால் வருமானத்திற்குப் பதிலாக வேறு வருமானத்தைத் தேடிக்கொள்ள அவருக்குப் புதிய வழி எதுவும் கிடையாது. மேலிருந்து எளியவர்களை வரிப் பளு நசுக்குகின்றதுடன் உப கைத்தொழிலான கைராட்டினத்தில் நூல் நூற்கும் தொழிலை நாசம்

செய்துவிட்டதால் செல்வத்தை உற்பத்திசெய்யும் சக்தி அவர்களுக்குக் குறைந்துவிட்டது.

இந்தியாவின் கடன்கள்.

இந்தியாவின் பெயரால் வாங்கப்பட்டுள்ள கடன்களைப்பற்றிப் பிரஸ்தாபம் செய்யாவிட்டால் இந்தியாவின் நாசத்தைப்பற்றிய விருத்தாந்தம் பூர்த்தியாகாது. இக்கடனைப்பற்றிப் பொது ஜனங்களிடையிலும் பத்திரிகைகளிலும் போதிய பிரஸ்தாபஞ் செய்யப்பட்டிருக்கிறது. சுயேச்சை வாய்ந்த இந்தியா இக்கடன்களை யெல்லாம் பக்ஷபாதமற்ற விசாரணைச் சபையைக்கொண்டு மிக்க கண்டிப்பான முறையில் பரிசீலனை செய்து அதனால் அநீதமானதெனத் தீர்ப்புக் கூறப்படும். கடன்களைக் கொடுக்க மறுக்கவும் கடமைப்பட்டிருக்கிறது. அந்நிய நிர்வாகத்தை நடத்துவதற்காக மேலே காட்டியதுபோன்ற அநீதங்கள் செய்யப்பட்டு வரப்படுகின்றன. இந்தியாவின் நிர்வாகம் உலகில் மிக்க செலவுள்ளதென்பது வெளிப்படை. உதாரணமாகத் தங்களுடைய சம்பளத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். மாதம் 21,000 ரூபாய்க்குமேல் தங்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. இது தவிர பலநேர் மறைவான முறைகளிலும் தங்களுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது. பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு வருஷம் 5000 பவுன் சம்பளம் கொடுக்கப்படுகிறது. தற்போதைய நாணய மாற்று விகிதத்தின்படி அவருக்கு மாதம் சுமார் 5,400 ரூபாய்க்குமேல் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்தியரின் சராசரியான தினசரி வருவாய் 2 அணுவிற்கும் குறைவாக இருக்கிறது. தாங்களோ தினம் 700 ரூபாய்க்கு

மேல் சம்பளமாகப் பெற்று வருகின்றீர்கள். பிரிட்டனில் உள்ளவர்களின் சராசரியான தினசரி வருவாய் சுமார் 2 ரூபாயாகும். அங்கு பிரதம மந்திரியோ எனில் தினம் 180 ரூபாய்தான் சம்பளமாகப் பெற்று வருகிறார். இதன் மூலம் தாங்கள் இந்தியரின் சராசரி வருவாயைப்போல் 5000 மடங்குக்கு அதிகமான தொகையைப் பெற்று வருகின்றீர்கள். பிரிட்டிஷ் பிரதம மந்திரியோ எனில் பிரட்டனின் சராசரி வருவாயைப்போல 90 மடங்குள்ள தொகையையே சம்பளமாகப் பெற்று வருகிறார். இந்த விசித்திரமான நிலையை குறித்துச் சிந்தனைசெய்து பார்க்கும்படி நான் முழந்தாளிட்டுக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இவ்வருந்தத்தக்க உண்மையைத் தங்களுடைய மனதில் நன்கு பதியவைப்பதற்காகத் தங்களையே தங்களுக்கு உதாரணமாகக் காட்டியிருக்கின்றேன். தங்களிடம் எனக்கு விசேஷ மதிப்புண்டு. இதனால் நான் தங்களுடைய மனதைப் புண்படுத்த விரும்புகின்றவனல்ல. தங்களுக்குக் கிடைக்கும் சம்பளம் தங்களுக்குத் தேவையில்லை என்பது எனக்குத் தெரியும். தங்களுடைய சம்பளம் முழுவதும் தர்மத்திற்குச் செலவாகலாம். ஆனால் இம்மாதிரியான ஏற்பாட்டிற்கு வகை செய்த முறை உடனே ரத்துசெய்யத் தகுதியுடையதாகும். இராஜப்பிரதிநிதியின் சம்பளத்தைப் பற்றிச் சொல்லுவதெல்லாம் நிர்வாகமனைத்திற்கும் பொதுவாகப் பொருந்தும். இதனால் வருமானத்தைத் திடீரெனக் குறைப்பது நிர்வாகச் செலவையும் திடீரெனக் குறைப்பதைப் பொருத்திருக்கிறது. இதைச் செய்வதனால் கவர்ன்மெண்ட் முறையை மாற்றியமைக்க வேண்டியிருக்கும். சுயேச்சை இல்லாமல் இம்மாறுதலைச் செய்யமுடியாது.

இதனால்தான் லக்ஷக்கணக்காக கிராமவாசிகள் தாங்களாகவே ஜனவரி 26-ந் தேதியன்று நடந்த சுயேச்சை தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர் என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன். அவர்களுக்குச் சுயேச்சை என்றால் அவர்களை நசுக்கிக்கொன்று வரும் பாரத்திலிருந்து விடுதலைபெறுதல் என்று அர்த்தமாகும். இந்தியாவிலுள்ள பொதுஜன அபிப்பிராயம் ஏகமனதுடன் எதிர்த்த போதிலும் பிரிட்டன் தினந்தோறும் இந்தியாவில் அடித்துவரும் கொள்ளையை விட்டுவிட பெரிய பிரிட்டிஷ் ராஜீயக் கைதிகள் எதுவும் தயாராக இல்லை என்று எனக்குத் தோன்றுகின்றது. இந்தியாவிலுள்ளவர்கள் ஒருமித்த ஜாதியாராக வாழ்வதானால், பட்டினி மூலம் இந்தியாவின் ஜனங்கள் கொஞ்சங் கொஞ்சமாக மடிவது தடுக்கப்படவேண்டுமானால் உடனே உபயோகப்படக்கூடிய பரிகாரத்தை கண்டுபிடிக்க வேண்டும். உத்தேச மகாநாடு ஓர் பரிகாரமாகாது. இது வாதமூலம் மனதைத் திருப்தி செய்விக்கக்கூடிய விஷயமல்ல. இது நம்பிக்கை இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி 2 தரப்பு சக்தியையும் கவனிப்பதற்கான சாதனமே யாகும். ஏனெனில் கிரேட் பிரிட்டன் தனது சக்தியை எல்லாம் கொண்டு தனது இந்திய வியாபாரத்தையும் நலத்தையும் பாதுகாக்க முயலும். இதனால் இந்தியாவும் தன்னை யமனுடைய ஆலிங்கனத்திலிருந்தும் (அதாவது மரணாவஸ்தையிலிருந்தும்) விடுவித்துக் கொள்ளுவதற்குப் போதிய சக்தியை உற்பத்தி செய்து கொள்ளவேண்டி யிருக்கும். பலாத்கார கோஷ்டி தற்சமயம் எவ்வளவு கட்டுப்பாடற்றதாயும் முக்கியமற்றதாயு மிருந்தபோதிலும் அக்கட்சி வலு

வடைந்து தனது சக்தியைப் பிறர் உணரும்படி செய்து வருகின்றது என்பது யாவருமறிந்த விஷயமாகும். அதன் இலக்ஷியமும் எனது இலக்ஷியத்தைப் போன்றதே யாகும். ஆனால் அம்முறையானது வாயில்லாப்பூச்சிகளாக இருக்கும் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு நாம் விரும்பும் கஷ்ட நிவாரணத்தை யளிக்காதென்று நான் மனப் பூர்வமாக நம்புகின்றேன். கலப்பற்ற அஹிம்ஸா தர்மம் தவிர மற்றெதுவும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் கட்டுப்பாடுடன் கூடிய பலாத்காரத்தைத் தாக்க இயலாதென்ற நம்பிக்கை எனக்கு மேன்மேலும் அதிகரித்து வருகின்றது. பலர் அஹிம்சாதர்மம் தீவிர மான சக்தி யாகாதென நினைக்கின்றனர். எனது அனு பவம் சொற்பம்தான். இப்படி இருந்தபோதிலும் அது முக்கிய தீவிரமான சக்தியாக இருக்கக் கூடுமென்று எனது அனுபவம் காட்டுகின்றது. பிரிட்டிஷ் கவர்ன் மெண்டின் கட்டுப்பாடான பலாத்காரமான சக்தியையும் இந்நாட்டில் விருத்தியடைந்து வருகின்ற பலாத்கார கோஷ்டியின் கட்டுப்பாடுகளற்ற பலாத்கார சக்தியையும் சேர்த்து எதிர்த்து நிற்கும்படி அஹிம்சாதர்ம சக்தி யைக் கிளப்ப வேண்டுவது எனது நோக்கமாகும். சும்மா விருந்தால் நான் மேலே குறிப்பிட்ட 2 பலாத்கார சக்திக் கும் ஆதிக்க மளிப்பதற்கு ஒப்பாகும். எனக்கு அஹிம்சா தர்மத்தின் சக்தியிலும் திறமையிலும் அசைக்கமுடியாத படி அளவுகடந்த நம்பிக்கை இருப்பதால் நான் இனி காத்துக்கொண்டிருப்பது பாவமாகும். இந்த அஹிம்சா தர்மமானது சட்டமறுப்பு மூலம் கையாண்டு காட்டப் படும். தற்சமயம் சத்தியாக்ரஹ ஆச்சிரம வாசிகளே

சட்டமறுப்பு செய்வார்கள். ஆனால் இது இறுதியில் இந்த இயக்கத்தில் சேர உத்தேசித் திருக்கின்றவர்களை எல்லாம் இதில் சேர அனுமதிக்கும்படியான முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. அஹிம்சா தர்மப் போராட் டத்தில் இறங்குவதா 'பைத்தியக்காரத்தனமான அபா யங்கள்' என்று சற்று நியாயமாக வருணிக்கக்கூடியவர்க் குள்ளாக வேண்டியிருக்கு மென்பது எனக்குத் தெரியும். ஆனால் சத்தியத்தின் வெற்றிகள் அபாயங்களில்லாமல் பெறப்படவில்லை. தன்னைவிட ஜனத்தொகையில் பெரிய தானதாயும் மிக்க புராதனமானதாயும் தன்னைவிட வித் தைப் பயிற்சியில் குறைவானதாயு மிருக்கும் ஒரு தேசத் தாரை தெரிந்தோ தெரியாமலோ வியாபார மூலம் ஏமாற்றி வரும் ஒரு ஜாதியாரை மாற்றுவதற்காக எவ் வளவு அபாயத்தை வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம். நான் 'மாற்றுவதற்காக' என்ற பதத்தை அதன்பொருளை உணர்ந்து வேண்டுமென்றே உபயோகித்திருக்கின்றேன். ஏனெனில் அஹிம்சா தர்மத்தின் மூலம் பிரிட்டிஷாரை மாற்றி அவர்கள் இந்தியாவிற்குச் செய்த தீங்கை உணரும் படி செய்வதே எனது நோக்கமாகும்.

மகாநாட்டிற்கு முன்பு கேடுகளை நீக்கவேண்டிய அவசியம்.

நான் உங்களவர்களுக்கு அதாவது பிரிட்டிஷாருக் குத் தீங்கு விளைவிக்க விரும்பவில்லை. நான் எனது தேசத் தவருக்குச் சேவை செய்ய விரும்புவதைப் போலவே உங் களுடைய தேசத்தாருக்கும் சேவை செய்ய விரும்புகின் றேன். நான் பிரிட்டிஷாருக்கு 1919-ம் வருஷம் வரையில் கண்மூடித்தனமாகச் சேவை செய்திருக்கின்றேன். ஆனால்

என் கண்கள் திறக்கப்பட்டன. நான் ஒத்துழையாமை யோசனையைக் கொண்டேன். அப்பொழுதும் அவர்களுக்குச் சேவை செய்யும் நோக்கமே கொண்டேன். எனது குடும்பத்தில் என்னால் மிக்க நேசிக்கப்படுகின்றவர்களாக வுள்ளவர்களிடம் நான் எந்த சாதனத்தை ஆயுதமாக உபயோகித்து வெற்றியடைந்து வந்திருக்கின்றேனோ அதே ஆயுதத்தை நான் உபயோகித்தேன். எனது தேசத்தவரைப்போலவே தங்களுடைய ஜனங்களிடமும் எனக்கு சமத்துவமான அன்பு இருந்தால் அந்த அன்பு நெடுங்காலம் மறைந்து கிடக்க முடியாது. எனது குடும்பத்தார் என்னைப் பல வருஷங்கள் சோதித்துப் பார்த்தபின்பு தங்களை நான் நேசிப்பதை எப்படி ஒப்புக்கொண்டார்களோ அப்படியே பிரிட்டிஷாரும் தங்களிடம் எனக்கு உள்ள அன்பை உணர்ந்து ஏற்றுக்கொள்ளுவார்கள். ஜனங்கள் நான் எதிர்பார்க்கின்றபடி என்னுடன் சேருவார்கள் என்று நம்புகின்றேன். பிரிட்டிஷார் சீக்கிரம் பின்வாங்காவிட்டால் அவர்கள் படும் கஷ்டம் கல்நெஞ்சையும் கரைக்கப் போதியதாக இருக்கும். நான் உதாரணமாக எடுத்துக்காட்டியது போன்ற கேடுகளைப் போக்க சட்டமறுப்பு இயக்கம் முயலும்.

பிரிட்டிஷ் சம்பந்தத்தை நீக்க விரும்புவதேன்?

நாங்கள் பிரிட்டிஷ் சம்பந்தத்தைப் போக்கிக்கொள்ள விரும்புவதற்குரிய காரணமென்னவெனில் இத்தகைய கேடுகள் நீக்கப்பட்டால் சிநேக பாவத்துடன்கூடிய ராஜிப் பேச்சுக்கான வழி திறக்கப்படும் என்பதுதான். இந்தியாவுடன் பிரிட்டிஷார் செய்யும் வியாபாரத்திலிருந்து

வரும் பேராசைக் குணத்தை நீக்கிவிட்டால் எங்களது சுயேச்சையை அங்கிகரிப்பதில் உங்களுக்கு கஷ்டமே இராது. அந்தக் கேடுகளை உடனே நீக்கி அதன் மூலம் மானிட வர்க்கத்தின் பொதுநலத்தை வலிய முறையிலுள்ள சகோதரத்துவமான நிலைமையிலிருந்து இருதரத்தாரும் தேடக்கூடிய உண்மையான மகா நாட்டிற்குள்ள வழியை உண்டாக்கும்படி தங்களை வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இம் மகாநாட்டில் இருதரத்தாரும் வியாபாரத்தைத் தங்களுக்கு ஏற்றமுறையில் அமைத்துக் கொள்ளுவதையும் பரஸ்பரம் உதவிசெய்துகொள்ளுவதையுமே நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

உப்பு வரி மிக்க அநீதமானது.

இந்த நாட்டை துர் அதிர்ஷ்ட வசமாக வகுப்புப் பிரச்சினைகள் பாதிக்கின்றன. தாங்கள் அனுவசியமாக வகுப்புப் பிரச்சினைகளை வற்புறுத்தி இருக்கின்றீர்கள். எவ்விதமான ஆட்சிமுறைத் திட்டத்தைப்பற்றிய ஆலோசனைக்கும் இது முக்கியமென்பதில் ஐயமில்லை. அதற்கும் எல்லா சமூகங்களையும் ஒன்றாகப் பாதிக்கக்கூடிய பெரிய பிரச்சினைகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இந்தக் கேடுகளைப் போக்கத் தாங்கள் முன்வராவிட்டால், எனது கடிதம் தங்களுடைய மனதிற் படாவிட்டால் இம்மாதம் 11-ந்தேதி எனது ஆச்சிரமத்திலிருந்து என்னால் அழைத்துச் செல்லக்கூடிய சகாக்களுடன் உப்புச்சட்ட விதிகளை மீறி நடக்கப் புறப்பட்டுச் செல்லுவேன். எளியவனின் நிலைமையிலிருந்து பார்க்கும் நான் இந்த உப்புவரியே எல்லாவற்றிலும் பெரிய அநீதமான வரியாகக் கருதுகின்

றேன். நாட்டிலுள்ள ஏனையவர்களுக்காகவே சுயேச்சை இயக்கம் முக்கியமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இக் கேட்டை ஒழிக்க முதலில் முயற்சி செய்யப்படும். ஆச்சர்யப்படத்தக்க அம்சமென்னவெனில் இக்ரூரமான ஏகபோக பாத்தியதைக்கு நாங்கள் இவ்வளவு காலமாக உட்பட்டிருந்ததுதான். தாங்கள் என்னைக் கைது செய்து எனது உத்தேசத்தைக் கைகூடவொட்டாமல் தடுக்க முடியுமென்று எனக்குத் தெரியும். எனக்குப் பிறகு இவ்வேலையைக் கட்டுப்பாடான முறையில் செய்யக்கூடியவர்களாயும் உப்புச் சட்டத்தை மீறுவதால் அதற்கான தண்டனைகளுக்குள்ளாகின்றவர்களாகவும் உள்ளவர்கள் பதினாயிரக்கணக்காக இருப்பார்களென்று நம்புகின்றேன். இச்சட்டமானது எப்பொழுதுமே சட்ட புத்தகத்தில் இடம்பெற்று அதற்குக் களங்கமுண்டாக்கி யிருக்கக்கூடாது.

பயமுறுத்தல் கடிதமல்ல.

என்னால் கூடியவரை தங்களுக்குத் தொந்தரவு விளைக்காதிருக்கவே விரும்புகின்றேன். தங்களுக்கு அனாவசியமாகக் கஷ்டத்தையும் கிலேசத்தையும் உண்டாக்க எனக்கு விருப்பமே இல்லை. எனது கடிதத்தில் ஏதேனும் பொருளிருப்பதாகத் தாங்கள் நினைத்தால் தாங்கள் என்னுடன் இவ்விஷயங்களைப்பற்றி விவாதிக்கசிரத்தைகொண்டு அதற்காக இந்தக் கடிதத்தைப் பிரசுரிப்பதை ஒத்திவைக்கத் தாங்கள் விரும்பினால் இக் கடிதம் வந்ததும் அவ்விருப்பத்தைத் தந்தி மூலம் தெரியப்படுத்தினால் நான் இதை பிரசுரியாதிருப்பேன்.

இக் கடிதத்தில் கண்ட கருத்திற்கிணங்கிவரத் தங்களால் முடியுமென்று தங்களுக்குத் தோன்றினாலொழிய

தாங்கள் என்னை எனது வழியிலிருந்து திரும்பாதிருக்க விட்டால் அதுவே எனக்குத் தாங்கள் காட்டிய தயவாக இருக்கும். இந்தக் கடிதமானது எந்த விதத்திலும் பய முறுத்துவதற்காக எழுதப்படவில்லை. ஆனால் சட்ட சாத்வீக எதிர்ப்பு இயக்கத்தை துவக்குவதற்கு முன்பு செய்யவேண்டிய புனிதமான பூர்வாங்கக் கடமையாகும், இதனால் நான் இதை இந்தியரது கட்சியில் நம்பிக்கை கொண்ட நண்பரான. ஒரு ஆங்கிலேய யுவர் மூலம் தங்க ளுக்கு அனுப்புகின்றேன். அவர் அஹிம்சா தர்மத்தில் பூரணமாக நம்பிக்கைக் கொண்டிருக்கின்றார். இக் காரியத் திற்காகவே கடவுள் அவரை என்னிடம் அனுப்பியதாக நம்புகின்றேன்.

இங்ஙனம்,

தங்கள் உண்மை நண்பன்,

மோ. க. காந்தி.

இராஜப்பிரதிநிதியின் பதில்.

மகாத்மாஜியின் கடிதத்திற்கு ராஜப்பிரதிநிதி பின் வருமாறு 5-ந் தேதி பதிலனுப்பினார்:—

பிரியமுள்ள ஸ்ரீமான் காந்திக்கு,

தாங்கள் 2-ந் தேதி எழுதிய கடிதம் வந்து சேர்ந்த தைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி இராஜப்பிரதிநிதி எனக்கு ஆணையிட்டிருக்கிறார். தாங்கள் ஆரம்பிக்க உத்தே சித்திருக்கும் செயலானது கட்டாயம் சட்டத்தை மீறிய தாகவும் பொதுஜன அமைதிக்கு ஹானியை விளைவிப்ப

தாகவும் இருக்குமென்பது தெளிவு. இத்தகைய செயலில் தாங்க ளிறங்க உத்தேசித் திருப்பதைத் தெரிந்து அவர் வருந்துகிறார்.

இங்ஙனம்: தங்கள் உண்மையுள்ள,

ஜி. கன்னிங்ஹாம்

அந்தரங்க காரியதரிசி.

1930 மார்ச்சுமீ 12வ உப்புச் சட்டத்தை மறுக்க வேண்டி மகாத்மா காந்தி ஆமதாபாத்தைவிட்டு மூதற் தொண்டர் படையுடன் புறப்பட்டார். சத்தியாக்கிரஹம் நடக்கும்போது இராஜப்பிரதிநிதிக்கு கீழ்க்கண்ட இரண்டாவது இறுதிக் கடிதத்தை தயார்செய்து வைத்திருந்தார்.

இராஜப்பிரதிநிதிக்கு மகாத்மாவின் 2-வது கடிதம்.

நவசார், மே 30—

இராஜப்பிரதிநிதிக்கு மகாத்மா காந்தி தாம் கைது செய்யப்படுவதற்கு முன்பு எழுதி முடித்த 2-வது கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:—

பிரியமுள்ள நண்ப; கடவுள் திருவுள்ளச் சம்மதத்தை எதிர்பார்த்து நான் தர்சனுவுக்கு எனது தோழர்களுடன் புறப்பட்டுச் செல்ல உத்தேசித்திருக்கிறேன். அங்கு போய்ச் சேர்ந்ததும் உப்புத் தொழிற்சாலையை எவ்விதம் ஒப்புவிக்க வேண்டுமென்று கோருவேன். தர்சனுவிலுள்ள உப்பளம் தனிப்பட்ட நபர்கக்ளுகுச் சொந்தமான சொத்தென்று பொதுஜனங்களுக்குச் சொல்லப்பட்

டிருக்கிறது இது வெறும் பித்தலாட்டமாகும். இராஜப் பிரதிநிதியின் மாளிகை எப்படிக் கவர்ன்மெண்டின் ஆதிக் கத்தின்கீழ் இருக்கின்றதோ அப்படியே இந்த உப்பள மும் கவர்ன்மெண்டின் பலமான ஆதிக்கத்திற் குட்பட் டிருக்கின்றது. அதிகாரிகளின் முன் அநுமதியில்லாமல் ஒரு சிம்டா உப்பைக்கூட அங்கிருந்து அப்புறப்படுத்த முடியாது. எனது முயற்சி கொள்ளை என்று வேடிக்கை யாகவும் விஷமத் தனமாகவும் அழைக்கப்பட்டிருக் கிறது. எனது முற்றுகையைத் தடுப்பது தங்களுங்குச் சாத்தியமாக இருக்கலாம். அதற்கு 3 வழிகளிருக்கின் றன:—(1) உப்பு வரியை நீக்குதல், (2) என்னையும் எனது கோஷ்டியையும் கைதுசெய்தல், தேசத்தார் இம்மாதிரி கைது செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் பதில் ஆள் அனுப்புமென்று நான் நம்புகின்றேன். அவ்வாறு தேசம் அனுப்பாவிட்டால் எங்களைக் கைது செய்துவிட்டால் இந்த முற்றுகையைத் தடுத்துவிடலாம், (3) தேசத்தார் பதிலாள் அனுப்பாவிட்டால் குண்டர்களது முறையைக் கையாண்டு எங்கள் ஒவ்வொருவரது மண்டையும் உடைத்து எங்களது முயற்சியைத் தடுக்கலாம். ஆனால் தேசத்தார் உடைந்த தலையுடைய ஒவ்வொருவருக்கும் பர்த்தியாட்கள் அனுப்புவார்கள் என்று நம்புகின்றேன். நான் மிகுந்த தயக்கங் கொண்ட பிறகே இந்த நடவடிக் கையை எடுத்துக் கொள்ளுவதென்று முடிவு செய்திருக் கின்றேன். சத்தியாக்கிரஹிகளுடன் கவர்மெண்டார் நாகரிகமான முறையில் போராடுவார்களென்று நான் நம்பி யிருந்ததுண்டு. சத்தியாக்கிரஹிகளைச் சமாளிக்கும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் சாதாரண சட்டமுறைப்

படி நடந்து கொண்டிருந்தால் நான் கவர்மெண்டின் முறையைப்பற்றி எதுவுமே சொல்லியிருக்கமுடியாது. ஆனால் இவ்வாறு செய்வதற்குப் பதிலாகக் கவர்ன்மெண்டார் தலைவர்கள்மீது ஏறக்குறைய சட்ட சம்பிரதாயப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டுவிட்டு சாதாரணத் தொண்டர்களைப் பெரிதும் காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்கியிருக்கின்றனர். சில தொண்டர்கள் கண்ணியக் குறைவான முறையிலும் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். இம்மாதிரி அபூர்வமாக எங்கேனும் நிகழ்ந்திருந்தால் இதனை அலக்ஷியம் செய்திருக்கலாம். ஆனால் வங்காளம், பீஹார், உத்கல், ஐக்கிய மாகாணம், டில்லி, பம்பாய் ஆகிய விடங்களிலிருந்து எனக்கு வந்த தகவல்கள் கூர்ஜரத்தில் ஏற்பட்ட அனுபவத்தைப் பூரணமாக ஊர்ஜிதம் செய்திருக்கின்றன. கூர்ஜரத்தின் அனுபவத்தைப்பற்றி என்னிடம் போதிய அத்தாட்சிகளிருக்கின்றன. கராச்சி, பெஷாவர், சென்னை ஆகிய விடங்களில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆத்திரமூட்டப்படாத பொழுது அனாவசியமாகச் செய்யப்பட்டன. எலும்புகள் முறிக்கப்பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டிற்கு விலை மதிப்பில்லாததாகவும் ஆனால் தொண்டர்களுக்கு விலையுயர்ந்ததாயுமுள்ள உப்பைக் கொடுக்கும்படித் தொண்டர்களைச் செய்வதற்கு இதர குடங்களிலுள்ள பலாத்காரத்தை உபயோகித்திருக்கின்றனர். மதுராபுரியில் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்திரேட் 10-வயதுள்ள சிறுவனிடமிருந்து தேசீயக் கொடியைப் பிடுங்கியதாகக் கூறப்படுகிறது. இம்மாதிரி சட்ட விரோதமாகக் கைப்பற்றப்பட்ட கொடியைத் திருப்பிக்கொடுக்கும்படிக் கேட்ட கூட்டமானது ஈவிரக்கமில்லா

மல் அடிக்கப்பட்டது. அதிலிருந்து அந்த அதிகாரியின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்திருப்பது தெரிகிறது.

வங்காளத்தில் உப்புக்காகச் சிலர்மீதே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் சிலரே தாக்கப் பட்டிருப்பதாகவும் தோற்றுகிறது. ஆனால் தொண்டர் களிடமிருந்து கொடிகளைப் பறிக்கும்பொழுது நினைக்கவும் வொண்ணுத பல கொடுமைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஜனங்களின் அஹிம்சையைப் பாராட்டுகிறார்.

நெல் வயல்கள் எரிக்கப்பட்டிருப்பதாகவும் தின் பண் டங்கள் பலாத்காரமான முறையில் அப்புறப்படுத்தப்பட் டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. கூர்ஜரத்திலுள்ள காய் கறி மார்க்கெட்டை கொள்ளை யடித்திருக்கின்றனர். இதற்கு வியாபாரிகள் உத்தியோகஸ்தர்களுக்குக் காய்கறி களை விற்க மறுத்ததே காரணமாகுமாம். இச் செயல்க ளெல்லாம் கூட்டங்களுக்கு முன்பு நிகழ்ந்திருக்கின்றன. ஜனக்கூட்டமானது காங்கிரஸ் ஆணைக்காகப் பதிலுக்குப் பதில் செய்யாமல் இவற்றிற்குட்பட்டிருந்து வந்து இருக் கின்றது. சத்தியம் பிரதிக்ஞை செய்து கொண்டவர்கள் கூறும் விவரங்களை நம்பும்படித் தங்களைக் கேட்டுக்கொள்ளு கின்றேன். உயர்ந்த உத்தியோகஸ்தர்களது மறுப்புகள் கூட அடிக்கடிப் பொய்யென நிரூபணமாகின்றது. பர் டோலியின் விஷயத்தில் இவ்வாறு நிரூபணமாகியிருக் கின்றது.

சென்ற 5 வாரங்களில் கூட ஜனங்களுக்குப் பொய்யை வெளியிட உத்தியோகஸ்தர்கள் தயங்கவில்லை என்று சொல்லவேண்டியிருப்பதைக் குறித்து நான் வருந்துகின் றேன்.

சில போய்ப் பிரசாரங்கள்.

கூர்ஜரத்திலுள்ள கலெக்டர்களது ஆபீஸுகளி லிருந்து வெளியிடப்படும் கவர்ன்மெண்ட் நோட்டீஸ்களி லிருந்து அடியிற்கண்ட சில மாதிரிகளை எடுத்துக்கொண் டிருக்கின்றேன் :—(1) 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருஷம் ஒன்றுக்கு 5 இராத்தல் உப்பை உபயோகிக்கின் றனர். இதனால் வருஷம் 1-க்கு 3 அணவை வரியாகக் கொடுக்கின்றனர். கவர்ன்மெண்டார் ஏகபோக வியாபார உரிமையை நீக்கிவிட்டால் ஜனங்கள் உப்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும். அதனுடன் இதனை எடுத்து விடுவதால் ஏற்படும் கஷ்டத்தைக் கவர்ன்மெண்டிற்கு ஈடுசெய்து தரவேண்டியிருக்கும். கடற்கரையிலிருந்து நீங்கள் எடுக்கும் உப்பு உண்ணக்கூடியதல்ல. இதனால் கவர்ன்மெண்டார் அதனை அழிக்கின்றனர்.

(2) கவர்ன்மெண்டார் இந் நாட்டிலுள்ள கைராட்டி னத்தில் நூல் நூற்கும் தொழிலை அழித்துவிட்டனர் என்று ஸ்ரீமான் காந்தி சொல்லுகின்றார். ஆனால் இது உண்மையல்ல என்பது ஒவ்வொருவருக்கும் தெரியும். ஏனெனில் நாடெங்கும் கைராட்டினத்தில் பருத்தி நூல் நூற்கக் கிராமம் ஒன்றுகூட கிடையாது. மேலும் ஒவ் வொரு மாகாணத்திலும் பருத்தி நூல் நூற்பவர்களுக்கு உயர்ந்த வழிகள் காட்டப்படுகின்றன. அவர்களுக்குக் குறைந்த விலைக்கு நல்ல கருவிகள் அளிக்கப்படுகின்றன. இதன்மூலம் கவர்ன்மெண்டார் அவர்களுக்கு உதவிசெய்து வருகின்றனர். (3) கவர்ன்மெண்டார் வாங்கும் கடனில் 5-ல் 4 பாகம் நன்மை பயக்கத்தக்க வழியில் செலவிடப் படுகின்றன.

நான் மூன்று துண்டுப் பிரசுரங்களிலிருந்து இந்த 3 விதமான ஸ்டேட்மெண்டுகளை எடுத்து இருக்கின்றேன். இந்த ஸ்டேட்மெண்டுகள் ஒவ்வொன்றும் பொய்யான தென்பது வெளிப்படையாகத் தெரிகிறதென்று சொல்ல விரும்புகின்றேன்.

உப்பு வரி தலை வரியே.

21-வயதுக்கு மேற்பட்டவர்கள் தினசரி சாப்பிடும் உப்பானது கவர்ன்மெண்ட் அறிக்கையில் கண்ட விகிதத்தைவிட 3 மடங்காவது அதிகமாகவிருக்கும். இதனால் ஒவ்வொருவரும் குறைந்தபக்ஷம் 9 அணுவாவது தலை வரியாகக் கொடுத்து வருகின்றனர். இந்த வரியானது வயது, தேக ஆரோக்கிய நிலைமை இவை எப்படி இருந்த போதிலும் ஒவ்வொரு ஆண், பெண், பாலர் இவர்களிடமிருந்தும் வீட்டில் வளரு மிருகங்களிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கைராட்டினம் இருக்கிறதென்றும் நூல் நூற்கும் இயக்கம் எவ்விதத்திலேனும் கவர்ன்மெண்டால் ஆக்கமளிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் ஆதரவளிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சொல்லுவது பெரும் பொய்யாகும். கவர்ன்மெண்டார் 5 ரூபாய் கடன் வாங்கினால் 4 ரூபாய் ஜனங்களுக்கு நன்மை செய்வதற்காகச் செலவிடப்படுகின்றது என்ற பொய்க் கூற்றை முதலாளிகள் நன்கு பைசல் செய்வார்கள். ஆனால் இந்தப் பொய்க் கூற்றுக்கள் வெறும் உதாரணங்களே யாகும். கவர்ன்மெண்டாருடன் கொண்டுள்ள தினசரி சம்பந்தத்தில் எவ்வளவு பொய் பித்தலாட்டம் நடக்கிறதென்பது ஜனங்களுக்குத் தெரியும்.

உத்தியோகஸ்தர்கள் ஒன்றும் செய்யாமல் சும்மா விருப்பதற்கு உதாரணங்கள் காட்ட விரும்புகின்றேன். கள்ளுக்கடைக்காரர்கள் அதிகாரிகளால் அமைதியாக இருக்க ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மறியல்காரர் களைத் தாக்கி அடித்திருக்கின்றனர். சட்டத்துக்கு விரோதமாகக் கள்ளு விற்றிருக்கின்றனர். தொண்டர் களைத் தாக்கியதையாவது சட்ட விரோதமாகக் கள்ளை விற்றதையாவது அதிகாரிகள் கவனிக்கவே இல்லை. தொண்டர்கள் தாக்கப்பட்டது எல்லோருக்கும் தெரிந் திருந்தபோதிலும் அவர்கள் தங்களிடம் புகார்கள் எதுவும் வரவில்லை என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள லாம்.

அவசர அச்சுச் சட்டம்

தாங்கள் தற்பொழுது அவசர அச்சுச் சட்டத்தை திடீரெனச் செய்து நாட்டில் அமுலுக்குக் கொண்டு வந் திருக்கின்றீர்கள். இது இதுகாறும் இந்தியாவிற்குத் தெரிந் திருந்த அவசரச் சட்டங்களை எல்லாம் மிஞ்சியதாக இருக் கின்றது. தாங்கள் சாதாரண முறையைக் கைவிட்டு பக வத்சிங் முதலியவர்கள் வழக்கில் ஏற்படும் தாமதத்தைப் போக்கிக்கொள்ள ஒரு குறுக்கு வழி கண்டுபிடித்திருக் கின்றீர்கள். உத்தியோகஸ்தர்களுடைய இந்தச் செயல் களையும் சும்மாவிருத்தலையும் மறைமுகமான ராணுவச் சட்ட ஆட்சி என்றழைத்தால் அதில் ஏதேனும் ஆச்சர்யத் திற்கு இடமிருக்குமா? இப்படி யிருந்தபோதிலும் போராட்டம் ஆரம்பமாகி 5 வாரங்களேயாகிறது. இதனால் தற்பொழுது ஆரம்பமாகியிருக்கும் பயங்கர ஆட்சி முறை இந்தியாவைத் தோற்கடிக்கு முன்பு நான் இன்னும் துணி

கரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் சாத்தியமானால் தங்களது கோபத்தைத் தூய்மையான தாயும் ஆனால் அதிகக் கடுமையானதாயுமுள்ள முறையில் திருப்பவேண்டுமென்றும் கருதுகின்றேன். இதை எனது கடமையாகக் கருதுகிறேன்.

நான் மேலே விவரித்த விஷயங்கள் உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அவற்றை இப்போது தாங்கள் நம்பாமலுமிருக்கலாம். எப்படியாயினும் தாங்கள் அதைப் பற்றிச் சற்று கவலையுடன் கவனிக்கவேண்டுமென்றே நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிகாரிகளுக்குள்ள பூரண பலத்தையும் காட்டும்படி நான் கேட்காவிட்டால் அது பயங்கொள்ளித் தனமாகும். அதோடு சத்தியாக்கிரஹம் பூரணமாக நடப்பதற்கான முயற்சிகள் அத்தனையும் நான் செய்யவில்லையென்று இப்போது கஷ்டங்களை அநுபவிப்பவர்களும் தங்கள் சொத்துக்களை இழக்கத் தயாராகவிருப்பவர்களும் நினைக்கவும் கூடும். ஏனெனில் சத்தியாக்கிரஹ சாஸ்திரப்படி அதிகாரிகள் எவ்வளவுக்கெவ்வளவு அடக்கு முறையை அதிகமாகக் கையாளுகிறார்களோ எவ்வளவுக் கெவ்வளவு சட்ட வரம்புமீறி அவர்கள் நடந்துகொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சத்தியாக்கிரஹிகள் கஷ்டத்தை மேற்கொள்ளத் தயாராக விருக்கவேண்டும். தாங்களாக அதிகமாகக் கஷ்டத்தை மேற்கொள்வதின் பயனாகத்தான் வெற்றி கிடைக்கும்.

நான் ஏற்றுக்கொண்டிருக்கும் முறைகளால் அபாயம் விளையக்கூடும் என எனக்குத் தெரியும். ஆனால் நாட்டினர் எனது கருத்தைத் தவறாகக்கொள்ளமாட்டார்கள் என்றே நம்புகின்றேன். சென்ற 15 வருஷங்களாக நான் இந்தியா

வில் நான் சொல்லிவருவதைத்தான் இப்போதும் நான் சொல்லுகிறேன்: பலாத்காரத்தை வெல்லுவதற்குப் பூரண அஹிம்ஸையே ஏற்ற மருந்தாகும். செய்கையால் மட்டுமின்றி ஹிம்சையை மனத்தால் நினைத்தாலும் அஹிம்ஸா தர்மப்படி நடக்கும் காரியங்களுக்குக் குந்தகம் விளையும் என்றும் நான் சொல்லியிருக்கிறேன். இப்படி அடிக்கடிச் சொல்லி எச்சரிக்கை செய்திருந்தும் பொது ஜனங்கள் பலாத்காரச் செய்கையில் இறங்கினல் நான் அதற்கு ஜவாப்தாரியாகமாட்டேன்.

இது ஒருபுறமிருக்கட்டும்; அஹிம்ஸை என்பது பலமான ஒரு சக்தி என மகான்கள் சொல்லியிருப்பது உண்மையாகையாலும் அதை நடத்திவைத்து நானும் அதன் உண்மையை அநுபவத்தில் அறிந்திருப்பதனுலும் மேற்சொன்ன காரணங்களைக்கொண்டு நான் செய்யவிருக்கும் காரியத்தை ஒத்திவைக்க முடியாது. மேற்கொண்டு வேறு நடவடிக்கை நடத்தாமலிருக்கவேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன். தங்கள் நாட்டினரில் பிரபலஸ்தர் பலர் கண்டித்துள்ள உப்பு வரியை எடுத்துவிடும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். உலகமெங்கும் அவ் வரியைக் கண்டிப்பதையும் அவரவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை வற்புறுத்தச் சட்டமறுப்பில் இறங்குவதையும் தாங்கள் பார்த்தே வருகிறீர்கள். சட்டமறுப்பைத் தாங்கள் எவ்வளவு வேண்டுமானுலும் கண்டிக்கலாம். சட்ட மறுப்புக்குப் பதிலாகப் பலாத்காரப் புரட்சியைத் தாங்கள் விரும்புகிறீர்களா? சட்டமறுப்பு பலாத்காரத்தில்தான் முடியுமெனத் தாங்கள் முன்னம் சொன்னது போல் இப்போதும் சொல்லும்பட்சத்தில் பிரிட்டிஷ்

கவர்ன்மெண்டார் அஹிம்ஸையின் தத்துவத்தை உணராமல் பாமரஜனங்கள் பலாத்காரத்தில் இறங்கும்படியான வழிகளைத் தேடினார்கள் என்றுதான் பிற்காலத்தில் சரித்திரத்தில் எழுதப்படும். இப்படி செய்தாலும் இந்திய மஹாஜனங்கள் ஆத்திரமூட்டப்பட்டாலும் அவர்கள் பலாத்காரத்தில் இறங்காதிருப்பதற்கான ஆற்றலும் அறிவும் ஆண்டவன் அளிப்பாரென்றே நான் நம்பியுள்ளேன். உப்புச் சட்டத்தை ரத்துசெய்யத் தாங்கள் மனம்கொள்ளாவிட்டாலும் அவரவர்கள் சொந்தமாக உப்புச் செய்துகொள்வதில் இப்போதுள்ள தடையை நீக்காவிட்டாலும் இக் கடிதத்தின் ஆரம்பத்தில் சொல்லியுள்ள முற்றுகைக்கு நான் புறப்பட்டுவிடுவேன்.

இங்ஙனம்,

தங்கள் உண்மையான நண்பன்,

(ஒப்பம்) எம். கே. காந்தி.

மகாத்மாவுடன் பேட்டி.

ராஜிக்கு நிபந்தனைகள்.

'லண்டன் டெயிலி ஹெரால்டு' பத்திரிகையின் விசேஷ நிருபரான மிஸ்டர் ஸ்லோகோம் சிறைக்கூட்டத்தில் மகாத்மா காந்தியை பேட்டி கண்டு பேசினார். அப்பொழுது அவர்களுள் நடந்த சம்பாஷணை 'இந்தியன் டெயிலி மெயிலில்' வெளியிடப்பட்டிருக்கிறது. 'டெயிலி மெயில்' பத்திரிகையின் அனுமதிபெற்று அஸோஸியேடெட் பிரஸ் அடியிற் கண்ட சுருக்கத்தை அனுப்பியிருக்கிறது:—

மிஸ்டர் ஸ்லோகோம்ப்:—கனடாவும் தென்னாப்பிரிக்காவும் முக்கியமான எல்லா அம்சங்களிலும் சுயேச்சையுள்ளன வல்லவென்று தாங்கள் நினைக்கிறீர்களா?

மகாத்மாஜி:—அவை முக்கியமான அம்சங்களில் சுயேச்சை வாய்ந்தவையாக இருக்கின்றன. ஆனால் எங்களுக்கு அந் நாடுகளுக்கிருக்கும் ராஜீயந்தஸ்துகூட அளிப்பதாகச் சொல்லப்படவில்லை.

மிஸ்டர் ஸ்லோகோம்ப்:—தங்களுடைய சட்டமறுப்பு இயக்கத்தால் உண்டாகக்கூடிய ஆபத்துகளை எல்லாம் ஆலோசித்துப் பார்த்திருக்கின்றீர்களா?

மகாத்மாஜி:—நான் "பைத்தியக்காரத் தனமான துணிவுடன்" இந்த இயக்கத்தில் இறங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது இது உண்மை. ஆனால் இம்மாதிரி துணிவு கொள்ளுவது நியாயமாகும். அபாயத்திற்குள்ளாகாமல் எந்தப்பெரிய காரியமும் சாதிக்கப்படவில்லை. ஷோலாப்பூரில் நடந்ததாகச் சொல்லப்படும் பலாத்காரத்தைக் கேட்டு வருந்துகின்றேன். அங்கு போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டதைக் குறித்து வருந்துகின்றேன். சத்யாக்ரஹிகள் பலாத்காரம் செய்யவில்லை என்று நிச்சயமாக நம்புகின்றேன். வெற்றி கிடைப்பதாக இருந்தால் கூட இறுதியில் ராஜி பேசித்தான் ஆகவேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்ளுகின்றேன். இந்தியாவின் தேசிய இயக்கத்தின் முக்கிய கட்சியைக் கைவிட நேராத வழியில் நான் ரத்தம் சிந்துதலையும் கஷ்டத்தையும் தவிர்ப்பதற்காகச் சாத்தியமானதை எல்லாம் செய்யத் தயாராக இருக்கின்றேன்."

சர்வகட்சி மகாநாட்டுடன் ஒத்துழைக்க நிபந்தனைகள்.

மிஸ்டர் ஸ்லோகோம் பின்னும் கூறுவதாவது:—பிறகு நான் மகாத்மாவுடன் செய்த சம்பாஷணையிலிருந்து இந் நெருக்கடியான சமயத்தில் கூட ராஜி சாத்தியமாகு மென்று நான் அறிந்துகொண்டேன். அடியிற்கண்ட நிபந்தனைகளின்மேல் மகாத்மாஜீ சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்திவைத்து லண்டன் சர்வகட்சி மகாநாட்டுடன் ஒத்துழைக்கும்படி காங்கிரஸ் மகாசபைக்குச் சிபார்சு செய்யத் தயாராக இருக்கிறார்:—

(1) சர்வகட்சி மகாநாட்டிற்கு உண்மையான சுயேச்சையை அளிக்கக் கூடிய அரசியலமைப்பை நிர்ணயிக்கவும் அதிகாரமளிக்கப் படவேண்டும்.

(2) உப்புச் சட்டத்தை ரத்து செய்தல், மதுவிலக்கு அந்நியத் துணிக்கு தடை விதித்தல் இவை சம்பந்தமாக மகாத்மா கோரிய கோரிக்கைகளை அளிக்கவேண்டும்.

(3) ராஜீய கைதிகளுக்குப் பொது மன்னிப்பளிக்க வேண்டும். இதுவும் சட்ட மறுப்பு இயக்க முடிவும் ஏக காலத்தில் நிகழவேண்டும்.

(4) மகாத்மா ராஜப்பிரதிநிதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கண்ட மற்ற 7 விஷயங்களையும் எதிர்காலத்தில் விவாதித்து கொள்ளும்படி விடவேண்டும்.

மஹாத்மாவின் நிபந்தனைகள்.

இந்தியா முழுவதும் உத்ஸாகமாக ஸ்வதந்திர தினத்தைக் கொண்டாடியதைக்கண்டு மகிழ்வெய்திய மஹாத்மா இப்போதிருக்கும் வைஸ்ராய் அவர்களுக்குச் சில நிபந்தனைகளை விதித்திருக்கிறார். ஒரு காலத்தில் லார்ட் ரீடிங்

என்ற வைஸ்ராய்க்கு எவ்வாறு நிபந்தனைகளை விடுத்தாரோ அதேபோல் இப்போது லார்ட் இர்வினுக்கு விடுத்திருக்கின்றார். அவைகளுக்கு வைஸ்ராய் உட்பட்டு வந்தால் சட்ட மறுப்பு இயக்கத்தை இந்தியாவில் தொடங்குவதில்லையென எச்சரிக்கையும் செய்திருக்கின்றார். அந்த நிபந்தனைகள் பின்வருமாறு:—

1. இந்தியாவில் அடியோடு மதுபானத்தை ஒழித்துவிடவேண்டும்.

2. இந்திய நாணய மாற்றை 1 ஷிலிங் 4 பென்ஸுக்குக் குறைத்துவிட வேண்டும்.

3. நிலத் தீர்வையை 100-க்கு 5 (?) பங்காவது குறைப்பதோடு, நிலத் தீர்வை சம்பந்தமான முழுப் பொறுப்பை சட்டசபைகளுக்கு விட்டுவிடவேண்டும்.

4. உப்பு வரியைக் குறைக்கவேண்டும்.

5. இராணுவச் செலவை தற்போது பாதியளவாவது குறைத்துவிட வேண்டியது அவசியம்.

6. உயர்ந்த சம்பளங்களிலிருக்கும் உத்தியோகஸ்தர் சம்பளத் தீர்வையைக் குறைக்குமளவுக்கு பாதிக்கோ, அல்லது அதற்கும் குறைவாகவோ குறைத்துவிட வேண்டும்.

7. அந்நிய நாட்டுத் துணிகள்மீது அதிக வரி விதித்து இந்திய துணி வியாபாரத்தைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

8. இந்தியக் கரையோரக் கப்பல் மசோதாவை சட்டமாக்க வேண்டும்.

9. கொலைக் குற்றம் செய்தோ, அல்லது கொலைக்குப் பயமுறுத்தியோ தண்டனையடைந்த ராஜீயக் கைதிகளைத் தவிர மற்றைய இராஜீயக் கைதிகளை உடனே விடுதலை செய்யவேண்டும். அரசியல் குற்றத்துக்காக அரசியல்வாதிகள்மீது தொடுத்திருக்கும் வழக்குகளை உடனே வாபீஸ் வாங்குவதோடு, 1818-ம் வருடத்திய சர்க்கார் சீர்திருத்தச் சட்டம் 124-எ. செக்ஷன் முதலிய சட்டங்களை உடனே ரத்து செய்யவேண்டும். அன்றியும் நாடு கடத்தப்பட்ட சகல இந்தியர்களையும் இந்தியாவுக்குத் திரும்பிவர அனுமதி கொடுக்கவேண்டும்.

10. இரகசிய போலீஸ் இலாகாவை ஒழித்துவிட வேண்டும். இன்றேல் அதற்கிருந்து வரும் அளவு கடந்த அதிகாரத்தைக் குறைத்துவிட வேண்டும்.

11. தற்காப்புக்காக ஆயுதங்கள் வைத்துக்கொள்ள இந்தியருக்கு உரிமையிருக்கவேண்டும். ஆனால், அதற்கு லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரம் பொதுவாயிருக்க வேண்டும்.

"இந்தியாவுக்கு அத்யாவசியமாக வேண்டிய சீர்திருத்தங்கள் இவையேயாகும். இவை அத்துமீறியவையெனக் கூறமுடியாது. இந்தியாவுக்கு அத்யாவசியமாகத் தேவைப்படும் மேற்கூறிய சாதாரண நிபந்தனைகளை வைசிராய் நிறைவேற்றி வைக்கட்டும். அவர் காதுக்கு சட்டமறுப்பென்ற பேச்சே எட்டாதிருக்கும். இந்தியருக்குச் சம உரிமை கொடுத்து சர்க்கார் கூட்டும் எவ்வித மகாநாட்டிலும் காங்கிரஸ் வாதிகள் கலந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறார்கள்."

சமரஸ முயற்சி

பண்டித மோதிலால் நேருவின் நிபந்தனை

லண்டன் "டெயிலி ஹெரால்டு" விசேஷ நிருபர் மிஸ்டர் ஸ்லோகோம்ப் பம்பாயில் 1930 ஜூன் 23-ல் பண்டித நேருவைப் பேட்டி கண்டு பின் வருமாறு தன் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்.

காங்கிரஸ் ஆக்டிங் தலைவர் பண்டித மோதிலால் நேருவுடன் நான் நெடுநேரம் வெளிப்படையாகப் பேசிக் கொண்டிருந்தேன். காந்திஜி காவலில் வைக்கப்பட்ட பின் இந்தியாவில் இப்போது எங்கும் வியாபகமாகி நடந்துவரும் தேசிய இயக்கத்துக்கு இவர்தான் தலைவராக விருக்கிறார். வயது 70 ஆகியும் தேக அசௌக்கியத்துட னிருந்தாலும் பண்டித மோதிலால் இன்னும் இந்தியாவில் சிறந்த ராஜீய வாதிகளில் ஒருவராக விளங்கி வருகிறார். அவரது டாம்பீகமற்ற தூய வெள்ளை நிறக் கதர் உடை யையும் நரை தோன்றிய வெண்மையான மயிருடன் கூடிய சிரசையும் பார்த்தால் அவர் ஆசார்ய புருஷர்போலத் தோற்றுகிறார். இன்று காலை பம்பாய் காங்கிரஸ் விடுதலை யில் அவர் என்னை வரவேற்றுப் பேசினார். அவர் மாகாண மெங்குமிருந்து வந்துள்ள காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் கலந்து பேசிக்கொண்டிருந்தார். முதல் முதலில் அவர்

என்னிடம் சட்ட மறுப்பு இயக்கம் பம்பாயைத் தவிர மற்ற விடங்களில் நசித்து வருவதாகவாவது அல்லது தடியடியாலும் அவசரச் சட்டங்களாலும் அவ்வியக்கத்தை நசுக்கிவிடலா மென்றாவது கவர்ன்மெண்டார் நம்பினால் அவர்கள் அநியாயமாக ஏமாந்துபோக வேண்டியது தான்'' என்று சொன்னார். அதோடு இதற்கு முன் நடந்த சட்ட மறுப்பு இயக்கங்களைப்போல இந்த இயக்கம் மதவிஷயமான சம்பந்தம் எதுவும் பெறவில்லை யென்றும் எல்லா வகுப்பினரும் காங்கிரஸ் கொடிக்கீழ் வந்துகூடி இந்தியா இதுவரை பார்த்திராதபடி ஒரு தேசீய இயக்கத்தை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

அதன்மேல் நான் சர்வகட்சி மகாநாட்டுக்கு வரும்படி அவருக்கு அழைப்பு வந்தால் அவர் எவ்விதம்நடந்து கொள்வார் என நான் கேட்டேன்.

அதற்கு அவர் கூறியதாவது:—மகாநாடு எந்த லக்ஷியத்துடன் கூடுகிறது என்பது முதலில் தெரியவேண்டும். ஒருவிதமான வேலைத் திட்டத்துடனுமில்லாமல் மகாநாடு கூடுவதாகவும் மகாநாடு கூடியபின் லண்டனுக்குச்சென்று நாங்கள் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்காக வாதாட வேண்டுமென்றும் கூறினால் நான் அங்குபோக மறுத்து விடுவேன். மகாநாடு இந்தியாவின் சுதந்தரத்துக்காக அரசியல் தயாரிக்க மகாநாடு கூடுவதாகவும் ஆனால் இந்தியாவின் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்றவாறு இடையில் பரஸ்பரம் நமக்குள்ளிருக்க வேண்டிய சம்பந்தங்களை நிர்ணயிக்க வேண்டிய வேலையை மட்டும் மகாநாட்டில் வைத்துக்கொள்வதாகவும் சொன்னால் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி நான் காங்கிரஸுக்குச் சிபார்சு

சொல்வேன். எங்கள் வீட்டுக் காரியங்களுக்கு நாங்களே எஜமானர்களாக விருக்கவேண்டும். பிரிட்டிஷ் நிர்வாகத்திலிருந்து இந்திய அரசியல் முறை ஜவாப்தாரியான இந்தியக் கவர்ன்மெண்டுக்கு மாறுவதற்குமுன் இடையிலுள்ள காலத்தில் அனுஷ்டிக்க வேண்டிய நியாயமான முறைகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள சித்தமாக விருக்கிறோம். நாங்கள் இந்த முறைகளைப்பற்றி விவாதிக்கக் கூடுகையில் ஒரு தேசத்தார் என்ற முறையில் பிரிட்டிஷாரோடு சரிசமத்துவமான முறையை விவாதிக்க உரிமை பெற்றவர்களாக விருக்கவேண்டும்.

டிசம்பர் மாதம் 23-ந்தேதி டில்லியில் நானும் மகாத்மாவும் இராஜப் பிரதிநிதியைக் கண்டு பேசியபோது மகாநாட்டின் வேலைவிவரங்களைத் திட்டமாகச் செய்யாவிட்டாலும் மகாநாட்டில் இந்தியாக் கவர்ன்மெண்டாரும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் இந்தியா குடியேற்ற நாட்டந்தஸ்துபெற வெளியிட்டுள்ளகோரிக்கையை அங்கீகரிப்பார்கள் என இராஜப் பிரதிநிதியை உறுதி கூறும்படி கேட்டோம். அதற்குஅவர் இரண்டு கவர்ன்மெண்டுகளும் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் முடிவை முன்னறிந்து சொல்லமுடியாது எனக் கூறிவிட்டார். பிரிட்டிஷ் பார்லிமெண்டின் சுதந்தரங்களில் குறுக்கிட நாங்கள் விரும்பவில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் இராஜப்பிரதிநிதியும் வாக்குறுதிப்படி நடப்பதில் அக்கறையுள்ளவர்களாக விருக்கிறார்கள் என்பதற்கே இராஜப்பிரதிநிதியை உறுதி கூறும்படி கேட்டோம். அவர்கள் தங்களாலானவரை சர்வகட்சி

மகாநாட்டில் எங்கள் கோரிக்கையை ஆதரிப்பதாக உறுதி கூறியிருந்தால் அம்மட்டோடு விட்டுவிட்டு மகாநாட்டின் முடிவைப் பார்லிமெண்டு என்னவேண்டுமோனாலும் செய்து கொள்ளட்டும் என்ற முடிவுக்கு வந்திருப்போம். பார்லி மெண்டு அம்மகாநாட்டின் முடிவை நிராகரித்து விட்டால் அதற்கென்ன செய்வதென்பதைப் பற்றியும் யோசித்து கொண்டிருப்போம். டிசம்பர் மாதத்திலிருந்த நிலைமை வேறு. இப்போதுள்ள நிலைமை வேறு. மகாத்மா முன் னம் கேட்ட உறுதிமொழி இப்போது கொடுக்கப்பட்டா லும் ஒருக்கால் பொது ஜனங்கள் அதை அங்கீகரிக்காம லிருக்கக்கூடும். ராஜிய விஷயத்தில் பெரிய அதிகாரியாக விளங்கும் காந்திஜிகூட இப்போது பூரண சுயேச்சைக்குக் குறைந்த எந்த நிபந்தனையைக் கொண்டும் சர்வகட்சி மகா நாட்டுடன் ஒத்துழைக்கக் காங்கிரஸ் அனுமதியைப் பெற முடியாது போகலாம்.

முடிவாகக் காங்கிரஸ் அழைப்பை ஏற்றுக்கொண் டால் மிதவாதிகளும் நாட்டில் காங்கிரஸே பெரிய ராஜீய ஸ்தாபனமென ஒப்புக்கொள்ளுவதற்கேற்ப பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளில் காங்கிரஸ் பிரதிகள் அதிகமாக விருக்கவேண்டும். காங்கிரஸின் பலத்துக்கும் செல்வாக் குக்கும் ஏற்றபடி அதற்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப் படவேண்டும்.

சென்ற இரண்டு வருஷங்களாக நாட்டில் பலவாறுகக் கிளம்பியுள்ள போலிச் சபைகளின் அளவுக்கு மிஞ்சிய பாத்தியதையை நான் அங்கீகரிக்க மாட்டேன். கவர்ன் மெண்டோடு அவைகளுக்கு நெருங்கிய சம்பந்தமிருந்தும் அவைகளை பின்பற்றுவோருமில்லை. நாட்டில் அவைகளுக்

குச் செல்வாக்குமில்லை. காந்திஜி கூறுவது போல நானும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் நிர்வாகிகளுக்கும் மனமாறுதல் ஏற்படவேண்டுமெனக் கேட்கிறேன்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு ராஜீயக் கைதிகளுக்குப் பரந்த நோக்கத்துடன் மன்னிப்பு அளித்தால் ராஜீய சம்பந்தமாக ஒரு சமரஸமேற்படக் கூடுமென நான் நம்புகிறேன்.

இராஜப் பிரதிநிதியின் பிரசங்கம்.

இந்தியா சட்டசபை, ராஜாங்கசபை ஆகிய இரண்டு சபையினரையும் சேர்த்துவைத்து, மேன்மைதங்கிய ராஜப்பிரதிநிதி ஸிம்லாவில் 1930 ஜூலை 9உ செய்த பிரசங்கத்தின் முழுவிவரம் வருமாறு:—

கனவான்களே, இந்தியா சட்டசபை அக்கிராசனர் என்ற கௌரவம் வாய்ந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய தலைவரை முதல் முதலாக நான் இன்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பதவிக்குரிய கௌரவத்துடன் அவர் அதை வகித்து வருவாரென்றும் அவர் தமது கடமையைச் செய்வதில் எல்லாக் கட்சியாருடைய ஆதரவும் அவருக்குக் கிடைக்குமென்றும் நம்புகிறேன். கனவான்களே. இக்கோடையில் இவ்விரு சபைகளையும் கூட்டிவைத்தது உங்களுக்குப் பிடித்தமான காரியமா என்ற விஷயத்தில் எனக்குச் சந்தேகமுண்டு, ஆயினும், இதர உத்தியோக அல்லது உத்தியோகப் பற்றில்லாத காரியங்களைக் கவனிப்பதோடு, இச்சபைகளைக் கலைக்குமுன் பொதுஜன நன்மையைப் பாதிக்கும் சில

விஷயங்களைப்பற்றி நீங்களனைவரும் விவாதிக்கவும், நான் உங்கள்முன் சில விஷயங்களைச் சொல்லவும், ஒரு சந்தர்ப்பம் ஏற்படவேண்டுமென்று நான் விரும்பினேன். இந்தியா சட்டசபை இரண்டு கூட்டங்களுக்கு முந்தியே கலைந்திருக்க வேண்டியது; ஆனால் அதன் காலவரையறை நீடிக்கப்பட்டது. இனி இந்த 3-வது இந்தியா சட்டசபையும், 2-வது ராஜாங்க சபையும் இக் கூட்டத்திற்குப் பிறகு கலைக்கப்பட்டுவிடும். இந்தியாசட்டசபையின் உயிரை இன்னும் சிலகாலம் நீடிக்கச் செய்யவேண்டுமென்று சிலர் விரும்புவதாகத் தெரிகிறது ஒரு தீர்மானமும் அதை யொட்டி அனுப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நான் ஜாக்கிரதையாக யோசித்துப் பார்த்ததில், பொதுவான காரணங்களை முன்னிட்டு இனி சபையை நீடிக்கச்செய்வது சரியாயிராது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். இதன் பலனாக ராஜாங்கசபையையும் சேர்த்துக் கலைத்துவிட்டு, இரு சபைகளுக்கும் ஏககாலத்தில் அடுத்த செப்டம்பரில் தேர்தல் நடத்திவிடப்படும். சமீபத்தில் சில காலிஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்த ஏற்பாட்டால் பாதிக்கப்படுவர் என்பதும், சொற்ப தினங்கள் தான் அவர்கள் சட்டசபைக் கூட்டத்திற்கு ஆஜராயிருக்க சாத்தியப்படும் என்பதும் தெரியும். அவர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு நான் மிகவும் வருந்துகிறேன். ஆயினும் லண்டன் ஸர்வகக்ஷி மகாநாட்டை பாதிக்காதபடி தேர்தல் தேதிகளை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. தேர்தலுக்கு நிற்கிற சிலர் ஸர்வகக்ஷி மகாநாட்டுக்கும் போகக்கூடியவர்களா யிருக்கலாம். அதற்காகவே செப்டம்பரில் சௌகரியமாகத்

தேர்தல்களை நடத்திவிட உத்தேசம். உங்களுக்கும் இது சம்மதமாயிருக்குமென்று நினைக்கிறேன்.

எல்லைப்புற நாடுகேளுடன் அந்யோந்யம்

ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்டிருந்த கஷ்டமும் நெருக்கடியும் தீர்ந்து, நமது சக்ரவர்த்தியின் பிரதிநிதி மீண்டும் காபூலுக்குபபோய்ச் சேர்ந்துவிட்டார். இதிலிருந்து சக்ரவர்த்தியின் கவர்ன்மெண்டுக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் செளஜன்யமான சம்பந்தம் ஏற்பட்டு விட்டதாகக் கொள்ளலாம். நமது வடமேற்கு எல்லைப் புறத்தில் சிலகாலம் கவலைக்கிடமான நிலைமை ஏற்பட்டிருந்தது. இப்போது நிலைமை வரவர திருப்திகரமாக மாறிக் கொண்டிருப்பதை சந்தோஷத்துடன் அறிவிக்கிறேன் அம்மாகணத்தின் பிரபலஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் சேர்ந்து செய்த முயற்சியின் பலனுக பிரஜைகளுக்கும் கவர்ன்மெண்டுக்கும் பழையபடி பரஸ்பரம் நேசபாவமும் நம்பிக்கையும் ஏற்பட்டதற்காக நான் எல்லாருடைய பிரயத்னங்களையும் பாராட்டுகிறேன்.

இந்தியாவின் வடகிழக்கு மூலையில் ஒரு விசாரணைக் கைதியின் ஜாதி விஷயமாக நேபாளம் திபேத்து ஆகிய இரு கவர்ன்மெண்டுகளுக்கும் தகராறுஏற்பட்டது. சில சம்பவங்கள் நடந்து அதனுல் அதிக மனக்கசப்புக்கு இடமுண்டாயிற்று. இவ்விரு தேசங்களும் நமக்கு அண்டை அசலில் இருப்பதால், அவர்களுக்கு ஏற்படக்கூடிய விரோதப் பான்மை நம்மையும் பாதிக்கக் கூடும். ஆகையால் நமது சக்ரவர்த்தி கவர்ன்மெண்டின் சம்மதத்தின் பேரில், அவ்விரு தேசங்களுக்கும் விரோதபான்மை

முற்றுமல் செய்ய விசேஷப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. நேசபாவமான ஒரு தூது கோஷ்டியை லாஸ்ஸாவுக்கு அனுப்பினோம். அத்தூதர்களின் யோசனையை அநுசரித்து திபேத்து கவர்ன்மெண்டார் மனஸ்தாபத்துக்குக் காரணமாயிருந்ததை நீக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை யெடுத்துக்கொண்டார்கள். இப்போது இரு தேசங்களும் நேசப்பான்மையுடன் இருக்கின்றன. இந்தியா கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்ட ராஜிப் பிரயத்தனத்திற்கு இருதேசங்களும் நன்றி பாராட்டியிருக்கின்றன.

வெளிநாட்டு இந்தியர்கள்.

வெளி நாட்டு இந்தியர்களைப்பற்றிய இரண்டு முக்கியமான பிரச்னைகள் எனது கவர்ன்மெண்டின் கவனத்தைச் சில காலமாக இழுத்துவந்திருப்பது கனம் மெம்பர்களுக்குத் தெரிந்திருக்கும். முதலாவது, கீழாப்பிரிக்கா விஷயமாக ஹில்டன் யங் கமிஷனும், ஸர்ஸாம்யூல் வில்ஸனும் செய்த சிபார்சுகளின் பலனாக ஏற்பட்ட நிலைமை; மற்றது இலங்கை இந்தியர் ஓட்டுரிமையைப்பற்றிய விஷயம். சக்கரவர்த்தியின் கவர்ன்மெண்டார் இவ்விரண்டு விஷயங்களிலும் தங்கள் முடிவை சமீபத்தில் தெரிவித்திருக்கிறார்கள். வேண்டியவரையில் அது இந்தியாவில் பிரசுரமாகிவிட்டதால் நான் விரிவாக அதைப்பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை. ஆனால் இரண்டொரு முக்கிய அம்சங்களைப் பற்றி மட்டும் அவசியம் குறிப்பிடவேண்டும். கீழாப்பிரிக்கா விஷயமாக பிரிட்டிஷ் கவர்ன் மெண்டின் பிரேரணைகள் பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டிக்கு அனுப்பப்

படும்; இக் கமிட்டி யேற்பட்டவுடன் கிழாபிரிக்கா இந்தியர்களைப் பாதிக்கும் அம்சங்களைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்பிராயம் கமிட்டிக்குத் தெரிவிக்கப்படும். கெனியா சட்டசபையில் உத்தியோகஸ்தர் மெஜாரிட்டி இனியும் இருந்துவருமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு செய்துள்ள முடிவும், பொது ஓட்டர் ஜாப்தா ஏற்படுத்துவதுதான் நோக்கம் என்று அவர்கள் கூறியிருப்பதும் இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்துக்கு ஒத்ததாயிருக்கிறது. கிழாப்பிரிக்கா ஐக்கிய அரசாங்கம் பிறகொரு காலத்தில் இந்தியரின் நன்மையை பாதிக்குமெனச் சிலர் பயப்படுகிருர்களாயினும், சிறுபான்மையோருக்கு ஏற்பட்டுள்ள பந்தோபஸ்துகளைப் பார்த்தால் அந்த பயம் அனுவசியம். இந்த விஷயத்தில் அவசியமானல் இந்தியா கவர்ன்மெண்டார் சமயத்தில் தேவையான யோசனைகளைச் சொல்லுவார்கள்.

சிலோன் இந்தியர் ஓட்டுரிமை.

சிலோன் இந்தியர் ஒட்டுரிமை சம்பந்தமாகப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் முடிவு அந்த தேசத்தில் குடியேறியிருக்கும் இந்தியர்களுடைய நன்மையைக் கவனித்துக்கொள்ள இந்தியா கவர்ன்மெண்டுக்குள்ள பாத்தியதையை ஒப்புக்கொள்ளுகிறது. நிரந்தரவாச சர்ட்டிபிகேட்டுக்கு மனுச் செய்துகொள்ளும் இந்தியர் இந்தியா கவர்ன்மெண்டின் பாதுகாப்பை விட்டுவிடுவதாக எழுதிக் கொடுக்குமாறு கேட்கப்படமாட்டார். இந்தியர்களுடைய நிலைமையையும் உரிமைகளையும் பாதிக்கும்படி இப்போது சிலோனில் உள்ள சட்டங்கள் எதையும் திருத்

தவோ மாற்றவோ உத்தேசமில்லை. அவர்கள் பழைய உரிமைகளை அனுபவித்துக்கொண்டே வருவார்கள். இனி மேல் முன்னதாக மந்திரியின் அனுமதி பெற்றாலொழிய அல்லது நிறுத்திவைக்கும் பிரிவு மசோதாவிலிருந்தா லொழிய இந்த உரிமைகளைப் பாதிக்கக்கூடிய மசோதா எதற்கும் கவர்னர் அங்கீகாரம் கொடுக்க முடியாது. நிரந்தரவாச சர்ட்டிபிகேட் பெற்ற எவரும் ஒட்டராகப் பதிவு செய்யப்பட்டிருக்கையில் தீவில் வசிக்கும் எல்லா பிரிட்டிஷ் பிரஜைகளுக்கும் பொதுவாக இல்லாத உரிமை கள் அல்லது விலக்குகளுக்குப் பாத்தியதை கொண்டாட முடியாது என்ற விதி சேர்க்கப்பட்டிருப்பதால் இந்த வசதிகளின் பலன் வீணாகிவிடுமென்று பயப்படப்பட் டிருக்கிறது. இப்போது இந்தியர்களுக்குள்ள விசேஷ உரிமைகளைக் குறைக்க உத்தேசமே யில்லையென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் உறுதி கூறியிருப்பதை இது ஒரு வழியிலும் பாதிக்கவில்லை. இந்தியா கவர்ன்மெண்டுக் கும் சிலோன் கவர்ன்மெண்டுக்கும் சிநேகப் பான்மையில் சம்பாஷணை நடப்பதன்மூலம் இப்போதுள்ள வசதிகளைப் பாதுகாப்பதும் ஸ்திரமாக சர்ட்டிபிகேட்டு பெறாததற்காக ஒட்டுரிமையில்லாத இந்தியர்களுக்கு இனிமேல் இந்த வசதி களை இந்தியா கவர்ன்மெண்டார் பெறுவதும் சாத்திய மில்லாமற் போய்விடுமென்று நினைக்கக் காரணமில்லை.

டிரான்ஸ்வாலில் ஆசியா வாசிகள் ஸ்திரமான சொத் துக்களைப் பெற்றிருப்பதைப்பற்றி யூனியன் பார்லிமெண் டில் இவ் வருஷம் பிரேரிக்கப்பட்ட மசோதாவைத் தென் ஆப்பிரிக்கா கவர்ன்மெண்டில் அடுத்த கூட்டம்வரையில் ஒத்திவைக்கத் தென் ஆப்பிரிக்கா கவர்ன்மெண்டார் சம்

மதித்துவிட்டனர். டிரான்ஸ்வால் இந்தியர்களுக்கும் இந்த பீதியை யுண்டுபண்ணிய இந்த மசோதாவின் ஷரத்துக்கு முடிவாக இந்தியர்களுடைய கிரமமான பாத்தியதைகளுக்கு முரண்படாமல் சரிப்படுத்தப்படுமென்று நம்ப இதிலிருந்து இடமேற்படுகிறது.

இராஜீய நிலைமை.

தங்கள் தேசத்தின் வருங்கால ராஜீய நிலைமையைப் பற்றி எல்லாருக்கும் முக்கியமானதாக உள்ள விஷயத்தைப்பற்றி நான் இனிப் பேசுகிறேன். நான் மனதில் உள்ளதைப் பட்டவர்த்தனமாகக் கூறிவிட விரும்புகிறேன் ஏனெனில் காலத்தின் நெருக்கடியை உத்தேசித்து என் பிரசங்கத்தைக் கேட்பவர்களும் படிப்பவர்களும் என் யோசனையைப் பூரணமாக அறிவது அவசியமாகும். சமீப சம்பவங்களுக்குப் பின்னுள்ளவற்றை முதலில் சுருக்கமாக ஞாபகப்படுத்துகிறேன். சென்ற அரைநூற்றாண்டில் இந்தியாவில் ராஜீய யோசனை தொடாந்தாப் போல் அபிவிர்த்தியடைந்து வந்திருக்கிறது. மகாயுத்தத்தைப் போன்ற சில சம்பவங்கள் இந்த வேகத்தை அதிகப்படுத்தி விட்டன. இதனால் 1919-ம் வருஷத்திய சீர்திருத்தம் ஒரு புதிய திட்டமான வழியில் சென்று பொதுஜன உணர்ச்சியுடையவர்களுக்குத் தேசசேவைசெய்ய அவகாசமளித்த போதிலும் சீக்கிரத்தில் சிலரால் குறைகூறப்பட்டு விட்டது. அந்த ராஜீய முன்னேற்றத்தில் மூலபுருஷர்களான இருவருள் ஒருவர் ராஜீய இந்தியாவின் நம்பிக்கையை வெகு சில பிரிட்டிஷாரே பெறக்கூடிய வழியில் மிகவும் அதிகமாகப் பெற்றிருந்தார். ஆனால் மிஸ்டர் மாண்டேகு

இந்தியர்களிடம் பெற்றிருந்த அபிமானம்கூட அவருடைய பெயரால் நடத்தி வைக்கப்பட்ட திட்டம் குறைகூறப்படு வதைத் தடுக்க முடியவில்லை. பலவிதச் சக்திகள் வேலை செய்து கொண்டிருந்தன. இந்தியாவில் தேசீய உணர்ச்சி அதிகமாக அபிவிர்த்தி யடையுமென்றும், அந்த அபி விருத்தி ராஜீய வாதிகளுடைய சம்பந்தத்தால் பிரிட் டிஷாருடைய படிப்பையும் அனுபவத்தையும் அனு சரித்ததாகவே இயற்கையாக விருக்குமென்றும் நிச்சயம் செய்வதில் இந்தச் சீர்திருத்தம் பயன்படாமலில்லை. இந்தியாவுக்கு வெளியில் இந்த இயக்கம் சரியாக அறியப் படவில்லை. இந்தியாவில் என்ன நேர்ந்திருக்கலாமென் பதைவிட என்ன நடக்கிறதென்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தால் பிரிட்டனுக்குச் சமீபத்திலும் உள்நாட்டிலும் அதிக வேலையிருப்பதால் இந்தியாவில் எவ் வளவு துரிதமாக அபிப்பிராயமும் யோசனையும் மாறி வரு கிறதென்று அது தக்கபடி கவனிக்கவில்லையென்று இந் தியா கூறுவது நியாயமற்ற தாகாது. ஒரு பக்கத்தில் பொறுமையின்மையினாலும் இன்னொரு பக்கத்தில் தகுந்த படி பாராட்டாததை அனுதாப மின்மையென்று கொண்ட தனாலும் காலமாகவாக அவநம்பிக்கையும் அதிகரித்துக் கொண்டே வந்தது. இதனால் இருதரப்பினரும் மாஸ்ச் சரியமின்றி விஷயத்தை நிதானித்துப் பார்க்கும் மனோ பாவத்தைக் கொள்ளுவது அசாத்தியமாகிவிட்டது. நான் இந்தியாவுக்கு வந்தபோது இந்தத் தலைமுறையில் எந்த ராஜப்பிரதிநிதியும் தமது வேலையைப் பற்றிக்கொள்ள வேண்டிய முக்கிய நோக்கத்துடன் வந்தேன். கவர்ன் மெண்டின் தலைவர் என்ற முறையில் ராஜப்பிரதிநிதிக்கு

நிர்வாக வேலே எத்தனையிருந்தபோதிலும் பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்தில் இந்தியா திருப்தியுடன் அமைதியாக முன் னேறிவருமாறு பாதுகாப்பது அவருடைய பிரதமகடமை யும் பாத்தியதையுமாகுமென்பதை எவரும் மறக்கமுடி யாது. பிரிவினைக்கான சக்திகள் வேலைசெய்து வந்திருப் பதை நான் விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. வகுப்பு வித்தியாசங்கள், அதனால் யோசனையில் வேற் றுமை, மதங்களில் வேற்றுமை, முதலியவையும் இன்னும் பல சக்திகளும் சேர்ந்து வேலை செய்து இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் ஒற்றுமையைப் பாதுகாப்பதை மிகவும் கடினமான வேலையாக்கி விட்டன. ஆயினும் இந்த உயர்ந்த நோக்கத்தை நடத்திவைக்க எத்தனை பிரயாசைப்பட்டா லும் மிகையாகாது என்று நான் கருதுகிறேன். தனது சுயமதிப்பை அதிகமாக உணர்ந்து ஒவ்வொரு வருஷமும் தனது தேசிய உணர்ச்சியை அதிகமாகப் பெற்றுவரும் இந்தியா தானுகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் ஒரு மட்டமான ஸ்தானத்தைக் காலவரையறையின்றி வகித்து வரச் சம்மதிக்குமென்று வருங்காலத்தில் எதிர்பார்ப்பது சாத்தியமில்லை.

அக்டோபர் அறிக்கை.

இந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த முக்கிய விஷயத்தைப்பற்றி தப்பபிப்பிராயம் ஏற்படக்கூடாதென் பதற்காகவும் தான் சென்ற வருஷம் பிரிட்டிஷ் கவர்ன் மெண்டார் இந்தியாவின் அரசியல் வளர்ச்சியின் இயற்கை யான முடிவு குடியேற்ற நாட்டு அந்தஸ்து அடைவது என்பதே தங்கள் அபிப்பிராயம் என்பதைப் பகிரங்கப்

படுத்த எனக்கு அதிகாரம் கொடுத்தார்கள். அவ்விதமே நான் அறிக்கை வெளியிட்டேன். அது இப்போதும் ஊர்ஜிதப் படுத்தப்படுகிறது. சைமன் கமிஷன் ரிபோர்ட்டு வெளியான பின் கூடியவரை விரிவாக ஒரு மகாநாடு கூட்டுவதாகவும் அதில் கிரேட்பிரிட்டன் பிரதிநிதிகளும் இந்தியாவின் பிரதிநிதிகளும் தாராளமாகக் கலந்துபேசி பின்னல் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்கவேண்டிய ஒரு திட்டத்தை முடிவுசெய்யலாமென்றும் அந்த சமயத்தில் கவர்ன்மெண்டார் ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அந்த சைமன் கமிஷன் ரிபோர்ட்டு இப்போது வெளியாகிவிட்டது. அதிலடங்கியுள்ள சிபார்சுகளைப்பற்றி எவ்வித அபிப்பிராய மிருந்தாலும் பக்ஷாபாதமற்ற தன்மையுடன் படிக்கும் எவரும் அதைகஷ்டமான பிரச்னையைத் தீர்த்துவைக்க ஒரு வழி சொல்லக்கூடிய ஒரு பெரிய திட்டமாகவே சொல்லுவார்கள். இதைமறுக்க முடியாது. இந்த ரிபோர்ட்டின் செல்வாக்கு விசேஷமானது தான். பார்லிமெண்டு பிரதிநிதிகளுடனும் இந்தியாவின் பிரதிநிதிகளுடனும் கலந்து பேசி பிறகு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கவிருக்கும் திட்டத்தை முன்னறிந்து சொல்வது இந்த கமிஷனரின் வேலையன்று. அதன் வேலை யின்னதெனஸர் ஜான் சைமனே முன்னம் பின் வருமாறு விளக்கியிருக்கிறார். ராயல் கமிஷன் பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியலையே திட்டம் செய்ய முயற்சிப்பதாக ஒருவரும் கருதக்கூடாது. எங்களுடைய வேலை மிக முக்கியமானது ஆனல் நாங்கள் செய்யவேண்டியது மேற்சொன்ன வேலையன்று. நியாயமான அநுதாபத்துடன் கூடிய உண்மை

யான ரிபோர்ட்டொன்றைப் பார்லிமெண்டுக்குச் சமர்ப் பிப்பதுதான் எங்கள் வேலை. நாங்கள் எங்கள் ரிப் போர்ட்டைச் சமர்ப்பித்து விட்டபின் இந்தியாவின் பிற் கால அரசியலுக்குத் தேவையான விஷயங்களை எடுத்துச் சொல்ல இந்தியாவுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதன் பின்னரே கிரேட்பிரிட்டனும் இந்தியாவும் ஒன்று சேர்ந்து பிற்கால அரசியலை ஒரு திட்டப்படுத்தும் ரிபோர்டு சம்பந்தமாக இந்தியாக் கவர்ன்மெண்டு தனது அபிப்பிராயத்தை வெளியிட வேண்டிய சமயம் இப் போது ஏற்பட்டிருக்கிறது. பார்லிமெண்டால் நியமிக்கப் பட்ட கமிஷன் தமது உண்மையான அபிப்பிராயங்களை வெளியிடாது போனல் அது எப்படி கடமையினின்று தவறியதாக ஆகுமோ அவ்விதமே இந்தக் கமிஷன் ரிபோர்ட்டைப்பற்றி இந்தியாக் கவர்ன்மெண்டார் தங்கள் பொறுப்பை உணர்ந்து ஆராய்ச்சி செய்யாதுபோனல் அவர்களின் கடமையினின்று தவறியவராவார்கள். இது வரை அந்த ரிப்போர்ட்டைப்பற்றிக் கவர்ன்மெண்டார் மேலெழுந்தவாரியாகவே கவனஞ் செலுத்தியிருக்கின்ற னர். ஆனல் முடிவாக அபிப்பிராயம் தெரிவிக்குமுன் உத்தியோகப் பற்றற்ற இந்தியரின் பிரதிநிதிகளர்க விருப் பவர் சிலருடன் அதைப்பற்றி கலந்து ஆலோசிக்க ஒரு சந்தர்ப்பம் எனக்கு ஏற்படவேண்டுமென நான் நினைக் கிறேன். சமஸ்தான பிரதிநிதிகளுடனும் சமஸ்தானதி பதிகள் சிலருடனும் அடுத்த வாரம் இது சம்பந்தமாகக் கலந்துபேச உத்தேசித்திருக்கின்றேன். பிரிட்டிஷ் இந் தியாவிலுள்ள பற்பல கட்சிப் பிரதிநிதிகளையும் இதற் காகச் சவுகரியப்படி என்னைச் சந்திக்கும்படியும் நான்

அழைக்கலா மென்றிருக்கிறேன். ஆனல் இதைப்பற்றி யெல்லாம் அமைதியுடன் யோசிப்பதற்கில்லாமல் ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதும் எனக்குத் தெரியும். சென்ற சில மாதங்களாகப் பொது ஜனங்கள் கவனத்தை இழுத்து வரும் சம்பவங்களால் அவ்வித நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மகாநாட்டில் பேசப்படவிருக்கும் விஷயங்கள் இன்னவைதான் என முன்னறிந்து சொல்ல என்னல் முடியாதென மறுத்தேன். நான் பிரிட்டிஸ் கவர்ன்மெண்டின் நோக்கத்தையும் பரஸ்பரம் விஷயங்களைத் தெளிவாக விட்டுப்பேசவே இம்மகாநாடு கூட்டப்படுவதாகவும் எடுத்துச்சொல்லியும் காந்திஜீ சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து தமது செல்வாக்கால் தமது நாட்டினரை சட்டங்களைப் பகிரங்கமாக மீறும்படி கூறினர். முன் பின் பாராமல் இதில் அவர் இறங்குவதற்கு முன் நான் கடைசியாக இதனல் ஏற்படக்கூடிய பலாபலன்களை விளக்கி எச்சரிக்கை செய்ய பலவிதமுயற்சி செய்தேன். நான் எச்சரிக்கை செய்தும் அது செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகி விட்டது. இந்த சட்டமறுப்பு இயக்கம் மூன்று மாதங்களாக அபிவிருத்தியடைந்து வருகிறது. அதைப் பற்றிப் பலரது அபிப்பிராயம் என்னவானலும் பல வழிகளில் அதனல் இதுவரை ஏற்பட்டுள்ள நஷ்டங்கள் யாவரும் அறிந்தனவே. அந்த இயக்கத்தில் சேர்ந்தவர்கள் அவ்வியக்கம் நியாயமான ராஜீய முறையைச் சேர்ந்ததென்றும் துரதிர்ஷ்ட வசமாக அவசியம் ஏற்பட்டு விட்டதால் அதை ஆரம்பிக்க வேண்டி வந்து விட்டதாகவும் நமக்குக் கூறுவார்கள். நான் அதை ஒப்புக்கொள்ள மாட்டேன். பாமர ஜனங்களைக்கொண்டு கவர்ன்மெண்

டின் அதிகாரத்தைக் குலைத்துவிட வேண்டுமென்று இம் முயற்சி செய்யப்படுவதாகவே நானும் எனது கவர்ன் மெண்டாரும் கருதுகிறோம். அவ்வியக்கம் அபிவிருத்தி யடைந்து வரும் மாதிரியைப் பார்க்கையிலேயே அது சட்டவரம்பு மீறியதென்றும், அபாயகரமானதென்றும் தெரிகிறது. இந்த இயக்கத்தை அஹிம்சையுடன் நடத்த அதன் தலைவர்கள் எண்ணினாலும் பொதுஜன இயக்கமாக இது இருக்கையில் வேறொரு முறையில் இது பலாத் காரத்தை வளர்ப்பதாகவே ஆகும். கவர்ன்மெண்டு நடை பெற வொட்டாமற் செய்யும் எண்ணத்துடன் முயற்சி செய்யப்படுகையில் கவர்ன்மெண்டு அதை எதிர்த்து நிற்கவாவது வேண்டும் விட்டுவிட்டுப் போகவாவது வேண்டும். கைத்தொழில் பிரதேசத்தில் ஏற்படும் பொது வேலை நிறுத்தத்துக்குச் சமமாகவே இந்த இயக்கம் இருக் கிறது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு சமீபத்தில் இத்தகைய வேலை நிறுத்தத்தைத் தான் தன்னாலான எல்லாவித முயற்சிகளையும் செய்து நிறுத்தியது. இங்கு இன்னும் அதிக அபாயமான ஆயுதங்களை உபயோகிக்கவும் முயற் சிக்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் கார்யக் கமிட்டி சமீபத்தில் போலீஸையும் துருப்புகளையும் கட்டளைக்கிணங் காமலிருக்கச் செய்யும் நோக்கத்துடன் சமீபத்தில் நிறை வேற்றிய தீர்மானத்தைப் பார்த்தால் இவ்வியக்கக்கர்த்தர் கள் இதை எவ்வளவு தூரம் வளர்த்துவிட முயற்சித்து வரு கிறார்கள் என்பது தெரியும். அதனால் அத்தகைய தீர்மா னத்தை நிறைவேற்றிய சபையைச் சட்டவரம்பு மீறிய ஸ்தா பனமெனப் பஹிரங்கப்படுத்துவதைவிடக் கவர்ன்மெண் டுக்கு வேறு வழியில்லை. இவ்விதம் அழிவுக்கு வழிதேடக்

கூடிய முயற்சியைத் தடுக்க நான் உடனே வேலை செய்யா விட்டால் இந்தியாவுக்குப் போலி நண்பன் என்றுதான் என்னைக் கூப்பிடவேண்டும். எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தும் இந்த சட்ட மறுப்பு இயக்கத்தைத் திட்டமாகக் கண்டிக்கக்கூடிய பொதுஜனத் தலைவர்களும் இருக்கிறார் கள் என்பதை நான் திட்டமாகத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். அவர்களைப் பலரும் பின்பற்றவேண்டுமென நான் விரும்புகிறேன். இந்தியாவிலுள்ள பிரஜைகளுக்குச் சட்டத்தை மீறுவதும் வரி கொடுக்க மறுப்பதும் மேன்மை யான காரியங்கள் என்றும் தேசாபிமான காரியங்கள் என்றும் எடுத்துச்சொல்வது மிக்க அபாயகரமானச் செயல் அல்லவா? இவ்வித உணர்ச்சியை இப்போது ஊட்டிவிட்டால் அபாயகரமான இந்தக் கிருமிகள் இந்திய மஹா ஜனங்கள் என்ற உடலில் புகுந்துவிடுமானால் இவர் களது முயற்சியால் பிறகு ஏற்படப்போவதாகச் சொல்லப் படும் இந்தியக் கவர்ன்மெண்டையும் ஸ்தம்பிக்கச் செய்யும்வரை அக்கிருமிகள் ஒன்று பலவாகப் பெருகிக் கொண்டுதானிருக்கும். இந்திய மந்திரிகள் சீக்கிரத்தில் நிலவரியையும் மற்ற வரிகளையும் விதிக்கவும் வசூலிக்கவும் ஜவாப்தாரிகளாக வரலாம். அப்போது பொதுவான ராஜீய அதிருப்தியை வெளியிட வரி செலுத்த மறுப்பதும் ஒரு மார்க்கமென்ற உணர்ச்சியை தேச மஹா ஜனங்களுக்கு ஊட்டியவர்களை அந்த மந்திரிகள் வந்தனம் செய்யமுடி யாத நிலையில்தானிருப்பார்கள். அதனால்தான் அந்தக் கொள்கையை எதிர்த்துப் போராட நான் கவர்ன்மெண் டுக்குப் போதுமான அதிகாரங்களைக் கொடுக்கவேண்டி யிருக்கிறது. சாதாரண காலத்தில் இராஜப்பிரதிநிதி தம

குள்ள விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பது நியாய மல்லாத காரியம்தான். ஆனால் இப்போது சாதாரண காலமாகவில்லை. சட்டப்படி ஏற்பட்ட இந்தியச் சக்கர வர்த்தியின் ஆட்சியைக் குலைக்க ஏற்பாடு செய்யப்படுகை யில் என்னுடைய கடமை எதுவென்பதில் நான் சந்தேகம் கொள்ளவேண்டிய அவசியமேயில்லை.

துன்பத்திற்கு ஆளான நிரபராதிகளிடத்தில் அனுதாபம்.

இப்பொழுது நாம் ஆலோசனை செய்துகொண்டிருக் கும் நிலைமையில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் சட்ட மறுப்பு இயக்கத்தில் அனுதாபத்தைக் காட்டும் பொது ஜனங்களுக்கும் போராட்டம் ஏற்படுமென்பதை யும், அதன் பலனைப் பலர் தவிர்க்க முடியாத விதமாக சரீரத் துன்பத்திற்கு ஆளாவார்களென்பதும் எனக்குத் தெரியாமலில்லை. குற்றம் செய்வோருடன் நிரபராதிகளும் சில சமயங்களில் கஷ்டப்படவேண்டி வருமென்பதும் ஆரம்பம் முதல் தெரிந்துவிட்டது. இவ்விதம் நடந்திருக் கும் இடங்களில் நான் அதற்கு மிகவும் வருந்துவதோடு, அவ்விதம் கஷ்டத்திற்கு ஆளானோருக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் ஆரம்பப் பொருப்பு யாருடையதென்பதைக் கவனிக்க வேண்டும். தீயை அணைப்பதற்காக நெருப்பை அணைக் கும் படையைத் தருவிக்கையில் அதனால் அதிக நஷ்டமு மேற்படலாம். அதனால் நஷ்டமேற்பட்டாலும் தீப்பிடித்த தற்கு அந்தப் படைதான் காரணமென்று சொல்ல முடியுமா? ஆகவே ஆரம்பப் பிசகு யாரிடத்திலிருக்கிற தென்னும் விஷயத்தில் நாம் கண்களை மூடிக்கொள்ளுவ

தில் உபயோகமில்லை. பொதுவாகச் சொல்லுமிடத்து தீயை அணைப்போர் மீது தோஷங் கூறுவதற்கு இடமிருக்கலாமாயினும், மிகுந்த உறுதியுடனும், தைரியத்துடனும், தங்களுடைய உயிர்களையும் லக்ஷியம் செய்யாமல் தங்களுடைய வேலைகளைச் செய்துவந்திருக்கும் சிவில் ராணுவ அதிகாரிகளை நான் போற்றுகிறேன். போலீசாரில் பலர் கோரத்தனமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பல இடங்களில் அவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் மிகுந்த கஷ்டங்களுக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செய்யவேண்டி யிருந்த அதிக வேலைகளுக்கு சில மாகாண கவர்ன்மெண்டுகள் அதிகப்படி அலவுன்ஸ் கொடுத்திருப்பதையும், அவர்களுடைய விசேஷ ஊழியங்களைப் பாராட்டி சன்மானம் செய்திருப்பதையுங் கண்டு நான் சந்தோஷப்படுகிறேன்.

சட்ட மறுப்பை எதிர்ப்பதேன்?

இப்போதைய இயக்கம் மிகக்கடுமையானதாக இருப்பதற்காக என்னுடைய அபிப்பிராயத்தை மயிரிழையும் நான் எந்தப் பக்கத்திலும் திருப்பிக்கொண்டு விடவில்லை. இந்தியாவின் தேசிய உணர்ச்சியில் அனுதாப மின்மையால் நான் சட்டமறுப்பு இயக்கத்தை எதிர்த்து வரவில்லையென்பது அங்கத்தினர்களுக்குத் தெரியும். இந்தியா இப்பொழுதே பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கவும் விஷயங்களுக்கு அவசியமான ஏற்பாடுகளுடன் தன்னுடைய விஷயங்களைத் தானே நிர்வகித்துக் கொள்ளும் நிலைமையை இந்தியா அடையும்படி செய்ய வேண்டுமென்பதே என்னுடைய விருப்பமென்பதை நான்

எப்பொழுதும் மறைத்துக் கொண்டதில்லை. ஆகவே இந்த சமயத்தில் இரண்டு முக்கிய அம்சங்களை என் அகக் கண்முன் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தில் என்னுடைய நிலைமையையும் என்னுடைய கவர்ன்மெண்டின் நிலைமையையும் தெளிவாகச் சொல்லி விட விரும்புகிறேன். சட்டமறுப்பு இயக்கம் நடந்து வரும் வரையில் அதை நடத்திவருவோர் எத்தகைய உணர்ச்சி யுடன் அதை நடத்திவந்தாலும், எங்களுடைய முழு சக்தியையும் கொண்டு அதை எதிர்த்து வருவோம். அது வேண்டுமென்றில்லாமல் இந்தியாவுக்கு நஷ்டத்தை உண்டு பண்ணக்கூடிய வழியில் இந்தியாவிலுள்ள ஸ்திரீகளையும் புருஷர்களையும் ஈடுபடுத்துவதாக இருக்கிறதென்று மனப் பூர்வமாக நான் நினைக்கிறேன். சரியான வழியில் நடத் தப்படும் தேசீய இயக்கத்தை தோற்கடிக்கவேண்டுமென்ற எண்ணமும் எனக்கில்லை. என்னல் சாத்தியமானவரை இந்தியாவின் ராஜீய அபிலாஷைகளை சட்ட பூர்வமாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்றே நான் விரும்பு கிறேன்.

ஒரு முடிவான வழி.

எல்லாத் தரத்தினரும் சேர்ந்து யோசிப்பதைக் காட்டிலும் நேர்மையான வழி என்ன இருக்கிறது. இங்கு மெஜாரிட்டி ஓட்டுப் பலத்தைக்கொண்டு ஒன்றையும் முடிவு செய்துவிடப்போகிறதில்லை. ஒருவருடனெருவர் நெருங்கி தினமானம் பேசி இந்தியாவும் கிரேட்பிரிட்ட னும் பரஸ்பரம் அனுகூலமான வழியில் வேலை செய்வது சாத்தியமாகும்படி செய்யக்கூடிய முடிவானவழியையே

இந்த மகாநாட்டில் கண்டுபிடிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த மகாநாடு எப்பொழுது கூடுமென்பது ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. அதனுடைய ஜோலியென்னவென்பதை இன்னும் தெளிவாக நான் சொல்லுகிறேன்.

மகா நாட்டின் ஜோலி.

நான் சென்ற நவம்பர் மாதம் முதல் தேதியில் வெளியிட்ட அறிக்கையிலிருப்பதைவிட அதிகப்படியான எவ்விதவரையறையையும் ஏற்படுத்துவது நியாயமாகாதென்றும், அந்த அறிக்கையின் வாசகங்கள் குறியிடும் பூரண சுதந்திரமுடையதாக மகாநாடு இருக்கவேண்டுமென்றும் தீர்க்காலோசனைக்கும் பிறகு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முடிவு செய்திருக்கிறார்கள். ஸைமன் கமிஷன் யாதாஸ்தையோ, வேறு தஸ்தாவேஜுகளையோ உதவியாக வைத்துக்கொண்டு மகா நாடு சுயேச்சையான வழியில் வேலை செய்யலாம். அந்த யாதாஸ்து அல்லது தஸ்தாவேஜுகளால் மகாநாட்டின் சுயேச்சைக்கு எவ்விதப் பாதகமுமேற்படாது. இத்தகைய மகாநாட்டின் மூலமாக இரண்டு தேசத்தினரும் எல்லாக் கக்ஷியினரும் எல்லா உரிமைகளும் கண்ணியமாக ஒப்புக்கொள்ளக் கூடிய முடிவுக்கு வருவது சாத்தியமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள். அவ்விதம் அந்த மகாநாட்டில் ஒப்புக்சொள்ளப்படும் முடிவை ஆதாரமாகக்கொண்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பார்லிமெண்டில் பிரேரணைகளைக் கொண்டு வருவார்கள். இவ்விதம் மகாநாட்டின் ஜோலியை விவரித்து விட்டதிலிருந்து இது வெறும் விவாதத்திற்காக நடைபெறும் கூட்ட

மாக இராதென்பதைத் தெரிந்து கொள்ளலாம். இது இரு தேசத்தினரின் பிரதிநிதிகளும் அடங்கியதாக இருக்கும். அவர்கள் ஒப்புக்கொள்ளும் முடிவை ஒட்டி பார்லிமெண்டில் குறிப்பான பிரேரணைகள் கொண்டு வரப்படும். ஆகவே வெறும் வாய்விவாதமாக இல்லாமல் இந்தியப் பிரச்சினையை எல்லா அம்சங்களையும் பூர்ண சுயேச்சையுடன் விவாதிக்க சர்வகக்ஷி மகாநாடு உரிமையுடையதாக இருக்கும். இந்தியர்களில் சிலர் இதுவரை எத்தகைய மனோபாவத்தைக் காட்டியிருந்தாலும், இந்தியாவிலுள்ள எல்லாக் கக்ஷியினரும் இந்த உருவான வேலையிலிறங்குவார்களென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இன்னமும் நம்பியிருக்கிறார்கள். கிரேட்பிரிட்டினும் இந்தியாவுமாவது, அல்லது இந்தியாவிலுள்ள பல்வேறு உரிமைகளுமாவது ஒரு முடிவுக்கு வருவது அசாத்தியமென்று கருதுவோருடைய எண்ணம் பொய்த்துப் போகும்படி பட்டவர்த்தனமாக எல்லா அம்சங்களைப் பற்றியும் இந்த மகாநாட்டில் விவாதிப்பதால் ஏன் ஒரு முடிவுக்கு வரக்கூடாதென்பது எனக்குத் தெரியவில்லை. இந்தியப் பிரதிநிகளுக்கு எல்லாவித உதவிகளையும் செய்ய என்னுடைய கவர்ன்மெண்டார் ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள். அதற்காக ஸர் ஜியாப்ரிகார் பெட், மிஸ்டர் லத்தீபி, ஸ்ரீமான் பாஜ்பாய் இவர்களை அவர்களுக்கு உதவியாக அனுப்ப கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தியாவின் பெருமை.

கனவான்களே, என்னுடைய உத்தியோக காலத்தில் சிறிது பாகம்தான் பாக்கியிருக்கிறது. நான் இப்பொழுது

நண்பன் ஹோதாவில் இந்த வார்த்தைகளைச் சொல்லி யிருக்கிறேனேயன்றி கவர்னர் ஜெனரல் என்ற ஹோதா வில் சொல்லவில்லை. நான் இந்தியாவில் இருந்திருக்கும் காலத்தில் இந்தியாவின் நன்மைக்குற்றதாக இல்லாத எவ் விஷயத்தையும் நான் செய்யவில்லை யென்று எனது மனச் சாக்ஷி கூறுகிறது. என்னிடம் நட்புக்காட்டியுள்ள பல ருக்கும் இருந்துவரும் உணர்ச்சி யின்னதென்பதை நான் உணர்ந்திருக்கிறேன். நான் இந்தியாவிடம் விடைபெற் றுக்கொண்டு போன பிறகும் இப்பொழுது இருந்துவரும் தொல்லைகள் மறந்துபோன பிறகும்கூட அவர்கள் என்னை நண்பனுகவே மதிப்பார்களென்று கருதுகிறேன்.

இந்திய சரித்திரமும் அதனுடைய அமைப்பும் அதைப்பற்றி சின்ன புத்தி காட்டுகிறவர்களைக் கண்டிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன.

இந்தியப் புதிரை அவிழ்க்க மார்க்கம்.

இந்தியாவும் கிரேட்பிரிட்டனும் சேர்ந்து முயற்சி செய்வதன் மூலமாக இந்தியப் புதிரை அவிழ்ப்பதற்கு மார்க்கமேற்படும். இதற்கு மிகுந்த நம்பிக்கை வேண்டும். இந்த நம்பிக்கை ஏற்படுவதற்கு அபூர்வசக்தி வேலைசெய்ய வேண்டுமென்று நம்மில் பலர் நினைக்கக்கூடியவர்களாக இருக்கிறோம். ஆனுல் அந்த அபூர்வ சக்திகளின் காலம் மலையேறிவிட்டதென்றும் நம்மில் பலர் சொல்லுகிருர்கள். ஆனுல் இந்தியாவில் பாரமார்த்தீக சக்தி அதிகமாக இருக் கிறது. அசாத்தியமான காரியங்களும் அதனுல் சாத்திய மாகி விடுகின்றன. நம்மிரு தேசங்களுக்கும் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்திவிடின் நம்மைச் சுற்றியுள்ள மலை

களையும் தகர்த்தெறிவதற்கு கண்ணுக்குத் தெரியாத சக்தி நமக்கு ஏற்பட்டுவிடும்.

நல்ல சந்தர்ப்பம் நழுவ விடப்பட்டது

சென்ற நவம்பர் மாதத்தில் காட்டிய நட்பானது எவ்வித உணர்ச்சியுடன் காட்டிக் கொள்ளப்பட்டதோ அதே உணர்ச்சியுடன் அது இந்தியாவின் சார்பாகப் பேசக் கூடியவர்களால் ஸ்வீகரிக்கப்பட்டிருப்பின் அதனால் இங்கிலாந்தில் எவ்வித நிலைமை ஏற்பட்டிருக்குமென்பதை உங்களைக் காட்டிலும் அதிகமாகத் தெரிந்து கொள்ளக்கூடிய நிலைமையில் நான் இருந்து வருகிறேன். அதற்குப் பிறகு இருதரப்பிலும் சொல்லப்பட்ட பல விஷயங்கள் மாற்றிச் சொல்லப்பட்டிருக்கலாம். அல்லது சொல்லப்படாமலிருக்கலாம். புதிதாக தப்பெண்ணங்கள் ஏற்படாமலிருந்திருக்கும். பல அம்சங்களையும் சரியாகக் கவனிப்பதற்கு சவுகரியமான நிலைமை ஏற்பட்டிருக்கும் முன்னெக்காலத்திலுமிருந்ததைவிட திருப்திகரமான முடிவை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு சவுகரியமான நிலைமை ஏற்பட்டிருக்கையிலும் முழுப் பிரச்சினையையும் சுயேச்சையாகவும் எவ்வித பூர்வ பந்தமுமில்லாமலும் பரிசீலனை செய்வதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கையிலும், இதை காங்கிரஸ் கக்ஷியினர் நழுவவிட்டு விட்டது மிகவும் வருந்தத் தக்கதாகும். இப்பொழுதும் நல்ல புத்தி உதயமாவதற்குக் காலம் பிற்பாடாகி விடவில்லையென்றும், இந்தியாவிலுள்ள எல்லா ராஜீய கக்ஷிகளும் ஒன்றுசேர்ந்து கிரேட்பிரிட்டனுடன் சேர்ந்து இந்தியாவின் ராஜீய அபிலாஷைகளை கிரியாம்சையில் பூர்த்தி செய்து வைப்பது சாத்தியப்படுமென்றும் நான் நம்புகிறேன்.

இரண்டு வழிகள்

இப்பொழுது இரண்டு வழிகளிருக்கின்றன. ஒன்று குழப்பம், ஒற்றுமையின்மை, ஏமாற்றம், எதிர்பார்த்தது கிடைக்காமை இவைகளில் கொண்டுபோய்விடும். மற்றொன்று நாம் கனவு கண்டுகொண்டிருக்கும் லக்ஷியமாகிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சரி சமத்துவமான அந்தஸ்தில் கொண்டுபோய்விடும். இந்த இரண்டு வழிகளில் எதைப் பின்பற்றுவதென்பதை இந்தியா முடிவு செய்து கொள்ளவேண்டும். அது சரியான வழியைத் தெரிந்தெடுக்கும்படி செய்யவேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

சமரஸ முயற்சிக்கான கடிதப் போக்குவரத்துகளின் விபரம்

சென்ற இரண்டு மாத காலமாகத் தங்களுக்கும் சிறையிலிருந்து வரும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் நடந்துள்ள கடிதப் போக்குவரத்தின் விவரங்களை அடக்கிக் கொண்டுள்ள அடியிற் கண்ட அறிக்கையை பூனாவில் 1930 செப்டம்பர் 5ஷ ஒரு மணிநேரம் மகாத்மா காந்தியுடன் பேசிய பிறகு ஸர் டேஜ்பகதூர் ஸாப்ருவும் ஸ்ரீமான் ஜெயகரும் வெளியிட்டிருக்கிறார்கள் :—

தேசத்தில் அமைதியான நிலைமையை ஏற்படுத்துவதற்காக சென்ற 2 மாத காலமாய் நாங்கள் செய்துவந்திருக்கும் முயற்சி சம்பந்தமான விவரங்களாவன :—

1. சென்ற 1930 ஜூன் மாதம் 20-ம் தேதி லண்டன் "டெயிலி ஹெரால்டு" பத்திரிகையின் விசேஷ நிருபரான மிஸ்டர் ஜார்ஜ் ஸ்லோகோம்புக்குப் பண்டித மோதிலால் நேரு பேட்டி கொடுத்தார். அப்பொழுது சர்வ கக்ஷி மகாநாட்டுக்குப் போகும் விஷயமாகத் தமக்கிருந்து வரும் அபிப்பிராயத்தை அவர் அந்தப் பிரதிநிதியிடம் அறிவித்தார். அதன் விவரம் ஏற்கனவே இந்தியாவில் பிரசுரமாகியிருக்கிறது.

2. அதற்குப் பிறகு பம்பாயில் பண்டித மோதிலால் நேருவை மிஸ்டர் ஸ்லோகோம்ப் கண்டு பேசினார். அதன் பலனாகச் சில நிபந்தனைகளை மிஸ்டர் ஸ்லோகோம்ப்

தயார் செய்து பண்டித மோதிலால் நேருவின் அங்கீகாரத்திற்கு அனுப்பினர். பம்பாயில் பண்டித மோதிலால் நேரு, ஸ்ரீமான் ஜெயகர், மிஸ்டர் ஸ்லோகோம்ப் இவர்கள் மட்டில் இருந்த கூட்டத்தில் இந்த நிபந்தனைகளைப் பண்டித மோதிலால் நேரு ஒப்புக்கொண்டார். மிஸ்டர் ஜெயகரோ வேறு எந்த மூன்றுவது மனுஷ்யரோ ராஜப் பிரதிநிதியை அணுகிப் பேசுவதற்கு அஸ்திவாரமாக இருப்பதற்காக இந்த நிபந்தனைகளின் பிரதியொன்றை மிஸ்டர் ஸ்லோகோம்ப் ஸ்ரீமான் ஜெயகருக்கு அனுப்பினர்.

3. அவ்விதமே மிஸ்டர் ஸ்லோகோம்ப் ஸர் டேஜ் பகதூர் ஸாப்ருவுக்கும் ஒரு கடிதம் எழுதினர். அதனுடன் இந்த நிபந்தனைகளின் பிரதி யொன்றையும் அனுப்பியிருந்தார். இந்த நிபந்தனைகளை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு ராஜப்பிரதிநிதியை நாங்கள் அணுகுவதைப் பண்டித மோதிலால் நேரு அங்கீகரித்திருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் அவர் சொலியிருந்தார்.

பண்டித மோதிலாலின் நிபந்தனைகள்.

இந்த தஸ்தாவேஜின் விவரத்தை நாங்கள் கீழே குறிப்பிடுகிறோம். மூன்றுவது மனுஷ்யர் ராஜப்பிரதிநிதியை அணுகுவதற்கு அஸ்திவாரகமாக இருக்கும் பொருட்டு 1930 ஜூன்மாதம் 25-ம் தேதி பண்டித மோதிலால் நேருவுக்கு அனுப்பப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிபந்தனைகளாவன:—

சில சந்தர்ப்பங்களை உத்தேசித்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் இந்தியா கவர்ன்மெண்டாரும் பூரண

சுயேச்சையுடன் கூடிய சர்வகக்ஷி மகாநாடு எவ்வித முடிவைச் செய்யுமென்றுவது, அல்லது அந்தச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக பிரிட்டிஷ் பார்லிமெண்டு எவ்வித மனோபாவமுடையதாக இருக்குமென்றுவது முற் கூட்டியே முடிவு செய்து சாத்தியமில்லாம லிருந்தாலும், இந்தியாவிலிருந்து வரும் ஸ்பெஷல் தேவைகளையும், இந்தியா வெகுகாலமாக கிரேட்பிரிட்டனுடன் சம்பந்தப்பட்டிருப்பதையும் உத்தேசித்தும். சர்வகக்ஷி மகாநாட்டின் முடிவையொட்டியும் அவசியமான பரஸ்பர ஏற்பாடுகளுக்கும் அதிகார மாறுதல் நிபந்தனைகளுக்கு முட்பட்டு இந்தியாவின் பூரண ஜவாப்தாரியான ஆட்சிக் கோரிக்கையை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக அந்தரங்கமாகவேனும் உறுதி கூறும் பக்ஷத்தில் அத்தகைய உறுதிமொழியை அல்லது அத்தகைய உறுதிமொழி கொடுக்கப்படுமென்று மூன்றுவது மனுஷியர் மூலமாகக் கிடைக்கும் செய்தியை மகாத்மா காந்தியிடமும் பண்டித ஜவஹர்லால் நேருவிடமும் நேரில்போய்த் தெரிவிக்க பண்டித மோதிலால் நேரு ஒப்புக்கொள்ளுவார். அத்தகைய உறுதிமொழி கொடுக்கப்பட்டு அது அங்கீகரிக்கப்பட்டும் விடும்பக்ஷத்தில் பொதுப்படையான சமரஸ முறையை அனுஷ்டிப்பது சாத்தியமாகும். அதனால் ஏககாலத்தில் சட்டமறுப்பு இயக்கத்தையும், அடக்குமுறையையும் நிறுத்தி விடுவதற்கு இடமேற்படுவதோடு, ராஜீயக் கைதிகளைத் தாராளமாக விடுவிப்பதும் சாத்தியமாகும். அதன் மேல் இருதரத்தினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டுக் காங்கிரஸ் சர்வகக்ஷி மகாநாட்டில் சம்பந்தப்படும்.

ராஜப்பிரதிநிதிக்குக் கடிதம்.

இந்த தஸ்தாவேஜை அஸ்திவாரமாகக்கொண்டு ஜூலை மாத ஆரம்பத்தில் ஒரு தடவைக்கு அதிகமாக ராஜப்பிரதிநிதியை நாங்கள் கண்டு தேசத்தில் இருந்து வரும் நிலைமையைத் தெரிவித்ததோடு முடிவாக அடியிற் கண்ட கடிதத்தையும் எழுதினோம் :—

ஸிஸில் ஹோட்டல்,
ஸிம்லா, ஜூலை 13.

பிரியமுள்ள லார்டு இர்வினுக்கு,

தேசத்தில் ஏற்பட்டுள்ள ராஜீய நிலைமையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர அனுமதி கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம். தேசத்திலுள்ள தற்கால ராஜீய நிலைமையானது சாதாரண ஸ்திதியைத் திரும்ப ஏற்படுத்துவதற்காகக் காலதாமதமெதுவுமின்றிச் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவதை இன்றியமையாததாகச் செய்வதாக நாங்கள் அபிப்பிராயப்படுகின்றோம். நாங்கள் சட்டமறுப்பு இயக்கத்தால் உண்டாகக் கூடிய அபாயங்களை உணர்ந்திருக்கின்றோம். இந்த இயக்கத்தில் எங்களிருவரில் எவரும் அனுதாபங்கொண்டதில்லை, அல்லது அதில் சேர்ந்ததுமில்லை. ஆனால் ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டிற்கும் நடக்கும் போராட்டத்தில் அடக்கு முறையை மேற்கொள்ளவேண்டியதாகிவிட்டதென்றும், இதனால் பொது ஜனங்களுடைய மனக்கசப்பு அதிகரித்துவிட்டதென்றும் நாங்கள் கருதுகின்றோம். இப்போராட்டத்தில் தேசத்தின் உண்மையானதாயும் நிரந்தரமானதாயுமிருக்கும் நலங்கள் தியாகம் செய்யப்படக்கூடுமென நாங்கள் நினைக்கின்றோம். இயக்கத் தலை

வர்களில் சிலருடன் விவாதித்துச் சாதாரண நிலைமையை ஏற்படுத்துவதற்கு உதவி செய்யும்படி அவர்களைத் தூண்ட முடியுமென நாங்கள் நம்புகின்றோம். அவ்வாறு செய்து தற்கால நிலைமையைச் சீர்ப்படுத்த முயலவேண்டுவதை நாங்கள் எங்களுடைய தேசத்திற்கும் கவர்ன்மெண்டிற்கும் செய்யவேண்டிய கடமையாகக் கருதுகின்றோம். தங்களுடைய பிரசங்கத்தைப் படித்ததிலிருந்து தாங்களும் தங்களுடைய கவர்ன்மெண்டாரும் சட்டமறுப்பு இயக்கத்தை எதிர்த்து நிற்கவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டிருப்பதாக உணர்ந்திருந்தபோதிலும் தாங்கள் அரசியல் பிரச்சினைக்கு யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய பரிகாரத்தைக் கண்டுபிடிக்கக்கொண்டுள்ள ஆவலில் சற்றும் குறையவில்லை என்று நாங்கள் நினைக்கின்றோம். நாங்கள்கொண்ட யூகம் சரியாக இருக்குமென நினைக்கிறோம். இயக்கம் நின்றுவிட்டால் கவர்ன்மெண்டார் தற்போதுள்ள முறையையும் அதற்கு அனுகுணமாக இருக்கும்படி கவர்ன்மெண்டார் நிறைவேற்றி வைத்துக்கொண்டுள்ள அவசரச் சட்டங்களையும் நீடிப்பதற்கு அவசியமிராதென்று நாங்கள் நம்புவதாகச் சொல்லவேண்டிய தவசியமில்லை. இதனால் நாங்கள் மிஸ்டர் காந்தியையும் பண்டித மோதிலால் நேருவையும் பண்டித ஜவஹர்லால் நேருவையும் பேட்டிகாண எங்களை அனுமதிக்கவேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவ்வாறு செய்தால் நாங்கள் எங்களது கட்சியை அவர்களுக்கு முன்பு எடுத்துச் சொல்லவும், தேசநலத்தை உத்தேசித்து எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி அதன் மூலம் அரசியல் முன்னேற்றத்தைப் பற்றிய பெரிய பிரச்சினையை அமைதியாகத் தீர்த்து

வைக்கச் சாத்தியமாகும்படி செய்யவேண்டுமென அவர்களை வற்புறுத்தவும் இயலும். அவர்களிடம் போகும் பொழுது நாங்கள் எங்களுடைய சொந்த ஹோதாவிலேயே செல்லுவோம் என்பதைத் தெளிவுப்படுத்திவிட விரும்புகிறோம். நாங்கள் கவர்ன்மெண்டாரின் பிரதிநிதிகளாகவோ அல்லது எந்தக் கட்சியாரின் பிரதிநிதிகளாகவோ அவர்களிடம் செல்லவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். நாங்கள் எங்களது முயற்சியில் தோல்வியுற்றால் அதற்கான பொறுப்பு எங்களுடையதாக இருக்கும். சிறையில் இக் கனவான்களைக் கண்டு பேசத் தாங்கள் எங்களுக்கு அனுமதி கொடுத்தால், எங்களுக்கு அவசியமான வசதிகளையெல்லாம் செய்து கொடுக்கும்படி மாகாண கவர்ன்மெண்டுகளுக்குத் தாங்கள் அவசியமான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென நாங்கள் தங்களை வேண்டிக் கொள்ளுகின்றோம். அவசியமான அனுமதி எங்களுக்கு அளிக்கப்பட்டால் அவர்களுடன் நாங்கள் தனிமையாகப் பேச அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், நாங்கள் சம்பாஷிக்கையில் அங்கு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் எவரும் பிரசன்னமாக இருக்கக்கூடாதென்றும் தங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். மேலும் அவர்களை நாங்கள் கூடிய சீக்கிரம் பார்ப்பது விரும்பத்தகுந்ததெனஅபிப்பிராயப்படுவதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இக் கடிதத்திற்கு பதில் ஒட்டல் ஸிஸிலிலுள்ள ஸ்ரீமான் ஜெயகருக்கு அனுப்பப்படலாம்.

இங்ஙனம் தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) டேஜ்பகதூர் சாப்ரூ. எம். ஆர். ஜெயகர்.

இராஜப்பிரதிநிதியின் பதில்.

இராஜப்பிரதிநிதி ஸ்ரீமான் ஜெயகருக்குப் பின்வரும் பதிலை அனுப்பினார்.

இராஜப்பிரதிநிதி மாளிகை,
ஸிம்லா, 16—7—30.

பிரியமுள்ள ஸ்ரீமான் ஜெயகருக்கு,

தாங்கள் ஜூலை 13-ந்தேதி எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. அதில் தாங்களும் ஸர் டேஜ்பகதூர் சாப்ரூவும் தேசத்தில் சமாதான நிலைமையைத் திரும்ப ஏற்படுத்துவதற்கு உங்களால் இயன்ற தனைத்தையும் செய்யக் கொண்டுள்ள விருப்பத்தைத் தெரிவித்திருக்கின்றீர்கள், மேலும் மிஸ்டர் காந்தி, பண்டித மோதிலால் நேரு, பண்டித ஜவஹர்லால் நேரு இவர்களை இந்நோக்கத்துடன் அணுக அனுமதியுங் கேட்டிருக்கின்றீர்கள். ஜூலை 9-ந் தேதி யன்று சட்டசபையில் நான் பேசுகையில் சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாகவும் அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் நானும் எனது கவர்ன்மெண்டாரும் கொண்டுள்ள மனோபாவத்தை எடுத்துரைத்திருக்கின்றேன். சட்டமறுப்பு இயக்கமானது இந்தியாவின் கட்சிக்குக் கலப்பற்ற தீங்கையே இழைத்துவருவதாக நாங்கள் கருதுகின்றோம். பல முக்கியமான சமூகங்களும் வகுப்புகளும் கட்சிகளும் இதே அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கின்றன. இதனால் அவர்களது உதவியைக் கொண்டு கவர்ன்மெண்டார் அவ்வியக்கத்தைத் தங்கள் வசமுள்ள சகல சாதனங்களைக் கொண்டும் நீடித்து எதிர்க்கவேண்டும். ஆனால் சம்பந்தப்பட்ட எல்லோரு

டைய சம்மதத்தையும் பெற்று அரசியல் பிரச்சினையைத் தீர்க்க ஆவல் கொண்டிருப்பதில் நாங்கள் சற்றும் குறைந் தவர்களாக இல்லை என்பதைத் தாங்கள் உணர்ந்திருப்பது மெத்த சரியாகும். இந்தியா கவர்ன்மெண்டார் சைமன் யாதாஸ்தை யோசித்த பிறகு செய்யக்கூடிய பிரேரணை களோ அல்லது சர்வகட்சி மகாநாட்டின் பிரேரணைகளோ பார்லிமெண்டின் முடிவுகளோ எப்படியிருக்குமென்று முன்னறிந்து கூற என்னால் இயலாதென்பது வெளிப் படை. ஆனால் நான் எனது பிரசங்கத்தில் ஒரு விஷயத் தைத் தெளிவாகத் தெரிவித்தேன். அதாவது நானும் எனது கவர்ன்மெண்டாரும் இந்தியரால் தற்காலம் பொறுப்பு ஏற்கமுடியாதிருக்கும் விஷயங்களுக்கு வகை செய்துவிட்டு அவர்களது விஷயங்களை அவர்களே அதிக மாக நிர்வகித்துக்கொள்ளும் உரிமை அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்வதில் எங்களால் இயன்ற உதவி யனைத்தையும் செய்ய விருப்பமுள்ளவர்களாக இருக்கின் றேம் என்றும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் அவ்வாறு செய்வார்களென்பதில் எனக்கு ஐயமில்லை என்றும் அதில் தெரிவித்திருக்கிறேன். இந்தியரால் தற்காலம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கும் விஷயங்கள் யாவை என்பதையும், அதற்காக என்ன ஏற்பாடு செய்தால் சிறந்ததாக இருக்குமென்பதைப்பற்றியும் மகாநாடு கவ னிக்கும். இருதரப்பாரும் பரஸ்பர நம்பிக்கைகொண்டு வேலை செய்தால் உடன்பாடு ஏற்பட முடியாமல் போகு மென நான் ஒருபோதும் நினைத்ததில்லை. இதனால் தாங் கள் உத்தேசிக்கும் செயல் மூலம் தேசத்தில் சாதாரண நிலைமையை ஏற்படுத்துவதற்குத் தாங்கள் உதவிசெய்யக்

கூடுமென நம்பினுல் தங்களுடைய முயற்சிகளுக்கு எந்தத் தடையையும் நானுவது அல்லது எனது கவர்ன்மெண்டா ராவது ஏற்படுத்துவது சரியாக இராது. சட்டமறுப்பு இயக்கத்தை விடாமல் எதிர்ப்பதில் எனது கவர்ன்மெண்டு டன் தோளோடு தோள் நின்று உதவியவர்களாய் உள்ள வர்களது ஒத்துழைப்பை நான் மிக்கமதிக்கின்றேன். அவர் களும் தங்களது முயற்சிக்கு நான் தடை செய்யவேண்டு மென்று விரும்புவார்களென்றும் நினைக்கவில்லை. தங் களிடமிருந்து பதில் வந்ததும் இந்தியாவின் சமாதானத் திற்காகத் தாங்கள் பொது ஜன சேவா உணர்ச்சியுடன் செய்ய உத்தேசிக்கும் முயற்சியைச் செய்ய இயலுவதற்கு அவசியமான உத்தரவுகளைப் பிறப்பிக்கும்படி சம்பந்தப் பட்ட மாகாண கவர்ன்மெண்டுகளைக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

இங்ஙனம் தங்கள் உள்ளன்புள்ள,

(ஒப்பம்) இர்வின்.

இந்த இரண்டு தஸ்தாவேஜிகளுடனும் அவர்கள் புனுவி லுள்ள எர்வாடா ஜெயிலில் மகாத்மா காந்தியை ஜூலை 23, 24-ந் தேதிகளில் கண்டு பேசினுர்கள். அப்போது நிலைமையைப் பூரணமாக விளக்கியதோடு இராஜப்பிரதிநிதி யோடு அவர்கள் பேசிய விவரத்தையும் அறிவித்தார்கள். அவர் கீழ்க்கண்ட குறிப்பையும் ஒரு கடிதத்தையும் அவர்க ளிடம் கொடுத்து அலகாபாத்தில் நைனிடால் சிறையி லுள்ள பண்டித மோதிலாலிடமும் பண்டித ஜவஹர்லா லிடமும் சேர்க்கும்படி சொன்னுர் :—

மகாத்மாவின் நிபந்தனைகள்

(1) இவ் விஷயத்தைப் பொறுத்தமட்டில் எனது சொந்த நிலைமையை விளக்க விரும்புகிறேன். இடைக் காலத்தில் பூரண ஜவாப்தாரியான ஆட்சி முறையில் இருக்கவேண்டிய பாதுகாப்புகளைப் பற்றிச் சர்வ கட்சி மகாநாட்டில் பேசுவதானால் எனக்குயாதொரு ஆக்ஷேபமு மில்லை. அதோடு சுயேச்சை விஷயமான பிரச்னையை அங்கு யாராவது கிளப்பினால் அதை நிராகரிக்கக் கூடாது. இவ்விஷயம் மனதில் இருக்கவேண்டும். மகாநாட்டிற்குக் காங்கிரஸ் வாதிகள் போவதைப்பற்றிய விஷயம் முடிவு செய்யப்படுமுன் மகாநாட்டின் அமைப்பு எனக்குத் திருப் தியை அளிக்கக்கூடியதாக விருக்கவேண்டும்.

(2) சர்வகட்சி மகாநாட்டு விஷயத்தில் காங்கிர ஸுக்குத் திருப்தி ஏற்பட்டுவிட்டால் இயற்கையாக சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டுவிடும். அதாவது சட்டத் தை மீறுவதென்பதற்காகவே சில சட்டங்களை மீறும் வேலை அப்போது நின்றுவிடும். ஆனால் சாத்வீகமாக அந்நிய நாட்டு ஆடைக் கடைகளையும் மதுபானங்களையும் மறியல் செய்யும் வேலை அப்போதும் நிற்காது. கவர்ன் மெண்டாரே சாராயத்தை விலக்கவும் சீமை ஜவுளி வியா பாரத்தைக் குறைக்கவும் வழிதேட வேண்டும். அதன் பிறகே அந்த மறியல் நிற்கும். பொது ஜனங்கள் உப்புச் செய்யும் தொழில் நிற்கக்கூடாது. உப்புச் சட்டத்தில் தண்டனை விதிக்கும் விதிகள் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்படக் கூடாது. கவர்ன்மெண்டு உப்பளங் களையோ வேறு தனிப்பட்டவர்களின் டிப்போக்களையோ

முற்றுகையிடப்பட மாட்டாது. இந்த விஷயத்தை நிபந்தனைகளில் ஒன்றாகச் செய்யாமலிருந்தாலும் பாதகமில்லை. ஆனால் எழுத்து மூலம் அதை ஒரு சம்பிரதாயமாக வைத்துக்கொள்ளலாம்.

(3) (எ) சட்ட மறுப்பு இயக்கத்தை வாபீஸ் வாங்கிக்கொண்ட உடனே சத்தியாக்கிரகக் கைதிகளையும் மற்ற ராஜீயக் கைதிகளையும் தண்டனை யடைந்திருந்தாலும் சரி, விசாரணையிலிருந்தாலும் சரி பலாத்காரம் செய்தவர்களாகவும் பலாத்காரம் செய்யத் தூண்டியவர்களாகவுமுள்ளவர்களைத் தவிர மற்றவர்களை விடுதலை செய்ய உத்தரவிடவேண்டும்.

(பி) உப்புச் சட்டம், அச்சுச் சட்டம், ரெவினியூ சட்டம் முதலியவைகளின்படி பறிமுதல் செய்துள்ள பொருள்களைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

(ஸி) தண்டிக்கப்பட்ட ஸத்தியாக்கிரகிகளிடமிருந்தும் அச்சுச் சட்டப்படியும் ஜாமீனாகவும் அபராதமாகவும் வசூலித்த தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

(டி) ராஜிநாமாச் செய்த கிராம உத்தியோகஸ்தர் உட்பட எல்லா உத்தியோகஸ்தர்களும் சட்டமறுப்பு இயக்க காலத்தில் வேலையினின்றும் நீக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களும் மீண்டும் கவர்ன்மெண்டு ஊழியத்தில் சேர விரும்பினால் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மேற்சொன்னவைகள் ஒத்துழையாமைக் காலத்தில் நிகழ்ந்தவைகளுக்கும் செல்லுபடியுள்ளதாக விருக்கவேண்டும்.

(இ) இராஜப்பிரதிநிதி பிறப்பித்த அவசரச் சட்டங்கள் ரத்து செய்யப்படவேண்டும்.

எனது இந்த அபிப்பிராயம் தற்காலிகமானவைகளே. ஏனெனில், நான் கைதியாகவிருக்கின்றமையால் எனக்கு வெளியில் நடக்கும் ராஜீய விஷயங்கள் நேரில் தெரியாது. ஆகவே பூரணமாக அறியாத விஷயங்களைப்பற்றி நான் அபிப்பிராயம் சொல்ல எனக்கு உரிமையில்லையென்றே நினைக்கிறேன். ஆகவே எனது அபிப்பிராயங்களுக்குப் போதுமான மதிப்புக் கொடுப்பதற்கில்லை. நான் இயக்கத்தோடு சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தால் அப்பொழுது என் அபிப்பிராயத்துக்கு அதிக மதிப்பிருக்கும்.

ஸ்ரீமான் ஜெயகரும் டாக்டர் சாப்ரூவும் இந்த இயக்கத்தை நடத்திவரும் பண்டித மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, ஸ்ரீமான் வல்லபாய் படேல் முதலியவர்களுக்குக் காட்டலாம்.

ஆனால் பத்திரிகைகளில் ஒன்றும் வெளிவரக்கூடாது. இந்த நிலையில் இவற்றை ராஜப்பிரதிநிதிக்கும் காட்டக் கூடாது. மேற்சொன்ன நிபந்தனைகள் அங்கீகரிக்கப் பட்டாலும் சிறையிலிருந்து வெளிவருகையில் எனக்குச் சுயநம்பிக்கை ஏற்பட்டாலொழிய நான் சர்வகட்சி மகாநாட்டுக்குச் செல்வதைப்பற்றி கவலைப்படமாட்டேன். இப்போது எனக்கு அந்த சுய நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. மகாநாட்டுக்கு அழைக்கப்படும் பிரதிநிதிகளுக்கிடையே பூர்வாங்கமாக சம்பாஷணை நடக்கவேண்டும். அவர்கள் எவ்விதத்திலும் வலியுறுத்தவேண்டிய முக்கியக் குறைந்தபட்சக் கோரிக்கைகள் எவையெனத் திட்டம் செய்துகொள்ளவேண்டும். நான் இராஜப்பிரதி

நிதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட 11 நிபந்தனை களின் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டிருக்கிறதா வெனப் பிறகு வரும் எல்லா சுயராஜ்ய திட்டத்தையும் சோதித்துப்பார்க்கும் உரிமை எனக்கிருக்கவேண்டும்.

23-7-30—எர்வாடா சிறை. எம். கே. காந்தி.

பண்டிதர்களுக்கு மகாத்மாவின் கடிதம்.

தமது நிபந்தனைக் குறிப்புடன் மகாத்மாஜீ பண்டித மோதிலால் நேருவுக்குப் பின் கண்ட கடிதத்தைப் எழுதி யிருந்தார் :—

எனது நிலைமை மிக்க சங்கடமாக இருக்கின்றது. எனது மனோபாவத்திற்கிணங்கச் சிறைக்கு வெளி யில் நடக்கும் காரியங்களைப்பற்றி நான் திட்டமான அபிப்பிராயங் கூறமுடியாது. எனது மனப்போக்கை அவ்வாறு அமைத்து வந்திருக்கின்றேன். நமது நண்பர் களுக்கு நான் எழுதிக் கொடுத்திருக்கும் கடிதமானது என்னை என் சம்பந்தப்பட்டமட்டில் திருப்தி செய்யக் கூடியதெனத் தோன்றுகின்றவற்றையே சுமாராகக் குறிப் பிடுகின்றது. மிஸ்டர் ஸ்லோகோம்பினிடம் நான் எது வும் சொல்ல விருப்பமில்லாதவனாக இருந்தேன் என் பதும் உங்களுடன் விவாதிக்கும்படி நான் அவரை விரும் பியதும் தங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் அவரது வேண்டுகோளைத் தடுக்க என்னால் முடியவில்லை. உங்களைக் கண்டு பேசிய விஷயத்தை வெளியிட அவரை அனுமதிக்காமலிருக்கவும் என்னால் முடியவில்லை. இதே

சமயத்தில் நான் கௌரவமான ராஜி ஏற்படுவதற்குப் பக்குவமான காலம் ஏற்பட்டிருந்தால் ராஜி ஏற்படு வதற்குக் குறுக்கே தடையாக நிற்கவும் விரும்பவில்லை. கௌரவமான ராஜிக்கான பக்குவ காலம் வந்துவிட் டதா என்ற விஷயமாக எனக்கு மிகுந்த சந்தே கம் இருக்கிறது. ஆனால் எப்படியும் பண்டித ஜவஹர்லால் நேருவின் அபிப்பிராயமே இறுதியானதாக இருக்கவேண் டும். தாங்களும் நானும் அவருக்கு ஆலோசனைகளைத் தான் கூறக்கூடும். ஸர் டேஜ்பகதூர் சாப்ரூ ஸ்ரீமான் ஜெயகர் இவர்களிடம் கொடுத்துள்ள குறிப்பில் நான் குறிப்பிட்டுள்ளதெல்லாம் நான் உயர்ந்த பக்ஷமாகச் செல்லக்கூடிய அளவைக் காட்டுகின்றன. ஆனால் ஜவஹர் லாலும் தாங்களும் எனது நிலையானது காங்கிரஸின் உண் மைக் கொள்கைக்கோ அல்லது ஜனங்களது தற்கால மனோபாவத்திற்கோ முரண்பட்டதாகக் கருதலாம். லாகூர் தீர்மானத்தில் கண்ட வாசகத்திற்கிணங்கிய நிலை மை வரையிலுள்ள எந்த பலமான நிலைமையையும் ஆதரிக்க நான் சற்றும் தயங்கமாட்டேன். இதனால் நீங்கள் உங்க ளிருவருடைய மனதிலும் சரியெனப் பட்டாலொழிய எனது குறிப்பை எவ்விதத்திலும் மதிக்கவேண்டியதில்லை. ராஜப் பிரதிநிதிக்கு நான் எழுதிய முதற் கடிதத்தில் குறிப்பிட்ட 11 கோரிக்கைகளும் தங்களுடைய மன தையோ அல்லது ஜவஹருடைய மனதையோ சற்றும் கவரவில்லை என்பது எனக்குத் தெரியும். இன்னும் தாங்கள் அதே அபிப்பிராயத்துடன் இருக்கின்றீர்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவற்றைப்பற்றி என்மனது முற்றிலும் தெளிவாக இருக்கிறது. அவை

தான் சுயேச்சையின் கருத்து என்று எனக்குத் தோன்று கிறது. அவற்றை உடனே அமுலுக்குக் கொண்டுவர தேசத்தாருக்கு அதிகாரமளிக்காத எதனுடனும் நான் சம்மந்தம் வைத்துக்கொள்ள முடியாது. நான் குறிப்பில் 3 கோரிக்கைகளையே குறிப்பிட்டிருந்தபோதிலும் பாக்கி 8 கோரிக்கைகளையும் நான் விட்டுவிடவில்லை. ஆனால் 3 கோரிக்கைகளைச் சட்டமறுப்பு இயக்க சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். நாம் இன்று அடைந்துள்ள நிலைமையை வீணாக்கக்கூடிய எந்தப் போராட்ட நிறுத்த ராஜிக்கும் நான் உடந்தையாக இருக்க மாட்டேன்.

23—7—30 இங்ஙனம்: தங்கள் உண்மையுள்ள,
ஏர்வாடா மந்திரம். எம். கே. காந்தி.

இதற்கிணங்க அவர்கள் ஜுலை 27-28-ந் தேதிகளில் அலகபாத்தை யடுத்துள்ள நைனி ஜெயிலில் பண்டித மோதிலால் நேருவையும் பண்டித ஜவஹர்லால் நேருவை யும் பார்த்தார்கள். இராஜப்பிரதிநிதியின் கடிதத்தையும் மகாத்மா காந்தியின் குறிப்பையும் மேற்கண்ட அவரது கடிதத்தையும் கொண்டு அவர்கள் நிலைமையைப் பூரண மாகப் பரிசீலனை செய்தார்கள். பண்டித மோதிலால் நேரு வும் பண்டித ஜவஹர்லால் நேருவும் அடியிற்கண்ட 2 கடி தங்களை எர்ரவாடாவிலுள்ள மகாத்மா காந்தியிடம் எடுத் துச் செல்லும்படி அவர்களிடம் கொடுத்தனர்.

மகாத்மாவுக்குப் பண்டிதர்களின் கடிதம்.

அலகபாத்தில் நைனி செண்டிரல் ஜெயிலிலிருந்து ஜுலை 28-ந் தேதி யன்று பண்டித மோதிலால் நேருவும் பண்டித ஜவஹர்லால் நேருவும் எழுதிக்கொடுத்த குறிப்பு விவரம் வருவாறு:—

ஸர் டேஜ் பகதூர் ஸாப்ரூ, ஸ்ரீமான் ஜெயகர் இவர்களுடன் நாங்கள் நெடு நேரம் சம்பாஷித்தோம். அவர்கள் சிறையில் காந்திஜீயையும் எங்களையும் சிறைச்சாலைகளிலுள்ளவர்களையும் கண்டு பேசும்படி தங்களைச் செய்த பல சம்பவங்களையும் பற்றி எங்களுக்குத் தெரிவித்தனர். இந்தியாவி லுள்ள ஜனங்களுக்கும் பிரிட்டிஷ் கவன்மென்டாருக்கும் தற்சமயம் நடக்கும் போராட்டத்தை முடித்து விடவோ அல்லது தர்காலீகமாக நிறுத்திவிடவோ முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்காக எங்களைக் கண்டு பேசினார்கள். அவர்கள் சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள உண்மையான ஆர்வத்தை நாங்கள் உணர்ந்து பாராட்டுகின்றோம். நாங்கள் சமாதானத்தில் கொண்டுபோய் விடக்கூடிய சகல வழிகளையும் சந்தோஷத்துடன் ஆராய்ந்து பார்ப்போம். ஆனால் அந்தச் சமாதானமானது தேசத்திற்காக நடத்தும் தேசீயப் போராட்டத்தில் எவ்வளவோ தியாகங்களை ஏற்கெனவே செய்திருக்கும் இந்திய மகா ஜனங்களுக்குக் கௌரவத்தையும் தேசத்திற்குச் சுதந்தரத்தையும் அளிக்கவல்லதாக இருக்கவேண்டும். காங்கிரஸ் பிரதிநிதிகள் என்ற ஹோதாவில் நாங்கள் அதன் தீர்மானங்களை அவற்றின் முக்கியாம்சங்களில் மாற்ற எவ்வித அதிகாரமுமற்றவர்களாக இருக்

கிறோம். ஆனால் சில சந்தர்ப்பங்களில் காங்கிரஸினால் முக்கியமாகக் கருதப்படுகின்றவற்றை ஏற்றுக்கொண்டால் விவரங்களில் மாறுதல்களைச் செய்யலாமெனச் சிபார்சு செய்யத் தயாராக இருப்போம். ஆனால் ஆரம்பித்திலேயே எங்களுக்குக் கஷ்டங்களிருக்கின்றன. நாங்கள் இருவரும் சிறையிலிருக்கின்றோம். சென்ற சிலகாலமாக எங்களுக்கும் வெளி உலகிற்கும் சரி, தேசிய இயக்கத்திற்கும் சரி, எவ்விதத் தொடர்புமில்லாமல் இருக்கின்றோம். எங்களில் ஒருவருக்குச் சுமார் 3-மாத காலமாக ஒரு தினசரிப் பத்திரிகை கூட அனுமதிக்கப்படவில்லை. காந்திஜீ பல மாதங்களாகச் சிறையிலிருக்கிறார். ஆதி காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து எங்களது சகாக்களில் ஏறக்குறைய எல்லோரும் சிறையி லிருக்கின்றனர். காரியக் கமிட்டியே சட்ட வரம்பு மீறிய ஸ்தாபனமெனப் பஹிரங்கப்படுத்தப் பட்டு விட்டது. தேசீய காங்கிரஸ் ஸ்தானத்தில் முடிவு சொல்லும் அதிகார ஸ்தாபனமாக விருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் 360 அங்கத்தினர்களிருக்கின்றனர்கள். இவர்களில் நூற்றுக்கு 75 பேர் வீதம் சிறையிலிருக்கின்றனர். நாங்கள் தேசீய இயக்கத்திலின்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே நாங்கள் எங்கள் சகாக்களைக் கலக்காமலும் அதிலும் முக்கியமாகக் காந்திஜியைக் கலந்து ஆலோசிக்காமலும் திட்டமாக ஒரு ஏற்பாட்டையும் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வகட்சி மகாநாட்டுக்கு முன் முக்கியமானவிஷயங்களைப் பற்றி ஆலோசித்து ஒருமுடிவுக்கு வராவிட்டால் அம்மகாநாட்டால் பயன் விளையுமென நாங்கள் கருதவில்லை. அவ்விதம் முன்னதாக ஒரு எற்பாட்டுக்கு வருவது அத்யா

வசியமென்பது எங்கள் அபிப்பிராயம். அதைப்பற்றி ஒரு வித தப்பபிப்பிராய மிருக்கக்கூடாது. தப்பர்த்தப்படுவ தாகும் இடமிருக்கக்கூடாது. இந்த சமரஸ முயற்சியை ஸ்ரீமான் ஜெயகரும் டாக்டர் சாப்ரூவும் தங்கள் சொந்த ஹோதாவில் தான் செய்வதாகவும் கவர்ன்மெண்டோ தாமோ இதில் முன்னதாக அன்றி ஒருவிதத்திலும் கட்டுப்படவில்லையென்றும் லார்டு இர்வின் ஒரு கடிதத்தில் வெளியிட்டிருக்கிறார். டாக்டர் சாப்ரூவும் ஸ்ரீமான் ஜெயகரும் கூட இதைத் தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். காந்திஜியையும் மற்றவர்களையும் கேட்காமல் சமாதானத்துக்குத் திட்டமான நிபந்தனைகளைக் குறிப்பிட எங்களால் முடியாது. அதனால் டாக்டர் சாப்ரூவும் ஸ்ரீமான் ஜெயகரும் வெளியிட்ட யோசனைகளைப்பற்றியும் காந்திஜியிடமிருந்துவந்த குறிப்பில் அடங்கிய நிபந்தனைகளைப்பற்றியும் இப்போது ஒன்றும் விவாதிக்கவிரும்பவில்லை. பொதுவாக நாங்கள் காந்திஜியின் 2,3-வது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருக்கிறோம். ஆனால் அந்த நிபந்தனைகளைப் பற்றிய விஷயங்களையும் மற்ற நிபந்தனைகளைப் பற்றியும் அவரோடு நேரில் கலந்து யோசித்த பிறகே முடிவாக எங்கள் யோசனையைச் சொல்ல முடியும். இந்த அறிக்கையை ரகசியமாக வைத்திருக்கவேண்டும். இந்த அறிக்கையைக் காந்திஜிக்கு மட்டுமே காட்டவேண்டும்.

பண்டித ஜவஹர்லாலின் கடிதம்.

அலகபாத்தில் நெய்னி மத்ய சிறைச்சாலையிலிருந்து சென்ற ஜூலை மாதம் 28-ந் தேதியன்று எர்ரவாட சிறையிலுள்ள மகாத்மாகாந்திக்குப் பண்டித ஜவஹர்லால் நேரு எழுதிய கடிதம்:—

நெய்னி, மத்ய சிறைச்சாலை

28-7-30—

பாபுஜிக்கு வந்தனம்,

ஒரு சிறையிலுள்ள நான் மற்றொரு சிறையிலுள்ள தங்களுக்கு எழுதுகிறேனாயினும் வெகுகாலத்திற்குப் பிறகு தங்களுக்குக் கடிதம் எழுதுவது பெரிய சந்தோஷத்தைத் தருகிறது. விஸ்தாரமாக எழுதவேண்டுமென்பது எனது விருப்பம், ஆனால் இப்பொழுது அப்படி எழுதக்கூடாதென்று நினைக்கிறேன். ஆகையால் விவாத விஷயத்தைப்பற்றி மாத்திரமே எழுதுகிறேன். டாக்டர் ஸாப்ரூவும் ஸ்ரீமான் ஜெயகரும் நேற்றுவந்து என்னுடனும் அப்பாவுடனும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். இன்றும் வருவார்கள். எல்லாவிஷயங்களையும் அவர்கள் எங்களுக்குத் தெரியப்படுத்திவிட்டதுடன், தாங்கள் அனுப்பிய கடிதத்தையும் குறிப்பையும் காட்டினார்கள். ஆகையால் நாங்கள் இருவரும் கலந்து யோசிக்க அந்த அஸ்திவாரம் போதுமென்று நினைத்தோம். மறுபடியும் அவர்களைக் கண்டுபேசக் காத்துக்கொண்டிராமல் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்துவிடலாமென்றும் நினைத்தோம். இன்று அவர்களுடன் பேசும்போது புதிதாக ஏதேனும் தெரிய வருமானால், இப்பொழுது நாங்கள் கொண்டிருக்கிற அபிப்பிராயங்களை அதற்கேற்ப மாற்றிக் கொள்வோம். டாக்டர் ஸாப்ரூவிடத்திலும் ஸ்ரீமான் ஜெயகரிடத்திலும் ஒரு குறிப்பைக்கொடுக்கப்போகிறோம். எங்களுடைய முடிவான அபிப்பிராயங்களை அதில்சொல்லி

யிருக்கிறோம். அந்தக் குறிப்பு வெகு சுருக்கமானதேயாயி னும், எங்களுடைய புத்தியின் போக்கை அது தங்களுக் குத் தெரிவிக்கும். நம்முடைய மனோபாவம் இன்ன தன் மையாகத்தான் இருக்க வேண்டுமென்ற விஷயத்தில் நானும் அப்பாவும் ஒரே அபிப்பிராயமுடையவர்கள். ஒரு விஷயத்தை ஒளிக்காமல் சொல்லிவிடுகிறேன். தங்களு டைய குறிப்பில் அரசியல் முறையைப்பற்றித் தாங்கள் சொல்லியுள்ள நிபந்தனை எனக்கு அவ்வளவாகப் பிடிக்க வில்லை. அப்பாவும் அதைச் சிலாகிக்கவில்லை. நம்முடைய நிலைமை, அல்லது நாம் காங்கிரஸுக்குக் கொடுத்திருக் கிற உறுதிமொழிகள் அல்லது இப்பொழுது நடைபெறும் விஷயங்கள் ஆகியவைகள் தாங்கள் அரசியல் முறையைப் பற்றிச் சொல்லியுள்ள நிபந்தனைக்கு எப்படிப் பொருந் தும்? "இன்று நாம் அடைந்திருக்கிற நிலைமையைப் போக்கிவிடக் கூடிய எவ்வித சமாதானத்தையும் செய்து கொள்ள நாம் உடந்தையாக விருக்க முடியா"தென்று தாங்கள் சொல்லியிருப்பதே எங்களுடைய அபிப்ராயம். ஆகையால் தான் ஏதேனும் ஒரு முடிவுக்கு வருமுன் ஆர அமர யோசனை செய்யவேண்டியது அவசியமாகிறது. எதிர்க்கட்சியினர் ஒரு அடியாவது முன் எடுத்து வைத் திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியிருப்ப தால், நாம் தப்பான காரியம் எதையும் செய்துவிடாமல் உஷாருடன் இருக்கவேண்டும். என்னுடைய அபிப்பிரா யத்தைப் பட்டவர்த்தனமாகச் சொல்லாமல் மிதமான பாஷையில் தெரிவிக்கிறேன். யுத்தமே எனக்குப் பிரிய மானது. நான் உயிருடன் இருப்பதாக உணரும்படி அது செய்யவல்லது.

சென்ற நான்கு மாதங்களாக இந்தியாவில் நடந்திருக்கிற விஷயங்கள் எனக்குக் களிப்பைத் தருகின்றன. நம்முடைய தேச புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் ஆகியவர்களிடத்தில் எனக்கு ஏற்கெனவே இருந்ததைக் காட்டிலும் அதிக மதிப்பு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எல்லோரும் சண்டையில் பிரியமுள்ளவர்களாக இல்லை யென்பதும், சமாதானத்தையே அவர்கள் விரும்புகிறார்கள் என்பதும் எனக்குத்தெரியும். ஆகையால் என்னுடைய உள்ளுணர்ச்சியை அடக்கிக்கொண்டு சாந்தமான மனோபாவத்தை உண்டாக்கிக்கொள்ள நான் முயற்சிசெய்கிறேன். தங்களுடைய மந்திரக்கோலை ஒங்கினதும் இந்தியா புத்துயிர்பெற்று விட்டதற்குத் தங்களைப் புகழ்கிறேன். பிற்காலத்தில் என்ன நேருமோ எனக்குத் தெரியாது. ஆனால் இதுவரையில் நடந்துள்ள விஷயங்கள் வாழ்வில் ஒரு ருசியை உண்டாக்கிவிட்டன. ஒரு நாள் போச்சு, இரண்டு நாள் போச்சு என்று காலங்கழித்துக் கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட வாழ்வு இப்பொழுது வீரத்தன்மை படைத்துவிட்டது. நெய்னி சிறைச்சாலையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறேனாகையால் அஹிம்ஸை என்பது எவ்வளவு வல்லமையுள்ள ஆயுதம் என்பதைப்பற்றி யோசித்துப்பார்க்கிறேன். முன்னிலும் அதிகமாக அதன் மகிமையை இப்பொழுது உணர்கிறேன். தங்களுடைய அஹிம்ஸை முறையை அனுசரித்து தேச மகா ஜனங்கள் நடந்துகொண்டிருப்பது போதாதென்று தாங்கள் அதிருப்திப்படவில்லை என்று நம்புகிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் அதிலிருந்து வழுவியிருக்கிறார்களாயினும் ஜனங்கள் அம்முறையில் ஈடுபட்டு நடந்துகொண்டிருப்பது

ஆச்சரியமாகவே இருக்கிறது. நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் உக்கிரகத்துடனேயே ஜனங்கள் அஹிம்ஸை வழியில்போயிருக்கிறார்கள். அஃதிருக்க, ராஜப்பிரதிநிதிக்குத் தாங்கள் எழுதியகடிதத்தில் குறிப்பிட்ட 11 விஷயங்களைப்போற்றுதவனுகவே நான் இன்னும்இருக்கிறேன்; அவ்விஷயங்களில் எதையும் நான் ஒப்புக்கொள்ளாதவனன்று அவைகள் எல்லாம் வெகு முக்கியமானவைகளே. ஆனால் பூரா ஸ்வாதீனத்திற்கு அவைகள்சமமாகமாட்டா என்றே நான் நினைக்கிறேன். அந்தப் பதினோரு விஷயங்களையும் உடனே அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமானல் அப்படிச் செய்வதற்கு அதிகாரம்கொடாத எதையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று தாங்கள் சொல்லியிருப்பதே என்னுடைய அபிப்பிராயமும்.

அப்பா இன்ஜெக்ஷன் செய்துகொண்டது முதல் எட்டு நாட்களாக அசௌக்கியமாக இருக்கிறார். மிகவும் இளைத்துப்போய்விட்டார். நேற்று மாலையில் டாக்டர் ஸாப்ரூவுடனும் ஜயகருடனும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்ததானது அவருக்குப் பெரிய களைப்பை உண்டாக்கி விட்டது.

(ஒ) ஜவஹர்லால்.

என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள் இரண்டு மூன்று தினங்களில் இந்த உபத்திரவம் தீர்ந்துபோய்விடுமென்று நினைக்கிறேன். என்னுடைய அன்பை சமர்ப்பிக்கிறேன்.

(ஒ) மோதிலால் நேரு.

மறுபடியும்.

ஸர் டேஜ்பகதூர் ஸாப்ரூவுடனும் ஜயகருடனும் மறுபடியும் பேசிக்கொண்டிருந்தோம். அவர்களுடைய இஷ்டப்படி எங்களுடைய குறிப்பில் சில மாறுதல்களைச் செய்திருக்கிறோம்; - ஆனால் பெரிய வித்தியாச மெதுவும் ஏற்பட்டு விடவில்லை. எங்களுடைய மனோபாவம் சரியென்றே நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். கிஞ்சித்தும் சந்தேகமில்லை. அதைத் தாங்கள் அங்கீகரிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

மகாத்மாவின் இரண்டாவது குறிப்பு.

ஜுலை 31-ந் தேதியிலும் ஆகஸ்டு 1,2-ந் தேதிகளிலும் ஸ்ரீமான் ஜயகர் மாத்திரம் மகாத்மா காந்தியைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது மகாத்மா சொன்னபடி எழுதப்பட்ட குறிப்பு பின்வருமாறு:—

(1) ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்துவிட இந்தியா விரும்பக்கூடிய காலத்தில் அப்படிப் பிரிந்துவிட அதற்கு சுவாதீன முண்டென்றும், மிஸ்டர் காந்தி குறிப்பிட்டுள்ள 11 விஷயங்களைப்பற்றி நடவடிக்கை நடத்த இந்தியாவுக்கு அதிகாரமும் பாத்யமும் உண்டென்றும் இரண்டு ஷரத்துக்கள் அரசியல் முறையில் சேர்க்கப்படாவிடில் எந்த அரசியல் முறையையும் மிஸ்டர் காந்தி ஒப்புக்கொள்ள முடியாது.

(2) இந்த அபிப்பிராயங்களை மிஸ்டர் காந்தி ஸர்வ கட்சி மகாநாட்டில் வற்புறுத்தும்போது "இப்படிப்பட்ட நிபந்தனைகளை அவர் சொல்லுவார் என்பது எனக்குத்

தெரியாதே'' என்று ராஜப்பிரதிநிதி சொல்ல இடமிருக்கக்கூடாதாகையால் மேற் சொல்லியுள்ள நிபந்தனைகள் அவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். ப்ரிட்டிஷாருக்கு இந்தியாவிலுள்ள பாதகங்களையும் அவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகளையும் பரிசோதனை செய்ய ஸ்வாதீனமுள்ள ஒரு சபை நியமிக்கப்பட வேண்டுமென்று மிஸ்டர் காந்தி ஸர்வகட்சி மகாநாட்டில் வற்புறுத்துவார் என்பது ராஜப்பிரதிநிதிக்கு முன்னுடியே அறிவிக்கப்படவேண்டும்.

அதற்கப்புறம் ஆகஸ்டு 13, 14, 15-ந் தேதிகளில் எர்ரவாடா சிறையில் ஒரு சம்மேளனம் நடைபெற்றது. அதில் அவர்கள் இருவரும் (அதாவது ஸர்டேஜ் பகதூர் ஸப்ரூவும் ஸ்ரீமான் ஜெயகரும்) ஒருகட்சி, மற்றக்கட்சி மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, பண்டித ஜவஹர்லால் நேரு ஸ்ரீமான் வல்லபாய் படேல், டாக்டர் ஸையது முகம்மது, ஸ்ரீமான் ஜயராம் தாஸ் தௌலத்ராம் ஸ்ரீமதி நாயுடு ஆகியவர்கள். 3 தினங்களிலும் அவர்கள் தங்களுக்குள் சம்பாஷணை செய்ததன் பயனாகக் காங்கிரஸ் தலைவர்கள் அவர்களுக்கு ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள். ராஜப்பிரதிநிதிக்கு அதைக்காட்ட தங்கள் அனுமதியையும் கொடுத்தார்கள். அந்தக் கடிதம் பின்வருமாறு:—

காங்கிரஸ் தலைவர்களின் கடிதம்

எர்ரவாடா மத்யசிறை,
15—8—30.

நண்பர்களே,

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் காங்கிரசுக்கும் ராஜி உண்டாக்கத் தாங்கள் முற்பட்டதற்கு நாங்கள் மிகவும் நன்றி யறிவுள்ளவர்களாக இருக்கிறோம். உங்களுக்கும் மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதிக்கும் நடந்த கடிதப் போக்குகளைப் படித்துப் பார்த்தோம். தங்களிடத்திலும் வெகுநேரம் விஸ்தாரமாகக் கலந்து பேசினோம். எங்களுக்குள் கலந்தும் பேசிக்கொண்டோம். இவைகளின் பலனாக நமது தேசம் கௌரவத்துடன் ராஜி செய்துகொள்ளக் கூடிய காலம் இன்னும் வந்துவிடவில்லை என்ற முடிவுக்கே வந்துள்ளோம். சென்ற 5 மாதங்களில் ஜனங்கள் விழித்துக்கொண்டது ஆச்சரியமாக இருக்கிறதாயினும், பல மதஸ்தர்களிலும் எல்லாத் தரங்களிலுமுள்ளவர்கள் கஷ்டங்களைப் பெரிதும் சகித்துக் கொண்டிருக்கிறார்களாயினும், நம்முடைய லட்சியத்தை நாம் உடனே அடையும் படி செய்ய ஜனங்கள் முன் வைத்தகாலைப் பின் வைக்காமல் கஷ்டப்பட்டு விடவுமில்லை. போதுமான வரையில் கஷ்டப்பட்டு விடவுமில்லை என்றே நினைக்கிறோம். சட்ட மறுப்பியக்கம் தேசத்திற்குத் தீங்கை இழைத்துவிட்டதாகவும், அது காலந்தவறின காலத்தில் ஆரம்பிக்கப் பட்டதென்றும், ராஜாங்க முறையை மீறியதென்றும் தாங்களோ ராஜப்பிரதிநிதியோ கொண்டுள்ள அபிப்பிராயத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நாங்கள்

சொல்லத் தேவையில்லை. இங்கிலாந்தின் சரித்திரத்தில் இரத்த வெள்ளத்தை யுண்டாக்கின எத்தனையோ கலகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அக்கலகங்களை ஆங்கிலேயர்கள் புகழ்கிறார்கள். நாமும் புகழும்படி நமக்குக் கற்பித்திருக்கிறார்கள். ஆகையால் உத்தேசத்திலும் செய்கையிலும் சாந்தமானதாகிய ஒரு கலகத்தை இராஜப்பிரதிநிதியாவது அல்லது நல்ல மனதுள்ள எந்த ஆங்கிலேயராவது கண்டிப்பதற்கில்லை. ஆயினும் இப்பொழுது நடைபெறும் சட்டமறுப்பு இயக்கத்தைக்கண்டிக்கிறவர்கள் உத்தியோகஸ்தர்களாயினும் உத்தியோகஸ்த ரல்லாதவர்களாயினும் அவர்களிடத்தில் தகராறு செய்ய நாங்கள் இஷ்டப்படவில்லை. இந்த இயக்கமானது ஆச்சரியத்தை உண்டாக்கும்படி மகாஜனங்களை வசியப்படுத்தி விட்டதிலிருந்தே அது கிரமமானதென்பது விளங்குகிறது. ஆயினும் சாத்தியப்படுமானல், சட்ட மறுப்பியக்கத்தை நிறுத்திவிடத் தங்களைப்போல் நாங்களும் விரும்புகிறோம். சிறைச்சாலை, தடியடி முதலியவைகளுக்கு நமது தேச புருஷர்களையும் பெண்களையும் குழந்தைகளையும் காட்டிக் கொடுப்பது எங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதன்று. ஆகையால் கௌரவமான சமாதானத்தைச் செய்து கொள்ள ஒவ்வொரு வழியையும் சோதித்துப் பார்க்க நாங்கள் தயார் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்கள் மூலமாக ராஜப் பிரதிநிதிக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆனால் ராஜிக்கு அனுகுணமான குறி எதுவும் வானத்தில் காணப்படவில்லை என்று நாங்கள் நினைப்பதையும் தங்களுக்குத் தெரிவிக்கிறோம். இந்தியாவுக்குச் சிரேஷ்டமானது எது

என்று நிர்ணயிக்க இந்தியாவின் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்குமே பாத்ய முண்டென்பது ஆங்கில உத்தியோகஸ்தர்களின்மண்டையில் நுழைந்திருப்பதாகத் தெரியவில்லை. உத்தியோகஸ்தர்கள் மிகவும் நல்லெண்ண முள்ளவர்களாக இருப்பதாக அடிக்கடி சொல்லப்படுகிறதாயினும் அதை நாங்கள் நம்பவில்லை. ஆங்கிலேய ஜனங்கள் வெகுகாலமாக இந்த தேசத்தின் வளப்பங்களை ஸ்வீகரித்துக்கொண்டிருந்திருப்பதால் அவர்களுடைய செய்கையின் பலனாக ஜனங்களுடைய ஸன்மார்க்கமும் செல்வமும் ராஜீய நிலைமையும் எப்படிச் சீர்குலைந்து போய்விட்டன என்பதை அவர்கள் உணரக்கூட வில்லை. நம்முடைய முதுகின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டு சவாரிசெய்யும் அவர்கள் கீழே இறங்கிவிட வேண்டுமென்பதையும் இதுவரையில் நம்மைக் கசக்கிவிட்டதற்குப் பரிகாரம் செய்யவேண்டுமென்பதையும் அவர்கள் உணரக்கூடவில்லை. சென்ற 100 வருஷ ப்ரிட்டிஷ் ஆட்சியின் பலனாகத் தேய்ந்துவந்திருக்கிற நாம் இனிமேலாவது வளரும்படி செய்வதே அவர்கள் செய்யவேண்டிய பரிகாரம்.

ஆனால் தாங்களும் நமது தேச சகோதரர்களான வேறு பல மேதாவிகளும் வேறு விதமாகக் கருதுகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஏதோ மாறுதல் ஏற்பட்டுவிட்டதாகத் தாங்கள் நினைக்கிறீர்கள். ஸர்வ கட்சி மகாநாட்டுக்குப் போய்ப்பார்க்கலாம் என்று நினைப்பதற்கு வேண்டிய வரையிலாவது உத்தியோகஸ்தர்களின் மனப்போக்கில் மாறுதல் ஏற்பட்டிருப்பதாகத் தாங்கள் நினைக்கிறீர்கள். நாங்கள் அப்படிக் கருதக் கூடவில்லையாயினும் கூடுமானவரையில் தங்களுடன் ஒத்துழைக்க விரும்புகி

றோம். நீங்கள் மிகவும் அன்புடன் செய்யும் முயற்சிக்கு நாங்கள் பின்வருமாறு பதில் சொல்வதுதான் நாங்கள் செய்யக்கூடியது. ஸர்வகட்சி மகாநாடு விஷயமாக நீங்கள் உங்களுடைய கடிதத்தில் சொல்லியிருந்ததற்கு ராஜப்பிரதிநிதி பிடி கொடாமல் பதில்சொல்லி யிருப்பதாகவே நாங்கள் நினைக்கின்றோம். ஆகையால் சென்ற வருஷக் கடைசியில் லாகூரில் காங்கிரஸ் செய்துகொண்ட தேசீயக் கோரிக்கைக்கு ராஜப்பிரதிநிதி எவ்வளவு தூரம் இணங்கி வருகிறார் என்று மதிப்பிட அவருடைய கடிதம் இடங்கொடுக்கவில்லை. நாங்களும் காங்கிரஸ் மகா சபையில் கார்யக்கமிட்டியையோ அல்லது அகில இந்தியக் கமிட்டியையோ கிரமப்படிக் கூட்டியோசனை செய்யாமல் பிரமாணமாக எதையும் சொல்ல அசக்தர்களாக இருக்கிறோம். ஆயினும் நாங்கள் சம்பந்தப்பட்டவரையில்.

(1) இந்தியா இஷ்டப்படும்போது ஏகாதிபத்யத்திலிருந்து விலகிக்கொள்ள உரிமையுடையதென்று ஒப்புக்கொண்டு.

பாதுகாப்புச் சேனைமீது அதிகாரமுடையதாக விருத்தல் உள்பட எல்லாக் காரியங்களையும் ஜனங்களுக்கு ஜவாப்தாரியான கவர்ன்மெண்டு செய்யும்படியும் அது பொருளாதாரத்துறையில் ஸ்வாதீன அதிகாரமுள்ளதாக இருக்கும்படியும், ராஜப்பிரதிநிதிக்குக் காந்திஜீ எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பதினொரு விஷயங்களையும் தீர்க்கும்படியும் சமாதானமும் உண்டானலொழிய வேறு எந்த சமாதானமும் எங்களுக்குத் திருப்திதராது.

(2) மேலும் இந்தியாவில் ப்ரிட்டிஷார் கொண்டாடும் பாத்யங்களையும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற

சலுகைகளையும் சர்க்கார் கடன் என்று சொல்லப்படும் கடன்களில் ஏதேனும் நன்மையை உத்தேசித்து வாங்கப் பட்டதல்லவென்று தேசீயக்கவர்ன்மெண்டு கருதுமானால் அதையும்பற்றி விசாரணை செய்ய ஸ்வாதீனமுள்ள ஒரு சபையை நியமிக்கவும் இந்தியாவுக்கு உரிமை ஏற்பட வேண்டும்.

அதிகாரத்தை இந்தியருடைய கைக்கு மாற்றும் போது கணக்குகளில் என்ன பத்து வரவு செய்யப்பட வேண்டு மென்பதை இந்தியாவின் பிரதிநிதிகள் தீர்மா னிக்கவேண்டும்.

நாங்கள் மேலேசொல்லியுள்ளது யுக்தமாக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குத் தோன்றி மேற் சொன்னபடி உறுதி கூறப்படுமானால் சட்டமறுப் பியக்கத்தை நிறுத்திவிடுவது உசிதமாக விருக்குமென்று கார்யக் கமிட்டிக்குச் சிபார்சு செய்ய நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். அதாவது சட் டத்தை மீற வேண்டுமென்பதற்காக மீறப்படும் சட்டங் களை மீறுதிருக்கும்படிச் சிபார்சு செய்வோம். ஆனால் கட் குடியையும் அன்னிய தேச வஸ்திர இறக்குமதியையும் கவர்ன்மெண்டாரே தடுத்துவிட்டாலொழிய அவ்விரண் டையும் மறியல் செய்வது நடக்கவே நடக்கும்.

ஜனங்கள் உப்புக் காய்ச்சுவதை நடத்திக்கொண்டு தான் வரவேண்டும். உப்புச்சட்டத்திலுள்ள தண்டப் பிரிவுகளைப் பிரயோகம் செய்யக் கூடாது. கவர்ன்மெண் டுக்கோ அல்லது தனிப்பட்ட நபர்களுக்கோ சொந்தமான உப்புக் கிடங்குகள் முற்றுகை போடப்படமாட்டா.

3. சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்படுகையி லேயே

(ஏ) எல்லா சத்தியாக்ரஹக் கைதிகளையும், பலாத்காரமான காரியங்களைச் செய்ததாகவோ அல்லது பலாத்காரமான காரியங்களைச் செய்யுமாறு தூண்டியதாகவோ உள்ளவர்களை விலக்கி, தண்டிக்கப்பட்டோ அல்லது விசாரணையிலோ இருந்து வரும் எல்லா ராஜீயக் கைதிகளையும் விடுவித்துவிடவேண்டும்.

(பி) உப்புச் சட்டம், அச்சுச் சட்டம், ரிவினியூ சட்டம் முதலியவைகளின் கீழும், அவை போன்றவைகளின் கீழும் பறிமுதல் செய்திருக்கும் சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

(ஸி) தண்டனை யடைந்துள்ள ஸத்தியாக்கிரஹிகளிடமிருந்தோ அல்லது அச்சுக்கூடங்களிலிருந்தோ வசூலித்திருக்கும் அபராதத்தையும், வாங்கியிருக்கும் ஜாமீன் தொகைகளையும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

(டி) சட்டமறுப்பு இயக்க காலத்தில் ராஜிநாமாச் செய்தோ அல்லது வேலையைவிட்டு விலக்கப்பட்டோ இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் மீண்டும் கவர்ன்மெண்டு உத்தியோகங்களைப் பெற விரும்பினால் அவர்களுக்கு வேலையைத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும்.

குறிப்பு:—மேலேயுள்ள உட்பிரிவுகள் ஒத்துழையாமை இயக்கக் காலத்தில் நடந்த காரியங்களுக்கும் பிரயோகமுள்ளவைகளாக இருக்கும்.

(இ) ராஜப்பிரதிநிதி இயற்றிவைத்துள்ள எல்லா அவசரச்சட்டங்களையும் ரத்துசெய்து விடவேண்டும்.

(4) மேலே குறிப்பிட்டுள்ள பூர்வாங்கமான விஷயங்களில் திருப்திகரமான முடிவு ஏற்பட்டால்தான் சர்வ கட்சி மகாநாட்டின் அமைப்பு, அதில் காங்கிரஸுக்கு

இருக்கவேண்டிய பிரதி நிதித்துவம் இந்த விஷயங்களை முடிவு செய்யமுடியும்.

தங்கள் உண்மையுள்ள
மோதிலால் நேரு,
எம். கே. காந்தி
ஸரோஜினி நாயுடு
வல்லபாய் படேல்
ஜெயராம்தாஸ் தௌலத்ராம்
சையது மாமூது
ஜவஹர்லால் நேரு.

தூது கோஷ்டியினரின் பதில்.

பம்பாய் வின்டர் ரோடிலுள்ள மலபார் ஹில்லிலிருந்து 16-8-30-ல் அவர்களுக்கு ஸ்ரீமான் ஜயகர் ஸர் சப்ரு அடியிற் கண்ட பதிலை அனுப்பினார்கள்:—

அன்புள்ள நண்பர்களே !

பூனாவிலோ, அலஹபாத்திலோ தங்களிடம் நாங்கள் வந்திருந்தபொழுது நாங்கள் தெரிவித்துக்கொண்ட விஷயங்களுக்கு மரியாதையாகவும் பொறுமையாகவும் நீங்கள் செவிசாய்த்ததற்கு உங்கள் எல்லோருக்கும் எங்களுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இந்த நீண்டகால சம்பாஷணைகளினால் உங்களுக்கு மிகுந்த அசௌகரியத்தை விளைவித்து விட்டதற்கு நாங்கள் வருந்துகிறோம். முக்கியமாக பண்டித மோதிலால் நேருவின் தேகஸ்திதி கெடுதலானதாக இருக்கையில் பூனாவுக்கு வரவேண்டிய அசௌகரியத்தை அவருக்கு ஏற்படுத்தியதற்கு நாங்கள் வருத்தப்படுகிறோம். எவ்வித நிபந்தனைகளுக்

குள்பட்டு காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி விடவும் சர்வகக்ஷி மகாநாட்டில் கலந்து கொள்ளவும் சிபார்சு செய்வதற்கு நீங்கள் தயாராக இருப்பீர்களென்று குறிப்பிட்டு நீங்கள் எங்களிடம் எழுதிக் கொடுத்த கடிதத்தை நாங்கள் பெற்றுக்கொண்டுவிட்டதை இதன் மூலமாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நாங்கள் உங்களிடம் தெரிவித்தபடி (1) பண்டித மோதிலால் நேரு ஆக்டிங் காங்கிரஸ் பிரஸிடெண்டாக இருந்த காலத்தில் ஜூன் மாதம் 20 ம்தேதி மிஸ்டர் ஸ்லோகோம்புக்குக் கொடுத்த பேட்டியையும், (2) முக்கியமாக நாங்கள் ராஜப் பிரதிநிதியை அணுகுவதற்குஅஸ்திவாரமாக மிஸ்டர்ஸ்லோகோம்ப் ஜூன் மாதம் 25-ம் தேதி பண்டித மோதிலால் நேருவுக்கு அனுப்பி அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிபந்தனைகளையும் அஸ்திவாரமாகக் கொண்டே நாங்கள் இந்த மத்தியஸ்த வேலையிலிறங்கினோம். மிஸடர் ஸலோகோம்ப் 2 தஸதாவேஜுகளையும் எங்களுக்கு அனுப்பினர். அதன்பேரில் ராஜிக்கு வழியைக்கண்டு பிடிப்பதற்காக மகாத்மாகாந்தியையும் பண்டிதமோதிலால் நேருவையும் பண்டிதஜவஹர்லால் நேருவையும்பேட்டி காணுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று ராஜப்பிரதிநிதியைக் கேட்டுக் கொண்டோம். மேலே குறிப்பிட்ட இரண்டாவது தஸ்தாவேஜியின் பிரதியொன்றை எங்களிடமிருந்து நீங்கள் வாங்கிக்கொண்டிருக்கிறீர்கள் 14ம்தேதி நீங்கள் எங்களுக்கு எழுதிக்கொடுத்த கடிதத்தின் நிபந்தனைகளை ராஜப் பிரதிநிதியின் ஆலோசனைக்குஅனுப்பவேண்டுமென்று நமக்குள் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அவருடைய முடிவை நாங்கள் எதிர்பார்த்திருக்க

வேண்டியிருக்கிறது. இந்த ராஜிப்பேச்சு சம்பந்தமான முக்கிய தஸ்தாவேஜுகளும், நீங்கள் எங்களுக்கு எழுதியுள்ள கடிதமும் பிரசுரிக்கப்பட்டுவிட வேண்டு மென்று நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். உங்களுடைய கடிதத்தை ராஜப்பிரதிநிதி பரிசீலனை செய்தபிறகு நாங்கள் அவ்விதமே செய்துவிடுகிறோம். நாங்கள் இந்தக் கடிதத்தை முடித்துக்கொள்ளுமுன் நாங்கள் உங்களிடம் நேரில் சொல்லியபடி சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிடின் பொதுவான நிலைமையில் அபிவிருத்தி ஏற்படுமென்று நினைப்பதற்கு எங்களுக்குக் காரணமிருக்கிறது. ஸத்யாக்ரஹ (பலாத்காரமான காரியங்களைச் செய்யாத) ராஜீயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு விடுவார்கள்; சிட்டகாங் லாகூர் சதிவழக்குகள் சம்பந்தமானவைகளைத் தவிர இதர அவசரச்சட்டங்கள் வாபீஸ் வாங்கிக்கொண்டு விடப்படும்; வேறு எந்தக் கக்ஷிக்கும் தனியாகக் கிடைக்கக்கூடியதை விட அதிகப் பிரதிநிதித்துவம் சர்வகக்ஷி மகாநாட்டில் காங்கிரஸுக்குக் கிடைக்கும். மேலும், பண்டித மோதிலால்நேரு மிஸ்டர் ஸ்லோகோம்புக்குக் கொடுத்த பேட்டியில் சொல்லியிருந்த விஷயங்கள், பண்டித மோதிலால்நேருவின் அங்கீகாரத்தின்பேரில் மிஸ்டர் ஸ்லோகோம்ப் எங்களுக்கு அனுப்பிய ஸ்டேட்டுமெண்டில் அடங்கியிருந்த விஷயங்கள் இவைகளுக்கும் ராஜப்பிரதிநிதி எங்களுக்கு எழுதியுள்ள கடிதத்திற்கும் எவ்வித வித்தியாசமுமில்லையென்று நாங்கள் உங்களிடத்தில் நேரில் வற்புறுத்தினோமென்பதை நாங்கள் சொல்லத்தேவையில்லை.

தங்கள் உண்மையுள்ள,

டி. பி. சாப்ரூ எம். ஆர். ஜேயகர்

ராஜப் பிரதிநிதியின் கடிதம்.

இதற்குப் பிறகு ஸ்ரீமான் ஜெயகர் மாத்திரம் காங்கிரஸ் தலைவர்களுடைய கடிதத்துடன் ஸிம்லாவுக்கு ஆகஸ்டுமாதம் 21-ந்தேதி சென்று ராஜப் பிரதிநிதியைக் கண்டு பேசினர். ஸர் டேஜ் பகதூர் ஸாப்ரூவும் 25-ந் தேதி அவருடன் கலந்துகொண்டார் 25-ந் தேதி அவருடன் கலந்துகொண்டார். 25-ந் தேதி முதல் 27-ம் தேதிவரை ராஜப்பிரதிநிதியையும் இந்தியா கவர்ன்மெண்டு நிர்வாகசபை அங்கத்தினர்களில் சிலரையும் அவர்கள் பலதடவை சந்தித்துப் பேசினர்கள். இதன்பலனாக அலகபாத்திலும் பூனவிலுமிருந்துவரும் காங்கிரஸ்தலைவர்களுக்குக் காட்டுவதற்காக ராஜப்பிரதிநிதி அவர்களிடத்தில் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். கடிதத்தின் விவரமாவது:—

ராஜப்பிரதிநிதி மாளிகை,
ஸிம்லா, 28-8-1930.

அன்புள்ள ஸர் டேஜ்பகதூர், இப்பொழுது சிறையிலிருந்துவரும் காங்கிரஸ் தலைவர்களுடன் ஸ்ரீமான் ஜெயகரும் நீங்களும் நடத்திய சம்பாஷணையின் பலனை எனக்கு அறிவித்திருப்பதற்கும், 18-ந் தேதி அவர்கள் சேர்ந்து எழுதிய கடிதம் அதற்கு நீங்கள் எழுதிய பதில் இவைகளின் நகல்களை எனக்கு அனுப்பி யிருப்பதற்கும் நான் உங்களுக்கு வந்தனம் செலுத்துகிறேன். இந்தியாவில் சாதாரணமான நிலைமையை ஏற்படுத்துவதற்காக நீங்கள் சுதாவாகவே மேற்போட்டு கொண்ட காரியத்தை நான் மிகவும் பாராட்டுகிறேனென்பதை நீங்கள் இருவரும்

தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். எவ்வித நிலைமையில் இந்தவேலையை நீங்கள் மேற்போட்டுக் கொண்டீர்களென்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது உபயோகமாக விருக்கும். ஜூலை மாதம் 16-ந் தேதி நான் எழுதிய கடிதத்தில் இந்தியர்கள் இப்பொழுது நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக இருக்கும் விஷயங்கள் சம்பந்தமாகத் தகுந்த பாதுகாப்புகளுடன் இந்தியர்கள் தங்களுடைய விஷயங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளும்படி செய்வதற்கு அவசியமான எல்லா உதவிகளையும் செய்யவேண்டுமென்று நானும் என்னுடைய கவர்ன்மெண்டாரும் அபிப்பிராயப்படுவதாகவும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் இதே உத்தேசமுடையதாகவே இருக்குமென்று நான் நம்புவதாகவும் சொல்லியிருந்தேன். தன் முன்னிருக்கும் எல்லாத் தகவல்களையுங் கொண்டு அந்த விஷயங்கள் எவ்வெவைகளென்றும் அவைகள் சம்பந்தமாக எவ்வித ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்றும் முடிவுசெய்வது சர்வகக்ஷி மகாநாட்டின் ஜோலிகளில் ஒன்றாக இருக்கும்.

ஜூலைமாதம் 9-ந்தேதி சட்டசபையில் நான் செய்த பிரசங்கத்தில் வேறு இரண்டு விஷயங்களைத் தெளிவுபடுத்தியிருந்தேன். இந்த மகாநாட்டிற்குச் செல்லுவோர் முழு அரசியல் பிரச்சினையையும் எல்லா அம்சங்களிலும் பரிசீலனை செய்வதற்குப் பூரண உரிமையுடையவர்களென்பது ஒன்று. இந்தமகாநாடு செய்யும் முடிவை அஸ்திவாரமாகக்கொண்டு பிறகு பார்லிமெண்டின் முன் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பிரேரணைகளைக் கொண்டு வருவார்களென்பது இரண்டாவது விஷயம். காங்கிரஸ் தலைவர்களி

டத்திலிருந்து நீங்கள் பெற்றிருக்கும் கடிதத்தில் நீங்கள் வலுவில் மேற் போட்டுக்கொண்ட வேலைக்கு எவ்வித உதவியும் ஏற்படவில்லை யென்று நான் கருதுகிறேன். அந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கும் உணர்ச்சியின் போக்கையும் அதில் அடங்கியிருக்கும் விஷயங்களையும் கவனிக்கையிலும், காங்கிரஸ் கொள்கையினுல் தேசத்திற்கும் முக்கியமாக பொருளாதாரத்துறையிலும் ஏற்பட்டிருக்கும் கெடுதலை ஒப்புக்கொள்ள அது மறுத்திருப்பதைக் கவனிக்கையிலும், அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாக விவாதிப்பதால் எவ்விதப் பிரயோஜனமுமேற்படுமென்று நான் நினைக்கவில்லை. அந்தக்கடிதத்தில் கண்டுள்ள நிபந்தனைகளை அஸ்திவாரமாகக் கொண்டு விவாதிப்பதும் அசாத்தியமென்று நான் பட்டவர்த்தனமாகச் சொல்லி விட விரும்புகிறேன். நீங்கள் காங்கிரஸ் தலைவர்களை மறுபடியும் பார்க்க விரும்பினுல் இதை அவர்களுக்குத் தெளிவுப்படுத்தி விடுவீர்களென்று நான் நம்புகிறேன்.

ஆகஸ்டு மாதம் 16-ந்தேதி நீங்கள் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் கடைசி பாராவைப்பற்றி ஒரு வார்த்தை நான் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த விஷயங்களை நாம் விவாதித்தபொழுது சட்ட மறுப்பு இயக்கம் கிரியாம்சையில் கைவிட்டு விடப்பட்டு விடின் லாகூர் சதிவழக்கு சித்தாகாங் வழக்கு இவைகள் சம்பந்தமானவைகள் தவிர மற்ற அவசரச் சட்டங்கள் எவ்வித நிலைமையை உத்தேசித்து இயற்றப்பட்டனவோ அந்த நிலைமை இருந்து வராததலால், அந்த சட்டங்களை அமுலில் வைத்திருக்க நான் விரும்பமாட்டேனென்று நான் சொன்னதுடன், சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தி விடப்

படின் இந்த இயக்கத்திற்காக பலாத்காரமான காரியங் களைச் செய்யாத எல்லாக் கைதிகளையும் மாகாண கவர்ன் மெண்டுகள் விடுதலை செய்து விடுவது சாத்தியமென்று நினைக்கக் கூடுமென்று நான் உறுதிமொழி கொடுக்க முடியாதென்றும், இந்த விஷயத்தில் தாராள முறைகை யாளப்படவேண்டுமென்பதே எனது விருப்பமாயினும் ஒவ்வொரு கேஸையும் அதன் சந்தர்ப்பாசந்தர்ப்பங்களை ஒட்டி அனுதாபத்துடன் கவனிக்கும்படியே நான் மாகாண கவர்ன்மெண்டுகளுக்குச் சொல்லக்கூடுமென்றும் நான் தெளிவாகச் சொல்லியிருந்தேன். காங்கிரஸ் வாதிகள் சட்டமறுப்பை நிறுத்திவிட்டு சர்வகக்ஷி மகாநாட்டுக்கு வருவதாயின் அந்த மகாநாட்டில் காங்கிரஸ் மெஜாரிடி பிரதிநிதித்துவம் கேட்பதாக நான் நினைக்கவில்லையென்று தங்களிடம் சொன்னதாக எனக்கு ஞாபகம்.

காங்கிரஸுக்குப்போதிய பிரதிநிதித்துவம் கிடைக் கும்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய் வதில் கஷ்டமிராதென்று நான் நினைப்பதாக எனது அபிப் பிராயத்தைத் தெரிவித்ததாகவே எனக்கு ஞாபகமிருக் கிறது. அம்மாதிரியான நிலைமை ஏற்பட்டால் காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடமிருந்து அவர்களால் தகுதியான பிரதிநிதிகளெனக் கருதப்படுகின்றவர்களது ஜாப்தாவை ஏற்றுக்கொள்ளவும் நான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தேன். தாங்களும் என்னுடைய நிலைமையையும் எனது கவர்ன்மெண்டின் நிலைமையையும் தெளிவாகத்தங் களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று விரும்புவீர்கள் என்று நினைக்கின்றேன். தாங்கள் தங்களது முயற்சி வெற்றிகரமாக முடியுமென்று நம்பினீர்கள். அவை நிச்

சயம் வெற்றி பெறத் தகுதியுள்ளவை. ஆனால் தங்களது முயற்சி பலிக்காமல் போன சந்தர்ப்பங்களைப் பொதுஜனங்கள் பூரணமாகத் தெரிந்து கொள்ளும்படி செய்வதற்காகக் கூடிய சீக்கிரம் கடிதங்களை வெளியிடுவது விரும்பத்தக்கதாக இருக்கும்.

(ஒ) இர்வின்

காங்கிரஸ் தலைவர்கள் தங்களுடைய கடிதத்தில் குறிப்பாகச் சொல்லியிருந்த சில விஷயங்களைப்பற்றி அவர்கள் ராஜப்பிரதிநிதியுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்ததன் முடிவையும் தலைவர்களுக்குத் தெரிவிக்கும்படி ராஜப்பிரதிநிதி அவர்களுக்கு அனுமதி கொடுத்தார். ஆகஸ்டு 28-ந் தேதி யன்று அவர்கள் ஸிம்லாவை விட்டுப் புறப்பட்டு அலகபாத்தில் நெய்னி சிறைச்சாலையில் பண்டித மோதிலால் நேருவையும் ஜவஹர்லால் நேருவையும் டாக்டர் ஸையது முகம்மதுவையும் 30, 31-ந் தேதிகளில் கண்டு பேசினார்கள். ராஜப்பிரதிநிதியின் கடிதத்தை தலைவர்களுக்குக் காட்டினார்கள். அவருடன் தாங்கள் பேசிக்கொண்டிருந்ததன் முடிவையும் தெரியப்படுத்தினார்கள். காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்கு ஆகஸ்டு 15-ந்தேதி யன்று எழுதிய கடிதத்தில் சொல்லப்பட்டிருந்த விஷயங்களுக்கு ஆகஸ்டு 28-ந்தேதி யன்று ராஜப்பிரதிநிதி தங்களுக்கு எழுதிய கடிதத்தில் பதில் சொல்லப்ப்பட்டிருக்கவில்லை யாகையால் அவ்விஷயங்களைப்பற்றி அவருடன் நாங்கள் பேசிக்கொண்டிருந்ததன்மேல் அடியில் சொல்லப்படும் ஆதாரங்களின் மேல் ராஜி சாத்தியப்படுமென்று தாங்கள் நம்புவதாக அவர்களுக்கு அறிவித்தோம். அந்த ஆதாரங்களாவன.

(ஏ) அரசியல் ப்ரச்னையைப் பற்றின வரையில் ஆகஸ்டு 28-ந்தேதியன்று ராஜப்பிரதிநிதி எங்களுக்கு எழுதிய கடிதத்தில் இரண்டாவது பாராவில் சொல்லியிருந்த நான்கு முக்கியமான அம்சங்களை அனுசரித்து முடிவு செய்யப்படும்.

(பி) இந்தியா இஷ்டப்படும்போது ஏகாதிபத்யத்திலிருந்து பிரிந்துவிட பாத்தியமுடையது என்று ஸர்வ கட்சி மகாநாட்டில் வாதிக்கக் காந்திஜீ உரிமையுடையவராக இருக்கவேண்டுமென்ற விஷயமாக ராஜப்பிரதிநிதியின் கட்சியாவது—ஸர்வகட்சி மகாநாடு பூரா ஸ்வாதீனமுள்ளது. இதை ராஜப்பிரதிநிதி தமது கடிதத்தில் ஏற்கனவே சொல்லிவிட்டார். ஆகையால் யார் எந்தப் பிரச்சினையையும் அதில் கிளப்பலாம். ஆனல் இந்தப் பிரச்சினையை இப்பொழுது காந்திஜீ கிளப்புவது உசிதமாக இராதென்பது ராஜப்பிரதிநிதியின் அபிப்பிராயம். ஆனல் இந்தப்பிரேரணையை இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று காந்தி கேட்பாரானல், அவர்கள் அதற்குச் சம்மதப்பட முடியாது. ஆயினும் ஸர்வகட்சி மகாநாட்டில் இப்பிரச்சினையைக் கிளப்பக் காந்திஜீ விரும்புவாரானல் அவர் அப்படிச் செய்வார் என்பதை ராஜப்பிரதிநிதி இந்தியா மந்திரிக்கு அறிவித்து விடுவார்.

(ஸி) சில கடன்களைப் பற்றி சர்வகட்சி மகாநாட்டில் வாதங்கிளப்பக் காந்திஜிக்கு உரிமை யிருக்கவேண்டுமென்ற விஷயமாக ராஜப்பிரதிநிதியின் அபிப்பிராயமென்னவெனில், எல்லாக் கடன்களையும் மறுத்துவிட உத்தேசிக்கப்படும் எந்தப் பிரேரணையையும் ராஜப்பிரதிநிதி ஏற்றுக்கொள்ள முடியாது, ஆனல் இந்தியாவில் கடன்

பொறுப்புகளைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று சர்வ கட்சி மகாநாட்டில் கேட்கவிருக்கும் உரிமையுண்டென்று அவர் ஒப்புக் கொள்ளுகிறார்.

(டி) உப்புச் சட்டத்திலிருந்து ஜனங்களுக்கு நிவர்த்தி ஏற்படும்படிச் செய்யவேண்டுமென்ற கோரிக்கை விஷய மாக ராஜப்பிரதிநிதியின் அபிப்பிராயம் பின்வருமாறு :— உப்புச்சட்டம் விஷயமாகச் சைமன் கமிஷன் செய்துள்ள சிபார்சுகள் அங்கீகரிக்கப் படின் அந்தவரி மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு மாற் றப்படும். இப்பொழுதே வரி வருமானம் நஷ்டம் அடைந்ததாக இருக்கிறது. ஆகையால் இந்த ஆதாரத்தை விட்டு விடக் கவர்ன்மெண்டார் சம்மதப்படமுடியாது. ஆனால் இந்த வரியை ரத்துசெய்துவிட வேண்டுமென்று சட்டசபை பிரேரணை செய்து இந்த வருமானத்திற்கு ஈடு செய்ய வேறு யோசனை சொல்லுமானால் ராஜப்பிரதிநிதியும் கவர்ன்மெண்டாரும் அதைப்பற்றி யோசனை செய்வார்கள். ஆனால் சட்டமிருக்கிறவரையில் அதைமீறி பகிரங்க மாக நடப்பதை ராஜப்பிரதிநிதி மன்னிக்கமுடியாது. ஆனால் சமரஸ மேற்பட்டு விட்டபிறகு ஏழைகளின் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய ராஜப்பிரதிநிதியுடனும் கவர்ன்மெண்டு டனும் விவாதிக்க இந்தியத் தலைவர்கள் விரும்பினால் தலை வர்களை ஒரு மகாநாடாகக் கூட்டி யோசிக்க ராஜப்பிரதி நிதி சம்மதமுள்ளவர்.

(இ) மறியலைப்பற்றியோ வெனில் மறியல் எந்த வகுப்பாருக்காவது உபத்திரவமாக இருக்குமானால் அல் லது பயமுறுத்தல் மறியலுடன் சேர்த்துக்கொள்ளப் படுமானால் அப்படி பலாத்காரம் உபயோகிக்கப்படுமானால்

நேரக்கூடிய அவசரத்திற்குத் தக்கபடி சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள கவர்ன்மெண்டுக்கு உரிமை இருக்கும். இந்த நிபந்தனைக்குட்பட்டு ராஜி ஏற்பட்டு விடும்போது மறியலைத் தடுக்கும் அவசரச் சட்டம் ரத்து செய்யப்படும்.

(எப்) சட்ட மறுப்பியக்கத்தில் தங்களுடைய உத்தி யோகங்களை ராஜிநாமாச் செய்துவிட்டவர்களைப் பற்றின வரையில் இந்த விஷயம் மாகாண கவர்ன்மெண்டுகளைப் பொருத்தது. காலி ஸ்தானங்களுமிருந்து, கவர்ன்மெண் டுக்கு உண்மையாக இருந்தவர்களைத் தள்ளிவிடவேண்டா மலுமிருக்குமானால், அவஸரப்பட்டுக்கொண்டு ஒரு ஆவே சத்தில் தங்களுடைய உத்தியோகங்களை ராஜிநாமாச் செய்துவிட்டவர்களை மாகாண கவர்ன்மெண்டுகள் மறுபடி நியமித்துக் கொள்ளுவார்கள் என்று நம்பலாம்.

(ஜி) அச்சுச்சட்டத்தின்படி பறிமுதல் செய்யப்பட்ட அச்சியந்திரங்களைத் திருப்பிக் கொடுக்கும் விஷயமாக ஒரு சிரமமுமிராது.

(எச்) ரிவினியூ சட்டங்களின்படி வசூலான அபரா தங்களையும் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களையும் திருப்பிக் கொடுக்கும் விஷயமாக கவனித்துப் பதில் சொல்லவேண்டும். அந்தச் சட்டத்தின்படி பறிமுதல் செய்யப்பட்ட அல்லது விற்கப்பட்ட சொத்துக்களைப் பற்றி மூன்றுவது மனிதர்களுக்குப் பாத்தியமிருக்கலாம். மாகாண கவர்ன்மெண்டுகள் எல்லா விஷயங்களையும் கவ னித்துக் கூடுமானவரையில் ஒத்து வருவார்கள் என்று தான் ராஜப்பிரதிநிதி சொல்லக்கூடும்.

(ஐ) ராஜியக் கைதிகளை விடுதலை செய்துவிடவேண்டிய விஷயமாக ஜூலை 28-ந் தேதியன்று ராஜப்பிரதிநிதி எங்களுக்கு எழுதிய கடிதத்திலேயே பதில் சொல்லிவிட்டார்.

பண்டித மோதிலாலும் ஜவஹர்லாலும் டாக்டர் ஸையது முகம்மதும் எங்களுடன் பேசிக்கொண்டிருந்த போது மேற்சொன்ன வழிகளை யனுசரித்தே மேல்பேச்சு சாத்தியமென்பதை அவர்களுக்கு நாங்கள் தெளிவாகச் சொன்னோம். ஆனால் இந்த ஆதாரங்களின்மேல் ராஜி செய்துகொள்ள அவர்கள் மறுத்து காந்திஜிக்கு கீழ்க் கண்ட ஒரு கடிதத்தை எங்களிடம் கொடுத்தார்கள்.

பண்டிதர்களின் கடிதம்.

நைனி ஜெயில்,
31—8—30.

நாங்கள் ஸ்ரீமான் ஜெயகருடனும் ஸர் டேஜ்பகதூர் சாப்ரூவுடனும் பன்முறை சம்பாஷித்தோம். அவர்கள் ஆகஸ்ட் 28-ந் தேதியிட்டு லார்டு இர்வின் தங்களுக்கு எழுதிய கடிதத்தின் பிரதியை எங்களிடம் கொடுத்தார்கள். இந்தக் கடிதத்தில் நாம் ஆகஸ்ட் 15-ந் தேதி ஸர் சாப்ரூ, ஜெயகர் ஆகியவர்களுக்கு எழுதிய கூட்டுக் கடிதத்தில்கண்ட யோசனைகளை ஆதாரமாகக்கொண்டு விவாதிக்க முடியாதென்று தாம் கருதுவதாக லார்டு இர்வின் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். இந்நிலைமையில் அவர்களது முயற்சிகள் எவ்விதமான பலனையும் உண்டாக்கவில்லை என்று அவர் முடிவுக்கு வந்திருப்பது மிக்க சரியாகும். இந்தக் கூட்டுக் கடிதமானது அதில் கையொப்பமிடப்

பட்டவர்களால் தீர்க்காலோசனை செய்யப்பட்ட பின்பே எழுதப்பட்டது. அதில் கையொப்பமிட்டவர்கள் தங்களது தனிப்பட்ட ஹோதாவில் எவ்வளவுதூரம் செல்லத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை அக்கூட்டுக் கடிதம் காட்டுகின்றது. சில ஜீவாதாரமான நிபந்தனைகளை நிறைவேற்றினாலொழிய எந்தப் பரிகாரமும் திருப்திகரமாக இராதென்றும் நாம் தெரிவித்திருக்கிறோம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஜீவாதாரமான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான ஸ்டேட்மெண்ட் வெளியிட வேண்டுமென்றும் நாம் தெரிவித்திருக்கின்றோம். அத்தகைய அறிக்கையை வெளியிட்டால் நாங்கள் காரியக் கமிட்டிக்குச் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிடுவதன் உசிதத்தைப்பற்றிச் சிபார்சு செய்யத் தயாராக இருப்போம். ஆனால் அதேசமயத்தில் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நமது கடிதத்தில் கண்ட சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பூர்வாங்கங்கள் எல்லாம் திருப்திகரமாக முடிவுசெய்யப்பட்ட பிறகுதான் லண்டனில் கூட்ட உத்தேசித்துள்ள மகாநாட்டின் அமைப்பும் அதில் காங்கிரஸ் பிரசன்னமாக இருக்கும் விஷயமும் முடிவு செய்யப்பட முடியும். லார்டு இர்வின் இந்தப் பிரேரணைகளின்மேல் விவாதம் செய்வது கூட சாத்தியமற்றதென்று தமது கடிதத்தில் கருதுகின்றார். இந்நிலைமையில் நம்முள் பொதுவான ஆதாரமெதுவுமில்லை. அது இருக்கவும் முடியாது. கடிதத்தில் கண்ட விஷயங்களையும் அதன் தோரணையையும் ஒருபுறத்தில் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சமீபத்தில் செய்த காரியங்களி

லிருந்து அவர்கள் சமாதானத்திற்கு விருப்பமுள்ளவர்களாக இருப்பதைக் காட்டவில்லை என்பது தெரியும். டில்லி மாகாணத்தில் கார்யக்கமிட்டி கூட்டம் கூடுமென அறிவிக்கப்பட்டதும் அது சட்ட விரோதமான ஸ்தாபனமென்று பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் மெம்பர்களில் பெரும்பான்மையோர் கைது செய்யப்பட்டனர். இவற்ருல் கவர்ன்மெண்டார் சமாதானத்தை விரும்பவில்லை என்று பொருள் ஏற்படுமே யன்றி வேறெதுவும் ஏற்படாது. இவர்களைக் கைதி செய்ததையோ அன்றி பிறரைக் கைதி செய்ததையோ அன்றி கவர்ன்மெண்டின் இதர காரியங்களைப் பற்றியோ நாங்கள் எவ்விதப் புகாரும் செய்யவில்லை. கவர்ன்மெண்டின் காரியங்களில் சில இடங்களில் அநாகரிகம் வாய்ந்ததாயும் காட்டுமிராண்டித் தன்மை பொருந்தியதாகவும் இருப்பதாகக் கருதுகின்ருேம். நாங்கள் இச்செயல்களைச் சந்தோஷத்துடன் வரவேற்கிருேம். ஆனல் ஒருபுறம் சமாதான ஆசையுமிருப்பதற்கும் மற்ருெரு புறத்தில் சமாதானத்தை வழங்கவல்லதாயும் அதற்கான ராஜிப்பேச்சு நடத்தப்படுகின்றதாயுமுள்ள ஸ்தாபனத்தையே வலுவில் மேல்விழுந்து தாக்குவதற்கும் சற்றும் பொருத்தமாக இல்லை என்று நாங்கள் எடுத்துக்காட்டுவதை நியாயமானதென நாங்கள் கருதுகின்ருேம். இந்தியா முழுவதும் கார்யக்கமிட்டி சட்ட விரோதமான ஸ்தாபனமென அறிவிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் சட்டங்களைத் தடுக்க இந்தியா எங்கும் முயற்சி செய்யப்படுகிறது. இவற்ருல் தேசீயப்போராட்டம் எதுவரினும் வரட்டுமென்று நடக்கவேண்டியதுதான் என்று

அர்த்தமேற்படுகிறது. இந்தியரின் பிரதிநிதியாக இருக்க அதிகாரம் பெற்றவர்களெல்லாம் இந்தியா வெங்குமுள்ள பிரிட்டிஷ் சிறைகளில் அடைக்கப்படுவார்களாதலால் சமா தான மேற்படுவது சாத்தியமில்லை என்றும் இதனுல் அர்த்தமேற்படுகிறது. லார்டு இர்வினின் கடிதமும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்ட நடவடிக் கைகளும், ஸர் டேஜ்பகதூர் சாப்ருவும் ஸ்ரீமான் ஜெய கரும் செய்த முயற்சிகளை வீணுனவை என்று தெளிவாகக் காட்டிவிட்டன. லார்டு இர்வினின் கடிதமும் அதற்கு நம்மிடம்செய்த சில வியாக்கியானங்களும் சில அம்ஸங் களில் நம்மை முன் எடுத்துக்கொண்ட நிலைமையிலிருந்து பின்னடையச் செய்கின்றன. நமது நிலைக்கும் லார்டு இர்வினின் நிலைக்கும் மிகுந்த பேதமிருப்பதால் (அதாவது மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதம்போல இருப்பதால்) விவரங்களைப்பற்றி ஆராயவேண்டிய அவசியமே இல்லை. ஆனுல் நாங்கள் தங்களுக்கு அவருடைய கடிதத்தின் சில அம்சங்களை எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். லார்டு இர்வினின் கடிதத்தின் முதல் பாகமானது இந்தியா சட்ட சபையில் அவர் செய்த பிரசங்கத்தையும் ஜூலை 16-ந் தேதியன்று அவர் ஸ்ரீமான் ஜெயகருக்கும் ஸர் டேஜ் பகதூர் சாப்ருவுக்கும் எழுதிய கடிதத்தில் உபயோகப் படுத்திய சொற்றொடர்களையும் பெரிதும் திரும்பக் கூறு கின்றது. நமது கூட்டுக் கடிதத்தில் நாம் எடுத்துக்காட் டியபடி இந்த சொற்றொடர்கள் மிக்க விளக்கமற்றவையாக இருப்பதால் இதனை மதிப்பிட நம்மால் இயலவில்லை: இதற்கு எதை வேண்டுமானுலும் பொருளாக வருவிக்க முடியும். அல்லது இதற்கு அர்த்தமே கிடையாதென்றும்

வியாக்யானம் செய்யப்படலாம். நமது கூட்டுக் கடிதத்தில் பூரணமான தேசீய கவர்ன்மெண்ட் இந்தியாவிலுள்ளவர்களுக்குப் பொறுப்பாக இருக்கவேண்டுமென்றும் அதற்குப் படைகள் விஷயத்திலும் இந்தியாவின் பொருளாதார விஷயத்திலும் ஆதிக்கம் இருக்கவேண்டுமென்றும் இதுவே இந்தியா உடனே பெற விரும்பும் கோரிக்கை என்றும் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறோம். வழக்கமாகப் பாதுகாப்புகள் என்று அழைக்கப்படுகின்றவற்றைப் பற்றியோ அன்றி எவ்விதமான தாமதத்தைப்பற்றியுமே அதில் பிரஸ்தாபமே இல்லை. அதிகாரத்தை மாற்றுவது சம்பந்தமாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துக்கொள்ள வேண்டியதவசியமாக இருக்கும். இவை சம்பந்தமாக இந்தியாவின் பிரதிநிதிகளே இவற்றை நிர்ணயிக்கவேண்டு மென்றும் நாம் குறிப்பிட்டிருக்கிறோம்.

பிரிந்துபோகும் உரிமை

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து இஷ்டப்பட்டால் இந்தியா பிரிந்துபோகப் பெற்றிருக்கும் உரிமை சம்பந்தமாகவும், பிரிட்டிஷ் கோரிக்கைகளையும் அவர்களது அனுகூலங்களையும் சுயேச்சைவாய்ந்த விசாரணைச் சபையாரால் முடிவு செய்யப்படும்படி விட இந்தியாவுக்கு இருக்கும் உரிமை சம்பந்தமாகவும் நமக்குச் சொல்லுவதெல்லாம் மகாநாடு சுயேச்சை உள்ளதாக இருக்கு மென்பதும் அங்கு எந்த விஷயத்தைவேண்டுமானாலும், கிளப்பலா மென்பதும்தான். முன் சொன்னவற்றை விட இதில் இராஜப்பிரதிநிதி அதிகப்படியாக எதுவும் சொல்லவில்லை. முன் பிரச்சினையைக் கிளப்பக்கூடிய நிலைமை இந்

தியாவிலுள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குத் திட்டமாக ஏற்பட்டால் இதை பகிரங்கமான விஷயமாகப் பாவிக்கக்கூடாதென லார்டு இர்வின் சொல்லுவாரென்றும் நமக்குக் கூறப்படுகின்றது. மகாநாட்டில் இந்தப் பிரச்சினையை நாம் கிளப்ப உத்தேசித்திருப்பதை இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரியப் படுத்தத்தான் அவர்களால் கூடுமாம்.

மற்றப் பிரேரணைகள் சம்பந்தமாக சில தனிப்பட்ட பணலேவாதேவிகளைத்தான் பரிசீலனைக் குட்படுத்த லார்டு இர்வினுல் அனுமதிக்க முடியுமென நமக்குக் கூறப்படுகிறது. தனிப்பட்ட இனங்களில் இம்மாதிரியான பரிசீலனையை நடத்தலாமென்றால் இந்தியாவின் ராஜாங்கக் கடனென்று அழைக்கப்படும் பிரச்சனை உட்பட பிரிட்டிஷார் பாத்தியதைகோரும் சகல விஷயங்களையும் பரிசீலனைசெய்ய முடியும். இந்த இரண்டு பிரச்சனைகளும் முக்கியமானவை என்று நாங்கள் கருதுகிறோம். நமது கூட்டுக் கடிதத்தில் கண்ட முன் உடன்பாடு நமக்கு மிக்க அத்தியாவசியமென எங்களுக்குப் படுகிறது.

ராஜீயச்சிறையாளர் விடுதலை

ராஜீயச்சிறையாளர் விஷயமாக லார்டு இர்வின் பிரஸ்தாபித்திருப்பது மிக்க அதிருப்தியாக விருக்கிறது. பலாத்காரமற்ற சட்ட சாத்வீக மறுப்பு கைதிகள் யாவரையும் விடுவதாகக்கூட அவர் உறுதி கூறவில்லை. அவர் இதுவிஷயத்தை மாகாணக் கவர்ன்மெண்டுகளிடம் விட்டுவிடவே உத்தேசித்திருக்கிறார். இவ்விஷயத்தில் நாங்கள் மாகாணக் கவர்ன்மெண்டுகளையோ மாகாணங்களிலுள்ள

உத்தியோகஸ்தர்களேயோ நம்பமுடியாது. அதோடு லார்டு இர்வினின் கடிதத்தில் மற்ற பலாத்காரமற்ற சிறையாளர்களைப்பற்றி ஒரு பிரஸ்தாபமும் காணேம். சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பமாகுமுன்பே காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோரும் பிறரும் வேறு ராஜீய குற்றங்களுக்காகச் சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இச் சந்தர்ப்பத்தில் மீரத் சதிவழக்கு எதிரிகளைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேம். அவர்கள் விசாரணையிலிருக்கும் கைதிகளாகவே ஒன்றரை வருஷத்தைக் கழித்துவிட்டனர். நாம் எழுதிய கடிதத்தில் இத்தகைய கைதிகளையும் விடுவிக்கவேண்டுமெனத் திட்டமாக எழுதியிருந்தோம். லாகூர் சதிவழக்கு அவசரச் சட்டம் வங்காள அவசரச் சட்டம் ஆகியவைகளின் விஷயத்தில் இராஜப்பிரதிநிதி சொல்வதுபோல அவைகளுக்கு மட்டும் ஆதரவாக விலக்கு காட்ட நாங்கள் சம்மதிக்க மாட்டோம். பலாத்கார குற்றஞ் சாட்டப்பட்ட ராஜீயச் சிறையாளர்களை விடுவிக்கும்படி நாங்கள் கேட்கவில்லை. அவர்கள் விடுதலையாவதை நாங்கள் விரும்பவில்லையென நினைக்கக்கூடாது. ஆனல் எங்களுடைய இயக்கம் பூரண அஹிம்ஸையே அடிப்படையாகக் கொண்டிருந்ததால் அந்தக் கொள்கையோடு எதையும் சேர்த்து நாங்கள் குழப்ப விரும்பவில்லை.

அவர்களைப்பற்றி நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் அவர்களை அவசரச் சட்டபடி ஏற்பட்ட அசாதாரண கோர்ட்டுகளில் விசாரிக்காமல் சாதாரண கோர்ட்டுகளிலேயே விசாரிக்க வேண்டுமென்பதே அவசரச் சட்டப்படி ஏற்படும் கோர்ட்டுகளில் விசாரித்தால் அவர்களுக்கு அப்பீல் செய்துகொள்ள உரிமையில்லாது போகிறது. எதிரி

களுக்குள்ள சாதாரண உரிமைகளும் இல்லாமல் போய்விடுகின்றன. கோர்ட்டில் பஹிரங்கமாக எதிரிகளை அடிப்பதாகவும் தெரிவதால் சாதாரணக் கோர்ட்டு களிலேயே அவர்களை விசாரிக்க வேண்டியது அவசிய மாகும். சில எதிரிகள் தங்களை நடத்தும் விதம் சாரியாகவில்லாமையால் அதைக் கண்டிப்பதற்கு அறி குறியாக பலநாள் உண்ணுவிரத மிருந்துவருவதாகவும் அவர்கள் சாகும் தருவாயில் இருப்பதாகவும் கேள்விப்படு கிறோம். வங்காள அவசரச் சட்டத்துக்குப் பதிலாக சட்ட சபை மூலமாகவே ஒரு சட்டம் தயாரிக்கப்பட்டாகி விட் டது. இந்த அவசரச் சட்டங்களும் இவற்றை யொட்டி செய்யப்படும் சட்டங்களும் ஆக்ஷேபகரமானவையென் பது எங்கள் அபிப்பிராயம். வங்காள சட்டசபை ஜனப் பிரதிநிதித்துவ மற்றிருக்கும் இச் சமயத்தில் அச் சட் டத்தை நிறைவேற்றி விட்டதால் விசேஷம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை.

மறியல்

சீமை ஜவுளிக்கடைகளையும் சாராயக் கடைகளையும் தொடர்ந்து மறியல்செய்யும் விஷயத்தில் லார்டு இர்வின் தற்போது மறியலைத் தடுக்கப் பிறப்பித்த அவசரச் சட் டத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ள சம்மதிக்கிறாராலும் அவசியமானல் மீண்டும் மறியலை எதிர்க்க சட்டபடி தமக் குள்ள அதிகாரத்தை பிரயோகிப்பதாக கூறுகிறார். இத னல் அவர் மீண்டும் அவசரச்சட்டம் பிறப்பிக்க விரும்புவ தாகவும் அவசியமானபோது ஸிம்லாவில் ஏதாவது செய் யவும் விரும்புவதாகவும் தெரிகிறது.

உப்புச் சட்டம்

நமது கடிதத்தில் உப்புச் சட்ட விஷயமாகவும் மற்றும் சில விஷயங்களைப்பற்றியும் பிரஸ்தாபித்திருப்பதற்கு அளிக்கப்பட்டிருக்கும் பதிலும் மிக்க அதிருப்தியாக விருக்கிறது. உப்பைப்பற்றிய விஷயங்களில் தாங்கள் நிபுணராக விருப்பதால் அதைப்பற்றி நாங்கள் தங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

இவ்விஷயங்களைப்பற்றி நமது முன்னைய நிலைமையை மாற்றிக்கொள்வதற்கு ஒரு காரணமும் ஏற்படவில்லை யென்றுமட்டுமே சொல்ல விரும்புகிறோம்.

நமது கடிதத்தில் கண்ட பெரும் பகுதியான விஷயங்களை அங்கீகரிக்க லார்டு இர்வின் மறுத்துவிட்டார். சில்லரை விஷயங்களிலும் பலவற்றை அவர் நிராகரித்து விட்டார். அவரது மனப்பான்மைக்கும் நமது மனப்பான்மைக்கும் விசேஷ வித்தியாச மிருக்கிறது. இந்த அறிக்கையைத் தாங்கள் ஸ்ரீமதி சரோஜினி சர்தார் படேல் ஸ்ரீமான் ஜெயராமதாஸ் தௌலத்ராம் ஆகியவர்களுக்குக் காண்பித்து அவர்களுடன் கலந்து டாக்டர் சாப்ருவுக்கும் ஸ்ரீமான் ஜெயகருக்கும் பதில் அளிப்பீர்கள் என நம்புகிறோம். இனி நமக்குள் நடந்த கடிதப் போக்குவரத்தை வெளியிடாமல் தாமதப் படுத்தக்கூடாது. பொதுஜனங்களை அந்தகாரத்தில் விட்டிருப்பதும் நியாயமன்று. இவற்றை வெளியிடுவதோடு எல்லா கடிதங்களின் நகல்களையும் அவை சம்பந்தமான மற்ற தஸ்தாவேஜுகளையும் காங்கிரஸ் ஆக்டிங் பிரசிடெண்டான சௌரிகலிக் கஸமானுக்கு அனுப்பும்படியும் நாங்கள் டாக்டர் சாப்ரூ

வையும் ஸ்ரீமான் ஜெயகரையும் வேண்டிக் கொண்டிருக்கிறோம். காரியக்கமிட்டி வேலைசெய்து வருவதால் அதற்குத் தகவல் உடனே அறிவிக்காமல் நாம் ஒரு ஏற்பாடும் செய்யக்கூடா தென்றே நாங்கள் நினைக்கின்றோம்.

(ஒப்பம்) மோதிலால்
„ சையத் முகமது
„ ஜவஹர்லால்

நாங்கள் அப்படியே காந்திஜியையும், இதர காங்கிரஸ் தலைவர்களையும் யரவாடா சிறையில் செப்டம்பர் 3, 4-ந் தேதிகளில் போய்ப் பார்த்து, மேற்குறித்த கடிதத்தை அவர்களிடம் கொடுத்து, பூராவிஷயத்தையும் அவர்களோடு விவாதித்தோம். இச் சம்பாஷணைகளின் முடிவில் அவர்கள் பின் கண்ட ஸ்டேட்மெண்டை எங்களுக்குக் கொடுத்தனர்:—

காந்திஜீயின் கடைசிக் கடிதம்

யரவாடா,
மத்திய சிறைச்சாலை,
5—9—30.

எமது அன்பார்ந்த நண்பர்களுக்கு,

28-8-30-ந் தேதியிட்டு ராஜப்பிரதிநிதி உங்களுக்கு எழுதிய கடிதத்தை ஜாக்கிரதையாக வாசித்துப் பார்த்தோம். அந்தக் கடிதத்தில் காணாது விட்ட அம்சங்களைப்பற்றி உங்களுக்கும் ராஜப்பிரதிநிதிக்கும் நடந்த சம்பாஷணைகளையும் நீங்கள் பிரத்தியேகமாக குறிப்பெடுத்து அனுப்பியிருப்பதையும் வாசித்துப் பார்த்தோம். பண்டித மோதி

லால் நேரு, டாக்டர் சையது முகமது, பண்டித ஜவஹர் லால் நேரு இவர்கள் உங்கள் மூலமாய் எழுதி யனுப்பிய குறிப்புகளையும் ஜாக்கிரதையாக கவனித்தோம். மேற் குறித்த கடிதம், சம்பாஷணைகள் ஆகிய இரண்டையுங் குறித்து அவர்களுடைய தீர்மானமான அபிப்பிராயத்தை அவர்களது குறிப்பிலிருந்து தெரிந்து கொண்டோம். இரண்டுநாள் பூராவும் இவைகளை நாங்கள் பரிசீலனைசெய்த தோடு, உங்களோடும் தாராளமாக அதுபற்றி விவாதித் தோம். எங்களுக்கு வெளியே நடப்பது தெரியா தாகை யால், காங்கிரஸின் சார்பாக எந்த அளவுக்கு நாங்கள் பேசலாமோ அந்த அளவுக்கு எங்கள் முடிவு என்னவென் ருல், இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையும் கவர்ன் மெண்டும் ஒத்துப்போக மார்க்கமில்லை. இதுதான் எங்க ளுடைய திடமான முடிவு. நைனி சிறைச்சாலையிலுள்ள பிரபலக் கைதிகளின் குறிப்பில்கண்ட அபிப்பிராயத்தை நாங்கள் பூரணமாக ஆதரிக்கிறோம். ஆனுலும் உங்க ளுடைய காலத்தையும் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் 2 மாத காலமாக நீங்கள் தேசாபிமானத்துடன் ராஜிப் பேச்சு நடத்தி வந்திருப்பதில் முடிவான நிலைமை இன்ன தென்று எங்களுடைய சொந்த வாசகத்தில் எங்கள் கரு த்தை தெரிவிக்கும்படி இந் நண்பர்கள் கேட்பதால் சமா தானத்திற்கு தடைக்கல்லா யிருந்தவற்றைக் குறித்து இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறோம்.

16-7-30-ந்தேதி யிட்ட ராஜப்பிரதிநிதியின் கடிதமா னது, மிஸ்டர் ஸ்லோகோம்புக்கு பண்டித நேரு கூறிய நிபந்தனைகள் விஷயத்தில், அவர் இவ்வளவு தூரந்தான் போக தயார் என்பதை காட்டுகிறது. ஆனுல் ஸ்லோ

கோம்விடம் தெரிவித்த நிபந்தனைகளைக் கொஞ்சமும் பூர்த்தி செய்வதாக ராஜப்பிரதிநிதியின் கடிதம் இல்லை. பண்டித நேரு ஸ்லோகோம்மிடம் பேசிக் கொண்டிருந்த போது "ஸர்வகட்சி மகாநாட்டின் வேலை விவரத்தைச் சொல்லாமல் வெறுமே எங்களை அங்கு வரச்சொல்லி குடியேற்றநாட்டு ஆட்சிக்குரிய வாதங்களைச் சொல்லும்படி கேட்பதாயிருந்தால் நாங்கள் வரமுடியாது; இந்தியாவின் பிரத்தியேகத் தேவைகளையும் நிலைமையையும் நமது பழைய சம்பந்தத்தையும் பொறுத்து எந்த அளவுக்கு பரஸ்பரசம்பந்தங்களை வரையறுத்துக் கொள்ளலாமோ அதைச் செய்வதற்குட்பட்டு சுதந்தர இந்தியாவுக்கு வேண்டிய அரசியலை மகாநாட்டில் நிர்ணயிப்பதாகத் தெளிவாய்த் தெரிந்தால், மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி காங்கிரஸுக்கு சிபார்சு செய்வேன்; எங்கள் வீட்டில் நாங்களே எஜமானர்களாயிருக்கவேண்டும்; ஆனால் பிரிட்டிஷ் நிர்வாகிகளிடமிருந்து ஜவாப்தாரியான ஓர் இந்திய கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் மாறுவதற்கு அவசியமாயிருக்கக்கூடிய மத்திய காலவிஷயத்தில் நியாயமான நிபந்தனைகளுக்கு நாங்கள் கட்டுப்படுவோம்; சம சுதந்தரத்துடன் இரு ஜாதியார் பரஸ்பரம் கூடி மேற்குறித்த நிபந்தனைகளைப் பற்றி ஆலோசிக்கும் மகாநாடாகவே ஸர்வகட்சி மகாநாடு இருக்கவேண்டும்" என்று பண்டித நேருசொன்னார். அதையொட்டி ராஜப்பிரதிநிதி தமது கடிதத்தில் என்ன சொல்லியிருக்கிறார்? "இந்தியர் தற்சமயம் பொறுப்பேற்கக் கூடாத நிலையிலிருக்கிற விஷயங்களில் அவசியமான ஏற்பாடுசெய்துவிட்டு, அவர்களுடைய சொந்த விஷயங்களில் அவர்களுக்கு எவ்வளவு

தூரம் நிர்வாக அதிகாரம் கிடைக்கச் செய்யலாமோ அது கிடைக்கும்படி உதவி செய்ய நானும் பிரிட்டிஷ் கவர்ன் மெண்டும் கூடுமானதைச் செய்வோம். எனது கவர்ன் மெண்டின் விருப்பமும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் விருப்பமும் அதுதான் என்பதில் சந்தேகமில்லை. தற் சமயம் இந்தியர் பொறுப்பேற்கக் கூடாத நிலைமையி லுள்ளவிஷயங்கள் இன்னவென்றும், அவைகளுக்கு என்ன ஏற்பாடு செய்வதென்றும், மகாநாட்டில் கவனிக்கப்படும்; ஆனால் பரஸ்பரம் நம்பிக்கையுடன் இரு தரத்தாரும் உழைத்தால் ஒற்றுமை ஏற்படாமலிராது'' என்று குறிப் பிட்டிருக்கிறார்.

இதிலிருந்து பண்டிதரின் நிபந்தனைகளுக்கும் ராஜப் பிரதிநிதி கூறுவதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருப்ப தாக எங்களுக்குத் தோன்றுகிறது. ஸர்வ கக்ஷி மகா நாட்டின் பயனாக ஒரு சுதந்தர இந்தியா ஏற்படுமென்றும் மனதில் வைத்துக்கொண்டு பண்டிதர் பேசுகிறார். ராஜப் பிரதிநிதியோ, எந்த அளவுக்கு நிர்வாகத்தை அதிகமாக இந்தியரிடம் கொடுக்கலாமென்ற விஷயத்தில் உதவிபுரிவ தாகக் கூறினார். ஏதோ சில திருத்தங்கள் மற்றும் எதிர் பார்க்கப்படலாமென்று ராஜப் பிரதிநிதியின் கடிதத்தி லிருந்து புலப்படுகிறது. ஏற்கெனவே எங்களுடைய 15-8-30ந்தேதி கடிதத்தில்நாங்கள் காங்கிரசுக்கு எடுத்தது திருப்தியளிக்காது என்று கூறினோம். இப்போது நீங்கள் கொண்டுவந்திருக்கும் கடிதத்திலும் ராஜப்பிரதிநிதி தமது ஆதி நிலைமையிலிருந்து மாறவில்லை. எங்களுடைய கடிதத் தைக் கேவலமாகக் கருதி ராஜப்பிரதிநிதி புறக்கணித்து விட்டாரென்றே நாங்கள் வருத்தத்துடன் கூறவேண்டி

யிருக்கிறது. எங்கள் யோசனைகளை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு விவாதிப்பது சாத்தியமில்லை யென்று அவர் திட்டமாகக் கருதுவது வெளிப்பட்டுவிட்டது. மேலும் "இந்தியா இஷ்டப்பட்டால் பிரிட்டிஷ் சம்பந்தத்தை வைத்துக்கொள்ளலாம். வேண்டாவிட்டால் அறுத்துக்கொள்ள உரிமை கொடுக்கவேண்டும்" என்று நேரடியாகக் கேட்டால், அந்த ப்ரச்னை எழுதுவதற்கே இந்தியா கவர்ன்மெண்டார் உடன்பட மாட்டார்கள் என்று நீங்கள் எங்களிடம் ராஜப்பிரதிநிதியின் கருத்தை தெரிவித்துவிட்டீர்கள் ஆனால் எங்களுடைய அபிப்பிராயத்தில் எந்தமாதிரி அரசியல் தயாரித்தலும், மேற்குறித்த விஷயம் அதில் முக்கியமாகக் கண்டிருக்கவேண்டும். இந்தியாவுக்கு பூரண ஜவாப்தாரியான ஆட்சியோ, அல்லது பூரா சுய ஆட்சியோ அல்லது வேறெவ்வித ஆட்சியோ கிடைப்பதாயிருந்தாலும், அது பரஸ்பரம் விலக்கிக்கொள்ள (அதாவது சம்பந்தத்தை அறுத்துக் கொள்வதற்கு) உரிமையுடன் கூடியதாயிருக்கவேண்டிய தவசியம். ஏகாதிபத்தியத்தின் ஓர் பகுதியாக இந்தியா இராமல், சம அந்தஸ்துடன் கூடிய ஒரு பாகஸ்தராயிருக்க வேண்டுமானால், அந்த ஏகாதிபத்தியத்தின் உறவு நமக்கவசியம் என்ற உணர்ச்சியும் அபிமானமும் தானாக இந்தியருக்கு ஏற்பட வேண்டும். இந்த அம்சத்தை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டோ பிரிட்டிஷ் மகா ஜனங்களோ அசாத்தியமென்று கருதும் பட்சத்தில், காங்கிரஸ் மகாசபை விடுதலைப் போராட்டத்தை மேலே நடத்த வேண்டியதுதான்.

உப்புவரி விஷயமாக நாங்கள் கூறிய சாமான்ய யோசனையைக் குறித்து ராஜப்பிரதிநிதி யனுஷ்டித்துள்ள

பான்மை கவர்ன்மெண்டின் உண்மை மனப்பான்மையை நாம் வருந்தும்படி நமக்கு அறிவுருத்துகிறது. ஸிம்லாவின் உச்சியிலிருந்துகொண்டு இந்தியாவை ஆட்சிபுரிபவர்கள் கீழே பட்டினிகிடந்துவரும் கோடிக்கணக்கான ஜனங்களின் கஷ்டங்களை அறியவாவது அல்லது பாராட்டவாவதில்லை யென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகவிருக்கிறது. இவ்விதம் ஆகாசத்தினின்று கவர்ன்மெண்டார் ஆட்சிபுரிவது இந்த ஏழைமக்களின் ஓயாத உழைப்பினுல்தான் சாத்தியமாகிறது. இயற்கையில் காத்துக்கு அடுத்தபடியாக ஏழைகளுக்கு அவசியமாகவுள்ள இந்த உப்பு விஷயத்தில் கவர்ன்மெண்டார் ஸர்வாதிக்கியம் பெற்றிருப்பது முற்றிலும் ஒழுக்கமற்றதென்பதை சென்ற ஐந்து மாதங்களில் நிரபராதிகளான ஜனங்களின் ரத்தத்தைச் சிந்திய பின்கூட கவர்ன்மெண்டார் அறிந்துகொள்ளாமலிருக்கும்பொழுது இந்தியத் தலைவர்கள் ஒரு மகாநாட்டில் கூடிவிடுவதனுல் மாத்திரம் அவர்கள் உணரும்படிச் செய்துவிட முடியாது. இந்த உப்புவரியை ரத்து செய்யவேண்டுமென்று கூறுபவர்கள் பதில் வருமானத்திற்கு வழிகாட்டவேண்டுமென்று கூறுவது எரிகிற தீயை ஏறத் தள்ளுவதுபோலவேயிருக்கிறது இதிலிருந்து கவர்ன்மெண்டார் மிகவும் ஏராளமாகச்செய்யப்படும் செலவை சாத்தியமானுல் காலம் முடியும்வரையில் அப்படியே அவர்கள் செய்துவர உத்தேசித்திருக்கின்றனரென்ற மனோபாவத்தையே இது காட்டுகிறது. ஜன விருப்பத்திற்கு ஒத்ததாக வில்லாமலும் அல்லது வேறு காரணங்களினுலும் ரத்து செய்யப்படக்கூடாமலும் இருக்கும் சட்டங்களை மீறுவதை இங்குமாத்திரமல்ல உலகிலுள்ள எல்லா கவர்ன்

மெண்டுகளும் அனுமதித்துவிடுகின்றன. ராஜப்பிரதிநிதி நாங்கள் கூறியுள்ள இன்னும் பல முக்கிய விஷயங்களில் தகுந்த முன்னேற்ற முண்டுபண்ண முன்வரவில்லை யென்பதை இங்கு விவரிக்கத் தேவையில்லை. போதுமான வளவு முக்கிய விஷயங்களை வெளியிட்டு அவற்றில் கவர்ன்மெண்டையும் காங்கிரஸையும் சமரஸப் படுத்தக்கூடாத பெரும் வித்தியாசமிருக்கிறதென்பதை நாங்கள் தெளிவு படுத்திவிட்டோம். இருந்தாலும் சமரஸப்பேச்சு முறிந்து போனதுபோல தோன்றுவதனுல் ஏமாற்றமேற்படுதற்கு எவ்வித அவசியமுமில்லை. காங்கிரஸ் சுதந்திரத்திற்காக உறுதியான போராட்டத்தில் இறங்கியிருக்கிறது. ஆட்சி புரிபவர்கள் அறியாத ஒரு புதிய ஆயுதத்தைத் தேசம் இப்பொழுது இதில் கைக்கொண்டிருப்பதனுல் அதன் தன்மையை அதிகாரிகள் அறிய இன்னும் காலம் பிடிக்கலாம். சில மாதகாலத் தியாகம் அவர்கள் மனதைத்திருப்பாததுபற்றி நாங்கள் ஆச்சரியப்படவில்லை. யார் எந்த உரிமை பெற்றிருந்தாலும் அந்த உரிமையைக்கெடுக்க காங்கிரஸ் விரும்பவேயில்லை. ஆங்கிலேயர் என்ற காரணத்திற்காக அவர்களுடன் காங்கிரஸ் சண்டையிட உத்தேசிக்கவில்லை ஆனுல் சகிக்கக்கூடாத பிரிட்டிஷ் ஆதிக்கியத்தை தனது ஆத்ம சக்தி அனைத்தையும் கொண்டு இந்தியா வெறுக்கிறதென்பதில் சிறிதும் சந்தேகமில்லை கடைசிவரையில் அஹிம்சா தர்மம் அவலம்பிக்கப்படும்வரையில் தேசிய அபிலாஷை நிறைவேறுவதில் சந்தேகமெதுவுமில்லை. அதிகாரிகள் சட்ட மறுப்பு இயக்கத்தைப்பற்றி கடுமையாகவும் அவமதிப்பாகவும் கூறியிருந்தும் நாங்கள் இதைத் திரும்பக் கூறுகிறேம்.

கடைசியாக சமாதான முண்டுபண்ண நீங்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக உங்களுக்கு மீண்டும் நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். காங்கிரஸ் ஸ்தாபனத்தை நடத்தி வருபவர்களுடன் சமரஸப் பேச்சு நடத்தக்கூடிய காலம் இன்னும் வரவில்லை யென நாங்கள் தெரிவித்துக் கொள்ளுகிறோம். கைதிகள் என்ற தோரணையில் நாங்கள் பல இடையூறுகளுக்குட்பட்டிருக்கவேண்டியிருக்கிறது. எங்கள் அபிப்பிராயமெல்லாம் மூன்றாவதவர் கூறும் விவரங்களைக்கொண்டு ஏற்பட்டதாகும். ஆகவே அது தப்பாகவிருக்கவும் இடமேற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஸ்தாபனத்தை நடத்துபவர்கள் எங்களில் யாரையாவது பார்க்க இடமிருக்கவேண்டும். அவ்வித மேற்பட்டு கவர்ன்மெண்டாரே சமாதான முண்டுபண்ண அக்கரை கொள்ளும்பக்ஷத்தில் எங்களைக் கண்டுபேசுவதில் அவர்களுக்கு எவ்விதக் கஷ்டமுமிருப்பதற்கில்லை.

(ஒப்பம்) எம். கே. காந்தி
ஸரோஜனி நாயுடு
வல்லபாய் படேல்
ஜெயராம் தாஸ்
தௌலத்ராம்

பொது ஜனங்கள் அறியவேண்டி இம் முக்கியவிஷயங்களையும் கடிதங்களையும் வெளியிடுவதுடன் அவர்கள் திருப்தி படுகிறார்கள். மத்தியஸ்தரென்ற ஹோதாவில் தங்கள் கடமைகளை யநுசரித்து இதில் அவர்கள் அபிப்பிராயமல்லது ஊகமெதையும் அவர்கள் சேர்க்கவில்லை. மேலே வெளியிடப்பட்டுள்ள தஸ்தாவேஜுகளை வெளியிடுவதில் ராஜப்பிரதிநிதியினுடையவும் சம்மதியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

Kesari Printing Works, Madras.